# ஈமானிய கடமைகள்

தமிழில்

அப்துல் கபூர் முஹம்மது ஜலீல்

**أركان الإيمان باللغة التاميلية**

ⓗ الجامعة الإسلاميّة، 1424هـ
*فهرس مكتبة الملك فهد الوطنيّة أثناء النشر*
*مجموعة من الباحثين بعمادة البحث العلمي*
*المدينة المنورة 1424هـ*
*أركان الإيمان / مترجم إلى اللغة التاميلية*
ترجمه إلى اللغة التاميلية/ عبد الغفور محمد جليل
142ص، 24×17 سم
ردمك: 4- 402 -9960
(النص بالتاميلية)
1-أركان الإسلام 2- أركان الإيمان (الإسلام) العنوان
ديوي 240 1424/1559

رقم الإيداع: 1424/1559
ردمك : 4- 402-02-9960

# முன்னுரை

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்
அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கின்றேன் ..

புகழனைத்தும் ஒரே இறைவனான அல்லாஹ்வுக்கே உரித்தாகட்டும் . ஸலவாத்தும் ஸலாமும் இறுதி நபியாகிய முஹம்மது நபி ( ஸல்) அவர்களுக்கு உண்டாவதாக .

இஸ்லாமியக் கல்வியைப் பொறுத்த வரை அதனை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதன் மூலமே மக்கள் இஸ்லாத்தை அதன் உன்மை வடிவில் அறிய முடியும் . ஏனைனில் மக்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்வதிலும் அதன் போதனைகளுக்கேற்ப வாழ்வதிலும் , மக்கள் மத்தியில் மிகப் பெரிய இஸ்லாமிய எழுச்சி ஏற்பட்டிருப்பதிலும் இஸ்லாமிய த.:.வாப் பணி மிகப் பெரிய பங்களிப்பைச் செய்துள்ளது.

இந்த இலட்சியத்தை செவ்வனே நிறைவேற்றும் நோக்கிலேயே மதீனாஇஸ்லாமியப் பல்கலைக்கழகம் இலவச இஸ்லாமியக் கல்வி , இஸ்லாமிய அழைப்புப் பணி போன்றனவற்றை பல ஆண்டுகாலமாக தொடர்ந்து வருகின்றது . இதற்காக பல்கலைக் கழகத்தின் “ இஸ்லாமிய கல்வி ஆய்வு மையம் “ பல்வேறு வெற்றிகரமான அறிவியல் திட்டங்களைத் தயாரித்து செயற்பட்டு வருகின்றது . அந்த வகையில் இஸ்லாத்தின் கொள்கை , அதன் அழகிய முற்போக்கு சிந்தனைகள் , சட்ட வரையறைகள் போன்றவற்றை முஸ்லிம் சமூகம் சரிவர அறிந்து பயன்பெற வேண்டுமென்பதற்காக அவற்றை ஆதாரப் பூர்வமான முறையில் தொகுத்து வெளியிட்டு பிரச்சாரம் செய்து வருகின்றது .

இதோ உங்கள் கரங்களில் தவழும் “ ஈமானிய கடமைகள் “ எனும் இந்த ஆக்கமும் எங்கள் இஸ்லாமிய கல்வி ஆய்வு மையத்தின் திட்டங்களின் பிரதிபலிப்பேயாகும் . மேற்படி தலைப்பில் ஒரு

ஆக்கத்தை எழுத வேண்டுமென்ற கருத்தை பல்கலைக் கழகத்தின் போதனாசிரியர் குழு முன்வைத்த போது அது ஏற்றுக் கொள்ளப்பட்டு இஸ்லாமிய அறிவு ஆராய்ச்சி மையத்திற்கு அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டதுடன் தெளிவான முறையிலும் , அல்குர்ஆன் அஸ் ஸுன்னா ஆதாரங்களுடன் , இலகு நடையிலும் இப்பணி செய்யப்பட வேண்டுமென ஆலோசனை கூறப்பட்டது . அதற்கேட்ப உலக முஸ்லிம் சமூகம் அனைவருக்கும் இக்கல்வி சென்றடைய வேண்டுமென்ற நோக்கில் இப்புத்தகத்தை பல்வேறு உலக மொழிகளிலும் பெயர்ப்புச் செய்து அதனை ( இன்டர் நெட் ) சர்வதேச வலைப்பின்னலிலும் இடம்பெறச் செய்வதென இஸ்லாமிய கல்வி ஆய்வு மையத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது .

எனவே இப்பணி நிறைவேறுவதற்கு சகல வழிகளிலும் ஏற்பாடுகளைச் செய்து தந்த சவுதி அரேபிய அரசுக்கு அல்லாஹ் அருள்பாலித்து அது மேற்கோண்டு வரும் இஸ்லாமிய அறப்பணிகள் அனைத்தினையும் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் , மெம்மேலும் விஸ்தரிப்புச் செய்வதற்கும் இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காப்பதற்கும் அல்லாஹ் அருள் பாலிப்பானாக . அவ்வாறே இதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் நல்கிய பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் அல்லாஹ் நல்லருள் புரிவானாக .

மேலும் இப்புத்தகத்தின் மூலம் முஸ்லிம் சமூகம் பூரண பயன் பெறுவதற்கும் இஸ்லாமிய அறிவாராய்ச்சி மையத்தின் ஏனைய செயற்திட்டங்கள் செவ்வனே நிறைவு செய்யப் படுவதற்கும் அல்லாஹ் அருள் புரிவானாக .

அல்லாஹ் எம் அனைவரையும் நேர்வழியின் அழைப்பாளர்களாகவும் , சமூகத்தின் காவலர்களாகவும் ஆக்குவானாக .

.

வஸல்லல்லாஹு அலா நபிய்யினா முஹம்மதின் வஆலிஹீ அஸஹ்பிஹீ அஜ்மஈன் .

வஸ்ஸலாம் .

இஸ்லாமிய கல்வி ஆய்வு மையம்
இஸ்லாமிய பல்கலைக்கழகம்
. மதீனா .

# ஈமானிய கடமைகள்

ஒவ்வொரு முஸ்லிமும் ஆறு அதி முக்கிய (மறைவான) விடயங்களை கட்டாயம் நம்பியாக வேண்டும்,அப்போதுதான் அவன் ஓர் மு.:.மினாக – இறைவிசுவாசியாககக் கருதப்பபடுவான் அந்த ஆறு விடயங்களுமாவன ...

1. அல்லாஹுத்தஆலா இருப்பதை நம்புதல்
2. அவனுடைய மலக்குகள் (வானவர்கள்)இருப்பதை நம்புதல்
3. அவன் அருளிய வேதங்களை நம்புதல்
4. அவன் அனுப்பிய இறை தூதர்களை நம்புதல்
5. யுக முடிவு நாள் இருப்பதை நம்புதல்
6. நன்மை தீமை யாவும் இறை ஏற்பாட்டின்படியே நிகழ்கின்றன என நம்புதல்

இக்கூற்றுக்கு ஆதாரமாக பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் காணப்படுகின்றன.

﴿ وَلَٰكِنَّ ٱلۡبِرَّ مَنۡ ءَامَنَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِ وَٱلۡمَلَٰٓئِكَةِ وَٱلۡكِتَٰبِ وَٱلنَّبِيِّـۧنَ

﴾ [سورة البقرة: الآية ١٧٧].

“உங்களில் எவர் அல்லாஹ்வையும்,யுகமுடிவு நாளையும் மலக்குமார்களையும் நம்பிக்கை கொண்டு,இறை வேதங்களையும் இறை தூதர்களையும் நம்புகின்றாரோ அவரே நன்மை செய்தவராவார் ( ஸூரதுல் பகரா.வசனம் 177 )

மேலும் அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான்

﴿ كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ مِّن رُّسُلِهِۦۚ .

[سورة البقرة: الآية ٢٨٥].

இறைதூதர்களும் இறை விசுவாசிகளும் அவர்களின் இரட்சகனிடம் இருந்து இறக்கி வைக்கப்பட்ட வேதத்தை நம்புகின்றனர். இவர்கள் அனைவருமே அல்லாஹ்வையும் ,அவனது மலக்குகளையும் ,வேதங்களையும் அவனது தூதர்களையும் ,நம்பிக்கை கொண்டு விட்டனர் '.மேலும் நாம் அவனது தூதர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வினை ஏற்படுத்தமாட்டோம் எனவும் நம்புகின்றனர்.

(ஸூரத்துல் பகரா285 ம் வசனம் )

அதே போல் அல்லாஹ் தனது முன்னேற்பாடு பற்றிக்கூறுகையில் …

﴿ إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ ﴿٤٩﴾ ﴾ [سورة القمر: الآية ٤٩].

நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே படைக்கின்றோம்.என்று கூறுகின்றான் .

. (ஸூரத்துல் கமர் 49 ம் வசனம் .)

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்…ஈமான் (நம்பிக்கை) என்பது அல்லாஹ்,இறைதூதுவர்கள், மலக்குகள் ஆகியோரும் ,இறை வேதம் ,இறுதி நாள், இறை ஏற்பாடு என்பனவும் இருப்பதாகவும் நீ நம்பிக்கை கொள்வதாகும் .

(ஆதாரம் – ஸஹீஹ் முஸ்லிம் )

உன்மையான ஈமான் இறை நம்பிக்கை ஏற்படுவதென்றால் அங்கு மூன்று விடயங்கள் ஏற்பட வேண்டும் ..

1 – லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் வார்த்தையை நாவினால் மொழிய வேண்டும் .

2 – அதன் அர்த்தத்தை உறுதியாக மனதில் இருத்த வேண்டும் .

3 – இக்கலிமாவின் அர்த்தத்திற்கேட்ப உடலுறுப்புக்களின் செயற்பாடுகள் அனைத்தும் இருக்க வேண்டும் .

நற்கருமங்கள் புரியப்படும் போது இந்த ஈமானின் அளவு அதிகரிக்கும் .குற்றச்செயல்கள் புரியப்படும் போது இதன் அளவில் வீழ்ச்சி ஏற்படும் . இதனை அல்லாஹ் பின் வருமாறு கூறுகின்றான் .

﴿ إِنَّمَا ٱلْمُؤْمِنُونَ ٱلَّذِينَ إِذَا ذُكِرَ ٱللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ

ءَايَـٰتُهُۥ زَادَتۡهُمۡ إِيمَـٰنًا وَعَلَىٰ رَبِّهِمۡ يَتَوَكَّلُونَ ... وَمِمَّا رَزَقۡنَـٰهُمۡ يُنفِقُونَ ﴿٣﴾ أُوْلَـٰٓئِكَ هُمُ ٱلۡمُؤۡمِنُونَ حَقًّاۚ لَّهُمۡ دَرَجَـٰتٌ عِندَ رَبِّهِمۡ وَمَغۡفِرَةٌ وَرِزۡقٌ كَرِيمٌ ﴿٤﴾ ﴾

[سورة الأنفال: الآية ٢-٤].

" உன்மையான இறை விசுவாசிகள் யாரெனில் அல்லாஹ்வின் பெயர் அவர்கள் முன்னிலையில் கூறப்பட்டால் அவர்களது இதயங்கள் பயந்து நடுநடுங்கி விடும்.அவனது இறை வசனங்கள் அவர்களுக்கு ஓதிக்காட்டப்பட்டால் அவை அவர்களது நம்பிக்கையை மேலும் அதிகரிக்கும் .அவர்கள் (தமது விடயங்களை) தமது இரட்சகனிடமே பொறுப்பளித்து விடுவார்கள் .மேலும் அவர்கள்' தொழுகையை சரி வர நிறைவேற்றுவார்கள்,நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து (தான தர்மமாக) செலவு செய்வார்கள். இத்தகையோர்தான் உன்மையான இறை விசுவாசிகள் .

( அல்குர்ஆன் )

மேலும் அல்லாஹ் வியாபித்துக்கூறுகையில் ..

﴿ وَمَن يَكۡفُرۡ بِٱللَّهِ وَمَلَـٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِ فَقَدۡ ضَلَّ ضَلَـٰلَۢا بَعِيدًا ﴿١٣٦﴾ ﴾ [سورة النساء: الآية ١٣٦].

எவன் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும்,தூதர்கள் மற்றும் அவனது வேதங்களையும் ,யுக முடிவு நாளினையும் மறுக்கின்றானோ அவன் நிச்சயம் அதிக தூரம்வழிதவறிவிட்டான்

. (ஸூரத்துன்நிஸா.: 136ம் வசனம் .)

ஒருவரிடம் ஈமான் உள்ளம் ,நாவு ,உடலுறுப்பு ஆகிய மூன்றிலிருந்தும் வெளிப்பட முடியும். நாவிலிருந்து திக்ர் துஆ , அல்குர்ஆன்ஓதல்,நன்மையை ஏவி தீமையைத்தடுத்தல் போன்றவை மூலமும் உடலுறுப்புக்களிலிருந்து தொழுகை, நோன்பு,ஜிஹாத் போன்றவை மூலமும் ஈமான் ஒரு மனிதனிடம் உண்டாகின்றது . அதே போல் இதயத்துடன் தொடர்பான அமல்கள் மூலமும் ஈமான் உண்டாகின்றது.. உதாரணமாக அல்லாஹ் ஒருவனே , அவனே அனைத்தையும் படைத்தான் .அவனையே வணங்க வேண்டுமென

நம்புதல் .அவனது பெயர்கள் பண்புகள் பற்றி அறிவதைக்குறிப்பிடலாம் .அதே போல் அல்லாஹ்வை நேசித்தல்.அவனை அஞ்சி நடத்தல்,அவனிடமே சரணடைதல் போன்ற இதயம்சார்ந்த செயல்களும் ஈமான் என்ற வட்டத்தினுள் உள்ளடக்கப்படும் .

ஒரு மனிதன் எந்தளவு அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நடந்து அதிக வணக்கம் புரிகின்றானோ அந்தளவுக்கு அவனது ஈமான் அதிகரிக்கும் . அதே போல் தீய செயல்கள் மூலமாக ஈமானின் அளவு குறைந்து கொண்டே செல்லும் . இது பற்றிஅல்லாஹ் கூறுகையில்...

" அவர்கள் (மு:.மின்கள்) முன்னிலையில் இறை வசனங்கள் ஓதிக்காண்பிக்கப்பட்டால் அவர்களது ஈமான் அதிகரிக்கும் .

﴿ وَإِذَا تُلِيَتۡ عَلَيۡهِمۡ ءَايَٰتُهُۥ زَادَتۡهُمۡ إِيمَٰنٗا ﴾ [سورة الأنفال: الآية ٢].

(ஸூரா அல் அன்பால் உம் வசனம் .)

﴿ هُوَ ٱلَّذِيٓ أَنزَلَ ٱلسَّكِينَةَ فِي قُلُوبِ ٱلۡمُؤۡمِنِينَ لِيَزۡدَادُوٓاْ

﴿ إِيمَٰنٗا مَّعَ إِيمَٰنِهِمۡۗ ﴾ [سورة الفتح: الآية ٤].

மு:.மின்களின் ஈமான் மேலும் அதிகரிப்பதற்காக அவனே அவர்களின் இதயங்களில் அமைதியை இறக்கினான் .

(ஸூரா அல் பத்ஹு4ம் வசனம் .)

ஒருவன் அல்லாஹ்வுக்கு இணை வைத்து விட்டால்அல்லதுகாபிராகிவிட்டால் அவை அவனது ஈமானை அப்படியே அழித்து இல்லாமலாக்கி விடும்..அவையல்லாத ஏனைய பாவச்செயல்களை அவன் புரிந்தால் அவனது ஈமான் பலவீனமுற்று முழுமையான ஈமான் இல்லாமல் போய் விடும் .

இணை வைத்தலின் விபரீதம் பற்றி அல்லாஹ் இயம்புகையில்

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغۡفِرُ أَن يُشۡرَكَ بِهِۦ وَيَغۡفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُۚ ... ﴾

……நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணை வைப்பதை ஒரு போதும் மன்னிக்கவே மாட்டான்.அதல்லாத ஏனைய பாவங்களைத் தான் விரும்பியோருக்கு மன்னிப்பான் .

(.ஸூரா அன் நிஸா.:. 48ம் வசனம் .)

﴿ يَحۡلِفُونَ بِٱللَّهِ مَا قَالُواْ وَلَقَدۡ قَالُواْ كَلِمَةَ ٱلۡكُفۡرِ وَكَفَرُواْ بَعۡدَ إِسۡلَٰمِهِمۡ ... ﴾

[سورة التوبة: الآية ٧٤].

… அவர்கள் குப்ரை உண்டாக்கும் வார்த்தைகளைப்பேசியதால் இஸ்லாமாகியதன் பின் மீண்டும் காபிராகி விட்டார்கள் .

( ஸூரா அத்தவ்பா.:. 74ம் வசனம் ) என்றும் கூறுகின்றான்

குற்றச்செயல்கள் புரிவதால் ஒருவனுக்கு ஏற்படும் பாதக விழைவுகள் பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறுகையில் ..

ஒருவிபச்சாரி அவன் விபச்சாரத்தில் ஈடுபடும் போது மு.:.மினாக இருப்பதில்லை.திருடன் அவன் திருடும் தருணம் மு.:.மினாக இருப்பதில்லை .மதுவருந்துபவன் அவன் அச்செயலில் ஈடுபடும் போது மு.:.மினாக இருப்பதில்லை. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் . (புகாரி – முஸ்லிம் )

தீய செயல்களில் ஈடுபடும் போது ஈமான் அவனை விட்டு நீங்கிவிடுகின்றதென்பதை மேற்கண்ட ஆதாரங்களிலிருந்து அறிய முடிகின்றது

## . ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்கள்.

ஓவ்வொரு மனிதனும் ஆறு விடயங்களைப் பற்றி தெளிவாக அறிந்து வைத்திருப்பது கட்டாயக் கடமையாகும் அவையாவன .........

## 1 – அல்லாஹுத்தஆலாவை நம்புதல்

அல்லாஹ்வை நம்புதல் பின்வரும் விடயங்கள் புரியப்படுவதன் மூலம் நிறைவேறுகின்றது.

முதலாவது – இப்பிரபஞ்சத்தை நிர்வகிப்பதற்கு இறைவன் ஒருவன் இருக்கிறான் .அவனே அதைப்படைத்து ,நிர்வகித்து ஆட்சி செய்கிறான் என்று உறுதியாக நம்புதல் வேண்டும்

மேலும் அவனே,நன்மை தீமைகளை இடம் பெறச்செய்தல் போன்றவற்றிக்குப்பொறுப்பானவன் என்று நம்புதலுடன், அவனைத்தவீரவேறு இறைவன் இல்லையென்றும் அவன் நினைத்ததைச்செய்பவன் , வீரும்பியவாறு தீர்ப்பளிப்பவன் வீரும்பீயோரின் அந்தஸ்த்தை உயர்த்தி வீரும்பீயோரைக் கேவலப்படுத்துபவன் , வானம் பூமிகளின் ஆட்சி அவன் வசமே உள்ளது.அவன் அனைத்து விடயத்தின் பாலும் சக்தி பெற்றவன் என நம்ப வேண்டும் .

மேலும் அவன் அனைத்தையும் அறிந்தவன் எவரது உதவீயும் தேவையற்றவன் .அனைத்து வீவகாரங்களும் அவன் வசமே

உள்ளன.அவனது தன்னிகரற்ற செயற்பாடுகளில் அவனுக்கு நிகரானவர் எவருமில்லை .அவனை மிகைப்போர் யாருமில்லை. மனு,ஜின்,மலக்கு மற்றும்படைப்புக்கள் அனைத்தும் அவனது அடிமைகளே .அவனது விருப்பத்திற்கு மாறாக அவர்களால் எதுவும் செய்ய முடியாது .அவனது செயல்கள் கணக்கிட முடியாதவை எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவை. இத்தகைய தன்னிகரற்ற செயற்பாடுகள் அவனுக்கு மாத்திரமே உள்ளன .அவனன்றி எவரும் அவற்றில் பங்கு கேட்க முடியாது என நம்புதல் வேண்டும் .அவனது தன்னிகரற்ற செயல்கள் வேறு எவருக்கும் இருப்பதாக நம்புவதோ கூறுவதோ கூடாது .

இது பற்றி இறைவன் திருமறையிலே பின் வருமாறு கூறுகின்றான்……

﴿ يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱعۡبُدُواْ رَبَّكُمُ ٱلَّذِى خَلَقَكُمۡ وَٱلَّذِينَ مِن قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُونَ ﴿٢١﴾ ٱلَّذِى جَعَلَ لَكُمُ ٱلۡأَرۡضَ فِرَٲشً۬ا وَٱلسَّمَآءَ بِنَآءً۬ وَأَنزَلَ مِنَ ٱلسَّمَآءِ مَآءً۬ فَأَخۡرَجَ بِهِۦ مِنَ ٱلثَّمَرَٲتِ رِزۡقً۬ا لَّكُمۡ‌ۖ … ﴾

[سورة البقرة: الآيتان ٢١ ، ٢٢].

“ மனிதர்களே உங்களையும் உங்களுக்கு முன் வாழ்ந்தோரையும் படைத்தவனான அல்லாஹ்வையே வணங்குங்கள். ஆதனால் நீங்கள் பய பக்தி மிக்கவராக ஆகுவீர்கள்.அவன் தான் பூமியை உங்களுக்கு விரிப்பாகவும் வானத்தை முகடாகவும் ஆக்கினான் .மேலும் உங்களுக்கு உணவளிப்பதற்காக வானத்திலிருந்து நீரை இறக்கி அதன் மூலம் கனி வர்க்கங்களை வெளிப்படுத்தினான் .

.

(ஸூரத்துல் பகரா ௨௦ம்,௨1ம் வசனங்கள்)

மேலும் கூறுகையில் ……

﴿ قُلِ ٱللَّهُمَّ مَـٰلِكَ ٱلۡمُلۡكِ تُؤۡتِى ٱلۡمُلۡكَ مَن تَشَآءُ وَتَنزِعُ ٱلۡمُلۡكَ مِمَّن تَشَآءُ وَتُعِزُّ مَن تَشَآءُ وَتُذِلُّ مَن تَشَآءُ‌ۖ بِيَدِكَ ٱلۡخَيۡرُ‌ۖ عَلَىٰ كُلِّ شَىۡءٍ۬ قَدِيرٌ۬ ﴿٢٦﴾ ﴾ [سورة آل عمران، الآية: ٢٦].

நபியே நீங்கள் பிரார்த்தியுங்கள் அல்லாஹ்வே நீதான் அரசருக்கெல்லாம் அரசன். நீ விரும்பியவருக்குஆட்சியைக்கொடுக்கின்றாய்.விரும்பியவரின் ஆட்சியைப்பறிக்கின்றாய். நீ விரும்பியவரை கண்ணியப்படுத்துகிறாய் விரும்பியவரை கேவலப்படுத்துகிறாய். உன் கையிலேயே அனைத்து நன்மைகளும் இருக்கின்றன. நீ அனைத்து விடயங்களுக்கும் சக்தி பெற்றவன் . ( ஆல இம்றான் 26ம் வசனம் )

மேலும் கூறுகையில்……….

﴿ وَمَا مِن دَآبَّةٍ فِي ٱلۡأَرۡضِ إِلَّا عَلَى ٱللَّهِ رِزۡقُهَا وَيَعۡلَمُ مُسۡتَقَرَّهَا وَمُسۡتَوۡدَعَهَاۚ كُلّٞ فِي كِتَٰبٖ مُّبِينٖ ٦ ﴾ [سورة هود، الآية: 6].

பூமியில் வாழும் எந்த ஜீவனுக்கும் உணவளிக்கும் பொறுப்பு அல்லாஹ்வின் மீதேயன்றி வேறில்லை. அவன் அவை தங்குமிடத்தையும் இருந்த இடத்தையும் அறிவான்.இவை அனைத்துமே தெளிவான ஏட்டிலே (பதிவு செய்யப்பட்டவை) யாகும்.

(ஸூரத்துல் ஹூத் 6ம்வசனம் )

மேலும் கூறுகின்றான் …

﴿ قُلِ ٱللَّهُمَّ مَٰلِكَ ٱلۡمُلۡكِ تُؤۡتِي ٱلۡمُلۡكَ مَن تَشَآءُ وَتَنزِعُ ٱلۡمُلۡكَ مِمَّن تَشَآءُ وَتُعِزُّ مَن تَشَآءُ وَتُذِلُّ مَن تَشَآءُۖ بِيَدِكَ ٱلۡخَيۡرُۖ إِنَّكَ عَلَىٰ كُلِّ شَيۡءٖ قَدِيرٞ ٢٦ ﴾

[سورة آل عمران، الآية: 26].

அறிந்து கொள்ளுங்கள் படைத்தலும்பரிபாலித்தலும் அவனுக்கே உரியன .அவன்உயர்வானவன்அனைத்துலகின் இரட்சகன்.

( ஸூரத்துல் அ:ராப் 54 ம் வசனம் )

**இரண்டாவது –** அல்லாஹூத்தஆலா தனக்கென சிலஅழகிய நாமங்களையும் முழுமை மிகு பண்புகளையும் கொண்டுள்ளான்.அவற்றில் சிலவற்றை தனது திரு மறையிலும்

இறுதித்தூதர் நபி (ஸல்) மூலமும் தனது அடியார்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளான் என்றும் உறுதியாக நம்ப வேண்டும் .
இது பற்றி அல்லாஹ் கூறுகையில்...

﴿ وَلِلَّهِ ٱلْأَسْمَآءُ ٱلْحُسْنَىٰ فَٱدْعُوهُ بِهَا ۖ وَذَرُوا۟ ٱلَّذِينَ يُلْحِدُونَ فِىٓ أَسْمَـٰٓئِهِۦ ۚ سَيُجْزَوْنَ مَا كَانُوا۟ يَعْمَلُونَ ﴿١٨٠﴾ ﴾ [سورة الأعراف، الآية: ١٨٠].

அல்லாஹ்வுக்கு அழகிய திரு நாமங்கள் உள்ளன.அவற்றின் மூலம் நீங்கள் அவனிடம் பிரார்த்தியுங்கள்.

( ஸூரத்துல் அ:ராப்: 170 ம் வசனம் )

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்....அல்லாஹ்வுக்கு அழகிய தொண்ணூற்றொன்பது திருநாமங்கள் உள்ளன எவர் அவற்றைக்கணக்கிடுகின்றாரோ(அவற்றின் படி நடக்கின்றாரோ) அவர் சுவனம் நுழைவார் .(புகாரி – முஸ்லிம்)

இந்த நம்பிக்கையானது இரு பெரும் அடிப்படை விடயங்களில் தங்கியுள்ளது......

1 – அல்லாஹ்வுக்குஅழகிய திருநாமங்களும் உயரிய பல பண்புகளும் உள்ளன. அவையனைத்தும் அவன் உயர்வானவன் என்பதை பறைசாட்டுகின்றன.அப்பெயர்களிலோ பண்புகளிலோ எவ்வழியிலும் எக்குறையும் ஏற்பட மாட்டாது.அவைகளுக்கு நிகரான பண்புகள் குணாதிசயங்கள் படைப்பினங்கள் எதிலுமே காணப்படாது என்பதாகும் . உதாரணமாக –ஹய்– உயிருள்ளவன் என்பது அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்றாகும். இதிலிருந்து ஹயாத்–ஜீவன் எனும் பண்பு அல்லாஹ்வுக்கு உண்டென நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அது எமது உயிரைப் போன்றதல்ல.மாறாக முழுமை பெற்ற அவனுக்கேயுரிய –அப்பண்பு முழுமை பெற வேண்டிய அனைத்துக்காரணிகளையும் அடங்கப் பெற்ற வகையிலான குணாதிசயமாகும் என ஏற்க வேண்டும் .அதே போல் மனிதர்களில் காணப்படும் பண்புகளுக்கு ஆரம்பமும் முடிவும் இருப்பது போல் இறைவனின் பண்புகளுக்கு ஆரம்பமோ முடிவோ கிடையாது எனவும் நம்ப வேண்டும் .

அல்லாஹ் தனது பண்புகளில் சிலதை பின்வரும் வசனத்திலே கூறுகின்றான்....

﴿ وَلِلَّهِ ٱلۡأَسۡمَآءُ ٱلۡحُسۡنَىٰ فَٱدۡعُوهُ بِهَاۖ وَذَرُواْ ٱلَّذِينَ يُلۡحِدُونَ فِيٓ

﴿ سَيُجۡزَوۡنَ مَا كَانُواْ يَعۡمَلُونَ ﴿١٨٠﴾ ﴾ [سورة الأعراف، الآية: ١٨٠].

(அல்லாஹ்) வணங்கப்படத்தகுதி மிக்கவன்,அவனையன்றி வணக்கத்திற்குரியவர் எவருமில்லை, அவன் நித்திய ஜீவீ, என்றென்றும் நிலைத்திருப்பவன்,அவனுக்கு தூக்கமோ அயர்வோ ஏற்படுவதில்லை.

(ஸூரா பகரா 255ம் வசனம்) என்று கூறுகின்றான் .

**2** — அல்லாஹுத்தஆலா குறை பாடு மிகு , துர்க்குணங்கள் அனைத்தை வீட்டும் தூரமானவன். தூக்கம்,இயலாமை , அறியாமை,அநீதி போன்ற குறை பாடு மிக்க பண்புகள் அவனுக்கில்லை .அதே போல் அவன் படைப்பினங்கள் அனைத்திற்கும் மாற்றமானவன் அவனுக்கு மனிதர்களுக்கு ஏற்படும் தேவைகள் காரியங்கள் எதுவும் இல்லை என்று நம்புதல் வேண்டும் .எனவே அல்லாஹ் தனக்கு இல்லையென மறுத்த, அவனது தூதர் இல்லையென மறுத்த பண்புகளை நாமும் இல்லையென மறுக்க வேண்டும்.அத்துடன் அப்பண்புக்கு மாற்றமான நிறைவு மிகு உயர் குணம் அவனுக்கு உள்ளதென்றும் நம்ப வேண்டும். உதாரணமாகஇறைவனுக்கு தூக்கம் இல்லையென நாம் மறுக்கின்றோம்..இவ்வாறு தூக்கம் இறைவனுக்கு இல்லையென்று மறுக்கும் போது இதற்கு எதிரான பண்பான தூங்காமல் சதா விழித்திருத்தல் என்னும் பண்பு அதில் மறைமுகமாக தொணிக்கின்றதல்லவா? எனவே சதாவும் விழித்திருத்தல் எனும் பண்பை நாம் அவனுக்கு நிறுவ வேண்டும் .இவ்வாறு தான்அல்லாஹ் தனக்கு இல்லையென மறுக்கும் ஒவ்வொரு குறைபாடு மிகு பண்புகளுக்கும் எதிரான முழுமைமிகு பண்புகள் அவனுக்கு இருப்பதாக நாம் ஏற்க வேண்டும் .ஏனைனில் குறைபாடுமிகு பண்புகளை அவன் நிராகரித்தலானது அவனுக்கு அதற்கு எதிரான முழுமை மிகு பண்புகள் இருப்பதை மறைமுகமாக உணர்த்துகின்றது. அல்லாஹ் மாத்திரமே முழுமை பெற்றவன் . அவனல்லாத அனைத்துமே குறைபாடுள்ளவைகளே.

இது பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான்……

﴿ ... لَيْسَ كَمِثْلِهِۦ شَىْءٌ ۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ﴿١١﴾ ﴾ [سورة الشورى، الآية: ١١].

அவனைப் போன்றதொன்று எதுவுமேயில்லை . அவன் (சதா) கேட்பவனும் பார்ப்பவனுமாயிருக்கின்றான்.

(ஸூரத்துஸ்ஸூரா 11ம் வசனம்)

﴿ ... وَمَا رَبُّكَ بِظَلَّٰمٍ لِّلْعَبِيدِ ﴿٤٦﴾ ﴾ [سورة فصلت، الآية: ٤٦].

உனது இறைவன்எந்த அடியானுக்கும் அநீதி இழைப்பவனல்லன்.
. (ஸூரா அல் புஸ்ஸிலத் 46ம் வசனம்.)

﴿ ... وَمَا كَانَ ٱللَّهُ لِيُعْجِزَهُۥ مِن شَىْءٍ فِى ٱلسَّمَٰوَٰتِ وَلَا فِى ٱلْأَرْضِ ... ﴾

﴿ [سورة فاطر، الآية: ٤٤].

இறைவனைப் பலவீனப்படுத்தும் எப்பொருளும் வானங்களிலோ பூமியிலோ கிடையாது .

(ஸூரா அல் பாதிர் 44வசனம்)

﴿ ... وَمَا كَانَ رَبُّكَ نَسِيًّا ﴿٦٤﴾ ﴾ [سورة مريم، الآية: ٦٤].

உனது இறைவன் எதையும் மறந்து விடுபவனல்லன் .
.(ஸூரா அல் மர்யம் 64 ம் வசனம்.)

அல்லாஹ்வின் பெயர் நாமங்களையும் குணாதிசயங்களையும், செயல்களையும் அறிவதன் மூலமாக ஏற்படும் ஈமானே அல்லாஹ்வை அறிவதற்கும் அவனை வணங்கி வழிபடுவதற்குமான ஓரே வழியாகும். ஏனைனில்அல்லாஹ் படைப்பினங்களை விட்டும் மறைவானவன். உலகில் அவனைக்கண்ணால் காண முடியாது. எனவே அவனை அறிந்து கொள்வதற்கான அறிவின் வாயிலை மக்களுக்குத்திறந்து கொடுத்துள்ளான்.

அதன் மூலம் அவர்கள் தமதுவணக்கத்திற்குரியவனும் தம்மைப்படைத்தவனுமாகிய அல்லாஹ்வை அறிந்து கொள்ள

முடியும்.அந்த அறிவின் ஒளியில் தமது வணக்க வழிபாடுகளை அமைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு இறைவனைப்பற்றி நன்கு அறிந்து வணங்குபவனேஉன்மையில் அல்லாஹ்வை வணங்குகிறான்.அல்லாஹ் தனக்கு இருப்பதாகக்கூறிய பண்புகளை நிராகரிப்பவன் – இல்லாமை – என்பதை வணங்குகின்றான்.இப்பண்புகள் போன்ற பண்பு வேறு ஒருவனுக்கும் இருக்கின்றது என்று நம்புபவன் அப்பண்பு இருப்பதாக நம்பும் அந்து விக்ரகத்தையே வணங்குகின்றான். எனவே உன்மையான முஸ்லிம் மாத்திரமே தனித்த தன்னிகரற்ற பெறாத பெறப்படாத ஒப்புவமையற்ற ஒரே இறைவனை வணங்குகின்றான் .

எனவே இறைவனுக்குரிய அழகிய திரு நாமங்களை ஏற்று அங்கீகரிக்கும் போது பின் வரும் விடயங்களைக்கருத்தில் கொள்ள வேண்டும்..

1 – அல்குர்ஆனிலும் ஹதீதிலும் இடம் பெறும் நாமங்கள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு இருப்பதாக நம்ப வேண்டும். அவற்றில் கூட்டல் குறைத்தல் இடைச்செருகல்கள் எதுவும் செய்தலாகாது.

அல்லாஹ் கூறுகின்றான்……

هُوَ ٱللَّهُ ٱلَّذِى لَآ إِلَٰهَ إِلَّا هُوَ ٱلْمَلِكُ ٱلْقُدُّوسُ ٱلسَّلَٰمُ ٱلْمُؤْمِنُ
ٱلْمُهَيْمِنُ ٱلْعَزِيزُ ٱلْجَبَّارُ ٱلْمُتَكَبِّرُ ۚ سُبْحَٰنَ ٱللَّهِ عَمَّا يُشْرِكُونَ ﴿٢٣﴾

[سورة الحشر، الآية: ٢٣].

அல்லாஹ் அவன் தான் வணங்கப்படத் தகுதியான இறைவன் அவனையன்றி எவருமில்லை. அவன் பேரரசன் ,பரிசுத்தமானவன்,சாந்திமிக்கவன் ,அபயமளிப்பவன், கண்காணிப்பவன் ,கண்ணியமிக்கவன்,அடக்கிஆழ்பவன்,பெருமைக்குரியவன்,அவர்கள்(காபிர்கள்) இணைவைப்பதைவிட்டும்பரிசுத்தமானவன். . (ஸூரா அல் ஹஸ்ர் 32ம் வசனம்.)

ஹதீதில் வருவதாவது "ஒரு மனிதர் பின்வருமாறு துஆச்செய்ததை நபியவர்கள் செவியுற்றார்கள்" .''அல்லாஹ்வே புகழனைத்தும் உனக்கே .அதன் பொருட்டால் உன்னிடம் கேட்கிறேன் வணக்கத்திற்குரியவன் உன்னையன்றி யாருமில்லை.நீயே கொடையாளி ..வானம் பூமியை ஆரம்பமாகப் படைத்தவன் .கண்ணியமும் கீர்த்தியும் மிக்கவனே..நித்திய ஜீவியே .என்றென்றும் நிலைத்திருப்பவனே..எனப்பிரார்த்தித்தார். இதனைக்கேட்ட நபியவர்கள் ஸஹாபாக்களை நோக்கி இவர் எதன் பொருட்டால் துஆக்கேட்டார் என்று தெரியுமா என்று கேட்க அதற்கு ஸஹாபாக்கள் அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள் என்று கூறினர். அதற்கு நபியவர்கள் இவர் அல்லாஹ்வின் இஸ்முல் அ.ஃழத்தின் பொருட்டால் துஆக்கேட்டுள்ளார். இந்த இஸ்முல் அ.ஃழத்தின் பொருட்டால் அழைத்தால் அல்லாஹ் அதற்கு பதிலளிப்பான். அதன் பொருட்டால் எதனையும் கேட்டால் அதைக்கொடுப்பான் என அருளினார்கள்

உ – அல்லாஹுதஆலாவே தனக்கு அத்திரு நாமங்களைச்சூட்டிக்கொண்டான். அன்றி வேறு எந்தப்படைப்புமே அவனுக்குப் பெயர் சூட்டவில்லை. இப்பெயர் நாமங்கள் மூலமாக அல்லாஹ் தன்னைத்தானே புகழ்கின்றான். எனவே இப்பெயர்கள் படைக்கப்பட்டவைகளோ புதிதாகத்தோன்றியவைகளோ அல்ல என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

3 – அல்லாஹ்வின் திருநாமங்கள் அனைத்துமே பரிபூரண முழுமைத்துவம் பெற்ற அர்த்தங்களைக்கொண்டுள்ளன. எந்தக்கோணத்திலுமே அவைகளில் எக்குறைபாடுகளும் ஏற்படாது என்று நம்புதல் வேண்டும். அதே போல் அவைகளின் அர்த்தங்கள் இறைவனிடம் காணப்படும் பண்புகளாகும் என்றும் நம்ப வேண்டும் .

4 – இந்த நாமங்களைக் கண்ணியப்படுத்துவதுடன் அவற்றை மறுப்பதோ அவற்றில் இடைச்செருகல்கள் செய்தலோ கூடாது.

5 – இத்திரு நாமங்கள் உள்ளடக்கியிருக்கும் மார்க்க சட்டங்கள் செயல்த்திட்டங்களையும் ஏற்று நடத்தல் வேண்டும்

மேற்கூறிய ஐந்து விடயங்களையும் பின் வரும் உதாரணத்தின் மூலம் செயல்முறைப்படுத்திப்பார்ப்போம்
அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்றுதான் அஸ்ஸமீ.: – அனைத்தையும் கேட்பவன் எனும் பெயராகும். இதை நாம் எவ்வாறு அணுகுவது?...

1– அஸ்ஸமீ.: அனைத்தையும் கேட்பவன் எனும் பெயர்நாமம் குர்ஆனிலும் ஹதீதிலும் இடம்பெற்றிருப்பதால் இது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்று என்று ஈமான் கொள்வது.அல்லாஹ்தனக்குத்தானேஇப்பெயரைச்சூட்டிக் கொண்டான்.அதை அவனே அல்குர்ஆனிலும் பிரஸ்த்தாபித்துள்ளான்( வேறு எவரும் அவனுக்கு அப்பெயரைச்சூட்டவில்லை)என்று நம்புதல்.

2– ஆஸ்ஸமீ.: கேட்பவன் எனும் இத்திரு நாமம் அல்லாஹ்வுக்கு கேட்டல் –செவியுறல் எனும் பண்பினை உணர்த்தி நிற்கின்றது என்றும் உறுதி கொள்ளல்.

3– இந்த –கேட்டல்– எனும் இறை பண்பினை கண்ணியப்படுத்தி அதன் அர்த்தத்தை அப்படியே நம்ப வேண்டும்.. அவ்வாறன்றி அதன் அர்த்தத்தை மாற்றி வேறு அர்த்தம் கற்பிப்பதோ, அன்றி அதன் நேரடி அர்த்தத்தை ஏற்க மறுப்பதோ கூடாது .

4– கேட்டல் எனும் பண்பின் அர்த்தத்திற்கேட்ப அல்லாஹ் அனைத்தையுமே செவியுறுபவன்.அவனது பண்பு எவ்வித –மிகச்சிறிய பாரிய –ஒலியையும் செவியுறக்கூடியது என நம்புதல் .அதே போல் அவன் அனைத்தையுமே செவியுறுவதால் எப்போதும் அவனது கண்காணிப்புக்குட்பட்டிருக்கிறோம் என அஞ்சி பயபக்தியுடன் இருக்க வேண்டும் . அவ்வாறே அவனுக்குத்தெரியாமல் எதுவும் மறைந்திருக்க முடியாது எனவும் நம்ப வேண்டும் .

இவ்வாறே அல்லாஹ்வின் ஸிபாத் (குணாதிசயங்கள் –பண்புகள்) பற்றி நம்பிக்கை கொள்ளும் போதும் பின் வரும் சில விதிமுறைகளைக்கடைப்பிடித்தல் அவசியம் .

1– அல்குர்ஆனிலும் ,ஸுன்னாவிலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள அனைத்து பண்புகளையும் அதன் உன்மையான – வெளிப்படையான அர்த்தத்தை அறிந்து ஏற்றுக்கொள்ள

வேண்டும் .அதே வேளை அதில் எதையும் மாற்றவோ மறுக்கவோ கூடாது .

உ– அல்லாஹ்ஊத்தஆலாமுழுமை பெற்ற நற் பண்புகளால் வர்ணணை பெற்றவன் . அனைத்து வித குறைபாடுமிகு பண்புகளை விட்டும் தூரமானவன் என உறுதியாக நம்ப வேண்டும் .

3– படைப்பாளனான அல்லாஹ்வின் எப்பண்புகளையும் படைப்பினங்களின் பண்புகளுக்கு ஒப்பிட்டு விடக்கூடாது .ஏனெனில் அவனது பண்புகளுக்கோ ,செயல்களுக்கோ ஈடாக எதுவும் எப்போதும் எவருக்கும் இருக்க முடியவே முடியாது , அதனால் தான் அல்லாஹ் தனது மறையிலே பின் வருமாறு கூறுகின்றான் ……

﴿ لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ١١ ﴾ [سورة الشورى، الآية: ١١].

4– அவனுக்கு (அல்லாஹ்வுக்கு ) ஒப்பாக எதுவுமேயில்லை . அவன் அனைத்தையும் கேட்பவனும் பார்ப்பவனுமாக இருக்கிறான் . (ஸூரத்துஸ்ஸூரா.: 11 ம் வசனம் .)

5– இந்த ஸிபாத் எனும் பண்புகளின் யதார்த்தம் (சுய வடிவம்) எவ்வாறு இருக்கும் என அறிய முனைவதைத் தவிர்த்தல் .ஏனைனில் இப்பண்புகளின் யதார்த்த வடிவத்தை அல்லாஹ்வையன்றி வேறு எவராலும் அறிய முடியாது .ஆகவே நாம் அதுபற்றி அறிய முனைவது தேவையற்ற வீணான செயலாகும் .

உதாரணமாக மேற்படி வசனத்தில் அல்லாஹ் தன்னை–பஸீர்–யாவற்றையும் பார்ப்பவன் எனப் பிரஸ்தாபிக்கின்றான் ..இதை வைத்துக்கொண்டு அல்லாஹ் எம்மைப்பார்ப்பதால் அவனுக்குக்கண்கள் இருக்குமோ , அக்கண்கள் எமது கண்கள் போன்றுதான் இருக்குமோ என்றெல்லாம் சிந்திக்கவோ முடிவு செய்து விடவோ கூடாது . அல்லாஹ்வுக்கு கண்கள் இருப்பதாக குர்ஆனிலும் ஸுன்னாவிலும் வந்தாலும் கூட அதை அப்படியே ஏற்க வேண்டுமெயன்றி ,, அக்கண்கள் எங்கிருக்கும் எப்படியிருக்கும் எது போன்றிருக்கும் என்றெல்லாம் சிந்திக்கவோகற்பனைசெய்யவோ கூடாது . ஏனைனில் இது பற்றிஅல்லாஹ் எமக்கு எதுவும் கூறவில்லை .எனவே ஆதாரமின்றி நாம் எவ்வித முடிவும் எடுக்க முடியாது .ஏனைனில் அல்லாஹ்வுக்கு ஒரு விடயம் இருப்பதாக நாம் நம்புவதானால்

நாம் அதை இறைவனிடம் கண்டிருக்க வேண்டும் அன்றேல் அது அல் குர்ஆன் ,அல் ஹதீதில் கூறப்பட்டிருக்க வேண்டும் . ஆனால் அவனை நாம் காணாமல் குர்ஆன் ஹதீதிலும் அது கூறப்படாத நிலையில் அதுபற்றி எவ்வித முடிவும் எடுப்பதற்கு எமக்கு அதிகாரமில்லை .ஆகவே அல் குர்ஆன் அல் ஹதீதுகளில் கூறப்பட்டவைகளை மாத்திரம் ஏற்று நடப்பதே எமது கடமை .

6 — இந்த ஸிபாத்துக்கள் (பண்புகள் ) மூலம் பெறப்படும் சட்ட திட்டங்கள் அனைத்தையும் நம்புதல் .

மேற்கூறிய ஐந்து விதிகளையும் பின் வரும் உதாரணத்தின் மூலம் மேலும் தெளிவாக அறிந்து கொள்ள முடியும் .

— இஸ்திவா: — அர்ஸில் உள்ளான் எனும் பண்பு இறைவனுக்கு மாத்திரமே உள்ள ஒரு பண்பாகும் .ஏனைனில் இப்பண்பு தனக்கு மாத்திரமே உள்ளதென திரு மறையில் கூறுகின்றான் ……

﴿ ٱلرَّحۡمَٰنُ عَلَى ٱلۡعَرۡشِ ٱسۡتَوَىٰ ۝٥ ﴾ [سورة طه، الآية: ٥].

அளவற்ற அருளாளனான அல்லாஹ் அர்ஸின் மிது உயர்ந்து நிலை பெற்று விட்டான் . (ஸூரா தாஹா 5ம் வசனம் .)

ஆகையால் நாம் இப்பண்பு சம்பந்தமாக ஐந்து விடயங்களை ஏற்றாக வேண்டும் .

1 — இஸ்திவா: — அர்ஸீல் நிலைத்திருத்தல் அல்லாஹ்வின் பண்புகளில் ஒன்று என்று நம்ப வேண்டும் .

2 — இப்பண்பு அதன் வெளிப்படையான அர்த்தத்திலேயே கொள்ளப்படல் வேண்டும் ,(அதாவது ஏழு வானங்களுக்கு மேலேயுள்ள அர்ஸ் எனும் சிம்மாசனத்தில் ) அவனுக்கேயுரிய பாணியில் உயர்ந்து அதில் நிலைபெற்றுவிட்டான் என நம்பிக்கை கொள்ள வேண்டும் .

3 — இறைவன் அர்ஸில் உயர்ந்து நிலைபெற்றிருத்தல் எனும் பண்பை படைப்பினங்களிடம் காணப்படும் —வீற்றருத்தல் ,அமர்தல் போன் பண்புகளுக்கு ஒப்பிடாதிருத்தல் வேண்டும் . ஏனெனில் அல்லாஹ் அர்ஸின்பால் தேவையற்றவன் .அவன் அமர்ந்துதான் ஆக வேண்டுமென்பதோ அல்லது அவன் அமர்வதற்கு அர்ஸ்தான் தேவை என்பதோ இல்லை .எனவே அர்ஸில் நிலைபெற்றிருத்தல் எனும் பண்பு அவனுக்கு உள்ளதென்றும் , அதுபடைப்பினங்களிடம் உள்ள பண்பு போன்றதல்ல என்றும் , அதன் தன்மை எவ்வாறு என்பதன்

யதார்த்தத்தை அவனே அறிந்தவன் என்றும் ஏற்றிருத்தல் வேண்டும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ١١ ﴾ [سورة الشورى، الآية: ١١].

அவனை(அல்லாஹ்வை)ப் போன்றது எதுவுமில்லை .அவன் கேட்பவனும் பார்ப்பவனுமாக இருக்கிறான் .

. .

(ஸூரத்துஸ்ஸூரா.:. 11ம் வசனம் .)

4 – அர்ஸில் நிலைத்திருத்தல் எனும் இப்பண்பின் சுய வடிவம் – முறைமை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடாதிருத்தல் .ஏனெனில் அது மறைவானதொரு விடையம் .மறைவானவற்றை அல்லாஹ்வையன்றி வேறு எவரும் அறிந்திட முடியாது .

5 – இப்பண்பினை ஏற்பதன் மூலம் அதிலிருந்து விளங்கப்படும் பண்புகளையும் ஏற்றாக வேண்டும் . உதாரணமாக அல்லாஹ் பிரமாண்டமானவன் ,உயர்ந்த இடத்திலும் அந்தஸ்திலுமுள்ளவன் , படைப்பினங்களை விட்டும் வேறுபட்டவன்,பெருமைக்குரியவன்போன்றனஇப்பண்பிலிருந் – து விளங்கிப்பெறப்படும் பண்புகளாகும்

ஈமான் பூரணத்துவம் பெற்றிட இடம்பெற்றாக வேண்டிய மற்றுமொரு அம்சமாவது
ஒரு மனிதன் – அல்லாஹ் மாத்திரமே உன்மையான கடவுள் ,அவன் தனித்தவன் ,இணை – துனையற்றவன் என்றும் வெளிப்படையான மறைமுஹமான அனைத்து வணக்க வழிபாடுகளுக்கும் தகுதி படைத்தவன் அவன்தான் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

இது பற்றி திருமறையில் ......

﴿ وَلَقَدۡ بَعَثۡنَا فِي كُلِّ أُمَّةٖ رَّسُولًا أَنِ ٱعۡبُدُواْ ٱللَّهَ وَٱجۡتَنِبُواْ ٱلطَّٰغُوتَۖ ...

﴾ [سورة النحل، الآية: ٣٦].

நிச்சயமாக நாம் ஒவ்வொரு சமூகத்தினிடமும் எமது தூதுவர்களை அனுப்பி அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்

போலிக்கடவுள்கனை வீட்டு விடுங்கள்( என்று கூறிவந்தோம் .) என்றும் ஒவ்வொரு சமூகத்தினரிடமும் வந்த அனைத்துத்தூதர்களுமே

﴿ ... ٱعۡبُدُواْ ٱللَّهَ مَا لَكُم مِّنۡ إِلَٰهٍ غَيۡرُهُۥٓ ... ﴾ [سورة الأعراف، الآية: ٥٩].

"அல்லாஹ்வையே வணங்குங்கள் .அவனன்றி உங்களுக்கு வேறு கடவுள் இல்லை" என்றும் போதித்ததாக அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான்

(பார்க்க..ஸூரா அன்நஹ்ல் வசனம்36)

மேலும் அல்லாஹ் கூறுகையில்

﴿ وَمَآ أُمِرُوٓاْ إِلَّا لِيَعۡبُدُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ ... ﴾

[سورة البينة، الآية: ٥].

"நீங்கள் அல்லாஹ்வை மாத்திரம் தூய்மையுடன் வணங்க வேண்டுமென்றே அன்றி கட்டளையிடப்பட வில்லை ." என்று கூறுகின்றான் ,

( ஸூரா அல் பய்யினா 5ம் வசனம் .)

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் முஆத் எனும் நபித்தோழரிடம் பின் வருமாறு வினவினார்கள் . முஆதே .. ஒரு அடியான் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன ? ஒரு அடியானுக்கு அல்லாஹ் செய்ய வேண்டிய கடமை என்ன என்று உமக்குத் தெரியுமா ?என வினவ அதற்கவர் அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள் என்று பதிலளித்தார்.. அதற்கு நபியவர்கள் அல்லாஹ்வுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமை அல்லாஹ்வை மாத்திமே வணங்குவதுடன் அவனுக்கு எதையும் இணை வைக்காதிருத்தலாகும் .அல்லாஹ் மனிதனுக்குச் செய்ய வேண்டியதாவது அவனுக்கு இணை வைக்காத மக்கள் அனைவரையும் வேதனை செய்யாது விட்டு விடுவதாகும் என பதிலளித்தார்கள் .

எனவே உன்மையான இறைவனான அல்லாஹ்வையே எமது இதயங்கள் வணங்க வேண்டும் .எமதுள்ளம் அவனது அன்பினால் நிறைவு பெற வேண்டும் அவனையே ஆதரவுவைத்து அவனிடமே

அனைத்தையும் கேட்டு அவனிடமே உதவி கோரி அவனுக்கு மாத்திமே அஞ்சி வாழ வேண்டும் .

“ அல்லாஹ் மாத்திமே (வணங்கப்பட தகுதி பெற்ற) உன்மையான இறைவன் .அவனன்றி நீங்கள் வழிபடும் அனைத்துமே போலியானவை . உன்மையான அல்லாஹ் உயர்வு மிக்கவன் . மிகப்பெரியவன் .

(ஸூரத்துல் ஹஜ் ௬௨ ம் வசனம் .)

## (தவ்ஹீத்) ஓரிறைக்கொள்கையின் அகமியங்கள் ,

1 – ஓரிறைக்கொள்கைதான் இந்த இஸ்லாமிய மார்க்கத்தின் ஆணிவேராகும் . அதுவே மார்க்கத்தின் ஆரம்பமும் முடிவுமாகும் .அனைத்து தூதர்கள் நபிமார்களின் போதனைகளும் அதன் அடிப்படையிலே அமைந்திருந்தன ,

௨ – இந்த ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டே அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்தான் .அவர்களுக்கு தூதுவர்களை அனுப்பினான் .வேதக்கட்டளைகளை இறக்கினான் .இந்தக்கொள்கையினை

மையமாகக் கொண்டே மனிதர்கள் நற்பாக்கியமிகு மு.:மின்கள் – துர்ப்பாக்கியமிகு காபிர்கள் என இரு பிரிவினராகப் பிரிகின்றனர் .

3 – இந்த ஓரிறைக் கொள்கைதான் பருவமடைந்த ஒவ்வொருவர் மீதும் விதிக்கப்படும் முதலாவது கடமையாகும் . இந்தக்கொள்கையின் வாயிலாகவே ஒருவன் இஸ்லாம் எனும் கோட்டைக்குள் நுழைகின்றான் . ஒவ்வொரு முஸ்லிமும் அக்கொள்கையை தழுவிய நிலையிலே இவ்வுலகை விட்டுப்பிரிந்து செல்கின்றான் .

## நாம் உன்மையான தவ்ஹீத் வாதிகளா ?

எங்கள் அனைவரிடத்திலும் உன்மையான அசல் ஓரிறைக்கொள்கை இருக்க வேண்டியது மிக அவசியமாகும் . அதாவது சிர்க் ,பித்அத் , நூதன செயல்ப்பாடுகள் , மௌட்டீகக்கொள்கைகள் ,பாவச்செயல்கள் போன்றவற்றிலிருந்து முழுமையாக விடுபட்டு ஓரிறைக்கொள்கையை முழுமையாக ஏற்று வாழ்வதையே உன்மையான தௌஹீத் எனப்படும் .

.இந்த தௌஹீதை சுருக்கமாக இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம் .
∴ – ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்தே இருக்க வேண்டிய தௌஹீத் .
∴ – ஒவ்வொருவரும் தெரிந்திருப்பது விரும்பத்தக்கதாகக் கருதப்படும் தௌஹீத் விளக்கங்கள் .
இதில் முதலாம் வகைத் தௌஹீத் மூன்று விடயங்களைத் தெரிந்திருப்பதன் மூலம் உருவாகும் .

1 – தௌஹீதைத் தகர்க்கக்கூடிய சிர்க் எனும் இணை வைத்தலிலிருந்து முற்றாக விடுபட்டிருத்தல் .

௨ – இஸ்லாத்தில் இல்லாத பித்அத்துக்கள் – நூதன அனுஷ்டானங்கள் அனைத்தை விட்டும் நீங்கியிருத்தல் .

3 – தௌஹீதை ஆட்டம் காணச்செய்யும் பாவச்செயல்கள் அனைத்தை விட்டும் விடுபட்டிருத்தல் .

இம்மூன்று விடயங்களையும் கடைப்பிடிப்பதன் மூலம் ஒருவர் தவ்ஹீத் வாதியாகத் திகழ முடியும் .
இரண்டாம் வகைத் தௌஹீதுக்குப் பின் வரும் விடயங்கள் நிறைவு பெற்றிருப்பது அவசியமாகும் .

o – இஹ்லாஸ் எனும் மனத்தூய்மையின் அதி உயர் படித்தரமாகிய அப்பழுக்கற்ற இஹ்லாஸை அடைந்து கொள்ளல் .
o – யகீன் எனும் உறுதியான நம்பிக்கையின் உயர் படித்தரத்தை அடைந்து கொள்ளல் .
o – பொறுமையின் அதிஉயர் படித்தரமாகிய – எடுத்ததற்கெல்லாம் அல்லாஹ் அல்லாதவர்களிடம் முறையிடும் நிலையைத்தவிர்த்து கஷ்டங்களை –துன்பங்களை மனப்பூர்வமாக ஏற்றுப்பொறுமையைக் கடைபிடிக்கும் நிலையை உருவாக்கல் .
o – அல்லாஹ் அல்லாத எவரிடமும் எதையும் கேட்காமல் அல்லாஹ்விடம் மாத்திரமே கேட்டுப்பெற்றுக் கொள்ளும் நிலையை உருவாக்கல் .
o – தவக்குல் – இறைவனிடமே அனைத்தையும் பாரம் சாட்டல் எனும் பண்பின் முழுமைத்துவத்தை அடைந்து (பல் சுவை உணவுகளை உண்ணல் போன்ற ) ஆகுமான சில விடயங்களைக்கூட அல்லாஹ்வுக்காகத் தவிர்த்து வாழும் தன்மையை ஏற்படுத்துதல் .
o – மஹப்பத் எனும் இறையன்பை அடைவதற்காக உபரியான வணக்க வழிபாடுகள் மூலம் அல்லாஹ்விடம் மிகுந்த நெருக்கத்தையும் அன்பையும் ஏற்படுத்திக் கொள்ளல் . போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம் .

எனவே மேற்கூறிய முறைப்படி முழுமையான தவ்ஹீதைக் கடைப்பிடித்து வாழ்பவருக்கு நிரந்தர நரகில் நுழைவதைவிட்டும் பாதுகாப்பும் அபயமும் கிடைக்கின்றன . அதே போல் கடமையான தவ்ஹீதை மாத்திரம் கடைப்பிடித்து ஷிர்க்கையும் பெரும் பாவங்களையும் தவிர்ந்து நடப்பவருக்கு உலகிலும் மறுமையிலும் அபயமளிக்கப்படுகிறது .

ஆகவே ' ஷிர்க் – இணை வைப்பதென்பது மிகக் கொடியதோர் நோயாகும் . அதன் வாடை கூட எம்மீது பட்டு விடாமல் காத்துக்

கொள்வது எம் அனைவர் மீதும் கடமையாகும் . அல்லாஹ்அல்குர்ஆனிலே ஸிர்க்கின் விபரீதம் பற்றி இவ்வாறு கூறுகின்றான் .

﴿ إِنَّ ٱللَّهَ لَا يَغۡفِرُ أَن يُشۡرَكَ بِهِۦ وَيَغۡفِرُ مَا دُونَ ذَٰلِكَ لِمَن يَشَآءُۚ ... ﴾

[سورة النساء، الآية: ٤٨].

நிச்சயமாக அல்லாஹ் அவனுக்கு இணை வைக்கப்படுவதை ஒரு போதும் மன்னிக்கவே மாட்டான் . அதல்லாத இதர பாவங்களைத் தான் விரும்பியோருக்கு மன்னிப்பான் .

(ஸூரா அன் நிஸா 48 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் ……

﴿ ٱلَّذِينَ ءَامَنُواْ وَلَمۡ يَلۡبِسُوٓاْ إِيمَٰنَهُم بِظُلۡمٍ أُوْلَٰٓئِكَ لَهُمُ ٱلۡأَمۡنُ وَهُم مُّهۡتَدُونَ ٨٢ ﴾ [سورة الأنعام، الآية: ٨٢].

எவர்கள் விசுவாசம் கொண்டு அவ்விசுவாசத்துடன் (ஸிர்க் எனும் ) அநீதியையும் கலந்து விடாதிருக்கின்றார்களோ அவர்களுக்கு (இறைவனிடம் ) பாதுகாப்பு இருக்கிறது , அவர்கள் தான் நேர்வழி பெற்றவர்கள் .

( ஸூரா அல் அன்ஆம் 82 ம் வசனம் .)

## ஸிர்க்கின் வகைகள் .

தவ்ஹீதைத் தகர்த்தெறிந்து தரை மட்டமாக்கும் ஒரு மிகப்பயங்கர விடயமே ஸிர்க்காகும் . இந்த ஸிர்க்கை மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கலாம் .

முதலாவது – ( அஸ்ஸிர்குல் அக்பர் ) மிகப்பெரிய ஸிர்க்காகும் . இது ஈமானின் அடிப்படையையே தகர்த்து விடக்கூடியது , இதைச்செய்யக்கூடியவர் தனது மரணத்திற்கு முன் இறைவனிடம் பச்சாத்தாபப்பட்டு பாவமன்னிப்புக் கோரினாலேயன்றி அதை அல்லாஹ் ஒரு போதும் மன்னிக்க மாட்டான் . இந்த வகை ஸிர்க்கைச் செய்த ஒருவர் தவ்பா இன்றி மரணித்தால் அவர் நிரந்தர நரகத்திற்கே சென்று விடுவார் .

## இந்த வகை சிர்க்கில் ஒருவர் எவ்வாறு வீழ்கின்றார் .?

இபாதத்கள் வணக்க வழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரியன .இவைகளில் எதையேனும் ஒருவர் அல்லாஹ் அல்லாதோருக்காகச் செய்தால் அவர் ஸிர்க்குல் அக்பர் எனும் மிகப் பெரிய ஸிர்க்கைச்செய்தவராகின்றார் . அல்லாஹ்விடமன்றி விக்ரகங்களிடத்திலோ, வலிமார்கள் ,நல்லடியார்களிடத்திலோ துஆக்கேட்டு இரத்தல், அவை தமது தேவைகளை நிறைவேற்றும் என நம்புதல், அவைகளை அல்லாஹ்வை நேசிப்பது போல் நேசித்தல் , அல்லாஹ்வுக்கு அஞ்சுவது போல் அவர்களுக்கும் அஞ்சுதல், அவர்கள் பெயரில் அறுத்துப்பலியிடல் யாவுமே இந்த வகை ஸிர்க்கிலேயே அடங்கும் .

இரண்டாவது – அஸ்ஸிர்க்குல் அஸ்கர் எனும் சிறிய இணை வைப்பு . இந்த வகை இணைவைப்பு தவ்ஹீதின் அடிப்படையைத் தகர்க்காவிடிலும் முழுமையான தௌஹீதை இல்லாமல் செய்து விடும் அதே போல்பெரிய ஸிர்க்கில் ஒருவன் காலடியெடுத்து வைப்பதற்கு இதுவே காரணமாக இருக்கின்றது . இதற்கு உதாரணமாக அல்லாஹ் அல்லாதவர்களின் பெயரில் சத்தியம் செய்தல் ,முகஸ்துதிக்காக வணக்கம் புரிதல் போன்றவற்றைக்கொள்ளலாம் .

மூன்றாவது – அஸ்ஸிர்க்குல் கபிய்.:(மறைமுகமான இணைவைப்பு ) மக்களின் இதயங்களில் இருக்கும் இணைவைப்பைச் சார்ந்த கொள்கைகள் ,தவறான எண்ணங்கள் போன்றவை இவ்வகை ஸிர்க்கில் அடங்கும் .இவ் வகை சிர்க் அவரவரின் எண்ணத்திற்கேற்ப சிறிய ஸிர்க்காகவோ , பெரிய ஸிர்க்காகவோ கணிக்கப்படும் . நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ,...

சிறிய ஸிர்க் தான் எனது உம்மத்தினரிடத்தில் ஏற்பட்டு விடுமோ என நான் அதிகம் அஞ்சுகிறேன் . என நபியவர்கள் கூறிய போது சிறிய ஸிர்க் என்றால் என்னவென்று தோழர்கள் வினவினார்கள் .அதுதான் முகஸ்துதி (க்காகச்செய்யும் இபாதத் ) என்று நபியவர்கள்கூறினார்கள் . ( ஆதாரம் அஹ்மத் )

## இபாதத் என்றால் என்ன ?

இபாதத் என்பது அல்லாஹ் விரும்பி பொருந்தி ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து விடயங்களையும் உள்ளடக்கும் ஒரு பொதுப்பெயராகும் . அல்லாஹ்விடம் நெருக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உள்ளம் , உடலுறுப்புக்கள் , நாவு சார்ந்த அனைத்து செயற்பாடுகளும் இபாதத்தில் அடங்கும் . பொதுவாகச் சொல்வதானால் அல்லாஹ்வும் அவனது தூதரும்

எம்மீது விதியாக்கிய அனைத்துமே இபாதத் என்ற வட்டத்தினுள் அடங்கும் .

ஈமான் கொள்ளல் , அல்லாஹ்வை அஞ்சுதல் , அவனிடம் பொறுப்புச்சாட்டல் போன்றன உள்ளத்தால் உண்டாகும் இபாதத்களாகும் .
தொழுகை , நோன்பு , ஸக்காத் , ஹஜ், போன்றுன உடலுறுப்புக்களால் உண்டாகும் இபாதத்களாகும் .
திக்ரு செய்தல் ,குர்ஆன் ஓதல் போன்றன நாவினால் ஏற்படும் இபாதத்களாகும் .

எந்தவொரு இபாதத்தாக இருப்பினும் இரண்டு நிபந்தனைகள் அதில் நிறைவேறாத வரை அது அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது .

1– இக்லாஸ் எனும் மனத்தூய்மை – எந்தவொரு வணக்கமும் எவ்வித இணை வைப்புமின்றி அப்பழுக்க ற்ற முறையில் செய்யப்பட வேண்டும் .(லாஇலாஹ இல்லல்லாஹ்) வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வேயன்றி வேறு எவரமில்லை என்று சாட்சி சொல்வதன் அர்த்தமே இதுதான் . இது பற்றி இறைவன் இவ்வாறு இயம்புகிறான் …..

﴿ أَلَا لِلَّهِ ٱلدِّينُ ٱلۡخَالِصُۚ وَٱلَّذِينَ ٱتَّخَذُواْ مِن دُونِهِۦٓ أَوۡلِيَآءَ مَا
﴿ نَعۡبُدُهُمۡ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلۡفَىٰٓ إِنَّ ٱللَّهَ يَحۡكُمُ بَيۡنَهُمۡ فِي مَا هُمۡ
﴿ فِيهِ يَخۡتَلِفُونَۗ إِنَّ ٱللَّهَ لَا يَهۡدِي مَنۡ هُوَ كَٰذِبٞ كَفَّارٞ ﴿٣﴾ ﴾ [سورة الزمر، الآية:3].

“ நீ இறைவனை மனத்தூய்மையுடனும் ,மார்க்கம் அவனுக்கேயுரியது எனும் எண்ணத்துடனும் வணங்கு . மேலும் அறிந்து கொள் .. தூய மார்க்கம் அவனுக்கு மாத்திரமே சொந்தம் . ( ஸூரா ஸுமர் 3 ம் வசனம் ,)

﴿ وَمَآ أُمِرُوٓاْ إِلَّا لِيَعۡبُدُواْ ٱللَّهَ مُخۡلِصِينَ لَهُ ٱلدِّينَ حُنَفَآءَ …
﴿ ﴾ [سورة البينة، الآية:5].

அல்லாஹ்வை –அவனுக்காகவே கலப்பற்ற தூய வணக்கத்தைச் செலுத்தி , தீய மார்க்கங்களை விட்டும்

வீடுபடவேண்டுமன்றேயன்றி அவர்கள் கட்டளையிடப்பட வில்லை. ( ஸூரா அல் –பய்யினா.:.)

உ – எந்த வணக்க வழிபாட்டிலும் நபி (ஸல்) அவர்களையே வழிகாட்டியாக்கி அவர்கள் கூறிய வாறே வழிபடல் வேண்டும் . எனவே ஒவ்வொருவரும் எந்தவொரு இபாதத் செய்வதாயினும் அதை நபியவர்கள் செய்திருக்கின்றார்களா, அதுபற்றி சொல்லியிருக்கின்றார்களா என அவதானித்து அவர்கள் வழிகாட்டியவாறே கூட்டல் குறைவின்றி செய்தல் வேண்டும் இதுவே முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் என்று சாட்சி பகர்வதன் அர்த்தமாகும் .

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் …..

﴿ قُلۡ إِن كُنتُمۡ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِي يُحۡبِبۡكُمُ ٱللَّهُ وَيَغۡفِرۡ لَكُمۡ ذُنُوبَكُمۡۚ ﴾

﴿ [سورة آل عمران، الآية:٣١].

நபியே கூறுங்கள் நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னை(நபி ஸல் அவர்களை) ப்பின் பற்றுங்கள் .அப்போது அல்லாஹ்வும் உங்களை நேசித்து உங்கள் பாவங்களையும் மன்னிப்பான் .

(ஸூரா ஆல இம்ரான் 31ம் வசனம் )

மேலும் கூறுகின்றான் …

﴿ … وَمَآ ءَاتَىٰكُمُ ٱلرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمۡ عَنۡهُ فَٱنتَهُواْۚ …

﴿ ﴾ [سورة الحشر، الآية:٧].

உங்கள் ரஸூல் (ஸல்) உங்களுக்கு காட்டித்தந்தவைகளை நீங்கள் எடுத்து நடவுங்கள் அவர் தடை செய்தவைகளை வீட்டு விலகுங்கள் .

( ஸூரத்துல் ஹஸ்ர் 7 ம் வசனம் .)

எனவே பின் வரும் இரண்டு விடயங்களையும் கடைப்பிடித்து நடப்பதன் மூலம் ஒருவன் தான் அல்லாஹ்வின் அடிமை என்பதை நிரூபிக்கின்றான் .

1– அல்லாஹ்வை முழுமையாக மனப்பூர்வமாக நேசித்தல் . அதாவது மற்ற எந்த நபர் மீதோ, பொருள் மீதோ உள்ள

நேசத்தை விட அல்லாஹ்வின் நேசத்தை முன்னிலைப்படுத்த வேண்டும் .

உ – அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிந்து கட்டுப்பட்டு நடத்தல் . அதாவது அவனது கட்டளைகளோ தடையுத்தரவுகளோ வரும் போது அவற்றிக்கு முழமையாகக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் ,

"நான் அல்லாஹ்வின் அடியார் " என்று ஒருவர் கூறும் போது இறையச்சம்,பணிவு, இறையன்பு,நல்லெண்ணம் ஆகிய பண்புகள் அவரிடம் இருந்தாக வேண்டும் .அவைதான் அவர் அல்லாஹ்வை ஏக இறைவனாக ஏற்றுள்ளார் என்பதற்கு கட்டியம் கூறி நிற்கின்றன . இவற்றின் மூலமாகத்தான் ஒருவர் அல்லாஹ்வின் நேசத்தையும் ,திருப்பொருத்தத்தையும் பெற்றுக்கொள்கிறார் .தனது அடியான் –தான் அவனுக்கு விதியாக்கிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் தன் பக்கம் நெருங்கி வர வேண்டுமென அல்லாஹ் விரும்புகின்றான் . அவ்வாறே அடியான் உபரியான வணக்கங்களில் ஈடுபடும் போதெல்லாம் அல்லாஹ்வுக்கும் அவனுக்கும் இடையிலான நெருக்கம் அதிகரிக்கின்றது .அதனால் இறைவனிடத்தில் அவனது அந்தஸ்த்தும் அதிகரிக்கின்றது . அதன் காரணமாக இறையருள் கொண்டு அவன் சுவனம் பிரவேசிக்க முடிகின்றது .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ ٱدۡعُواْ رَبَّكُمۡ تَضَرُّعٗا وَخُفۡيَةًۚ إِنَّهُۥ لَا يُحِبُّ ٱلۡمُعۡتَدِينَ ۝ ﴾

[سورة الأعراف، الآية: ٥٥].

நீங்கள் உங்கள் இறைவனை பணிவுடனும் மறைவாகவும் அழையுங்கள் .நிச்சயமாக அவன் எல்லை மீறுபவர்களை நேசிப்பதில்லை .

( ஸூரா அல் அ:ராப் ∴ 55 ம் வசனம் )

# அல்லாஹ் ஒருவனே என்பதை நிரூபிக்கும் ஆதாரங்கள்.

அல்லாஹ் ஒருவனே என்பதைப் பறைசாட்டும் அத்தாட்சிகள் அதிகம் உள்ளன .அதுபற்றி ஒருவன் யோசித்து அதுபற்றிய சிந்தனையிலே தனது கவனத்தைத்திருப்பினால் அவன் ஆழ்ந்த அறிவு பெறுவதுடன் அல்லாஹ்வின் ஒருமைத்துவம் , அவனது செயல்கள் ,பெயர் பண்புகள் பற்றிய இறை நம்பிக்கையும் அவனிடத்தில் அதிகரிக்கின்றன . அல்லாஹ் ஒருவனே என்பதற்கான அத்தாட்சி ஆதாரங்களாக பின்வருவனவற்றைக் கொள்ள முடியும் .

**அ**– இப்பிரபஞ்சத்தின் பிரமாண்டமான படைப்பும் , அதன் நுட்பமான அமைப்பும் , அதில் வாழும் பல் வேறு உயிரினங்களும் , அதன் நேர்த்திமிகு முறைதவறா இயக்கமும் எங்ஙனம் நிகழ்கின்றது ? . இது பற்றி ஒருவன் நியாய உணர்வுடனும் , தூர திருஷ்டியுடனும் சிந்தித்தால் இறைவன் ஒருவன் உள்ளதை நம்புவான் . ஒருவன் வானம் பூமி, சூரியன் ,சந்திரன் போன்றன எவ்வாறு உருவாகின ? என்பது பற்றியோ ,மனிதன் , விலங்குகள் , தாவரங்கள் , கற்கள் போன்றன எங்ஙனம் உண்டாயின என்பது பற்றியோ சிந்திக்கத் தலைப்பட்டால் சர்வ வல்லமையுள்ள பரி பூரண ஆற்றல் வாய்ந்த ஒரு மாபெரும் படைப்பாளன் இருப்பதை ஏற்றுக்கொள்வான் . எனவே அவனே வணங்கப்படத் தகுதியான ஒரே இறைவனாவான் என்பது எளிதாகப் புலப்படுகின்றது .

அல்லாஹ் கூறுகின்றான் ……

﴿ وَجَعَلْنَا فِي ٱلْأَرْضِ رَوَٰسِيَ أَن تَمِيدَ بِهِمْ وَجَعَلْنَا فِيهَا فِجَاجًا
سُبُلًا لَّعَلَّهُمْ يَهْتَدُونَ ﴿٣١﴾ وَجَعَلْنَا ٱلسَّمَآءَ سَقْفًا مَّحْفُوظًا
وَهُمْ عَنْ ءَايَٰتِهَا مُعْرِضُونَ ﴿٣٢﴾ وَهُوَ ٱلَّذِى خَلَقَ ٱلَّيْلَ
وَٱلنَّهَارَ وَٱلشَّمْسَ وَٱلْقَمَرَ كُلٌّ فِى فَلَكٍ يَسْبَحُونَ ﴿٣٣﴾ ﴾

﴿ [سورة الأنبياء، الآيات:٣١-٣٣].

பூமி மனிதர்களுடன் சேர்ந்து அசைந்து விடாமலிப்பதற்காக அதில் உறுதியான மலைகளை நாம் ஆக்கினோம் . மேலும் அவர்கள் நேர்வழி நடப்பதற்காக விசாலமான பாதைகளையும் அதில் அமைத்தோம் . எனினும் அவர்களோ அவற்றின் அத்தாட்சிகளை விட்டும் புறக்கணித்தவர்களாகவே இருக்கின்றனர் .மேலும் அல்லாஹ்வே சூரியனையும் , சந்திரனையும்,இரவையும் , பகலையும் படைத்தான் .(இவை) ஒவ்வொன்றும் (வானத்தில் ) தமக்குரிய மண்டலங்களில் நீந்திச் செல்கின்றன . .
( ஸூரத்துல் அன்பியா.: 33 ம் வசனம் .)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ……

﴿ وَمِنْ ءَايَـٰتِهِۦ خَلْقُ ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ وَٱخْتِلَـٰفُ أَلْسِنَتِكُمْ
﴿ وَأَلْوَٰنِكُمْ إِنَّ فِى ذَٰلِكَ لَـَٔايَـٰتٍ لِّلْعَـٰلِمِينَ ﴿٢٢﴾ ﴾ [سورة الروم، الآية:٢٢].

வானங்களையும் பூமிகளையும் அவன் படைத்திருப்பதும் , உங்களது மொழிகளும் நிறங்களும் மாறுபட்டிருப்பதும் அவனது (அல்லாஹ்வின் ) அத்தாட்சிகளில் உள்ளதாகும் . இதில் அறிவுடையோர்க்கு நிச்சயம் பல அத்தாட்சிகள் இருக்கின்றன .
( ஸூரா அல் றூம் ௨௨ ம் வசனம் )

**ஆ —** அல்லாஹ் தனது நபிமார்களுக்கு அருளிய அற்புதங்கள் , அத்தாட்சிகள், வேத வியாக்கியானங்கள், சட் திட்டங்கள் – இவைகளும் அல்லாஹ் ஒருவன்தான் என்பதற்கும் அவன்தான் வணங்கி வழிபடுவதற்குத் தகுதியானவன் என்பதற்கும் போதிய சான்றாகும் .ஏனெனில் இவ்வாறான அற்புதங்களும் காலத்தால் மாறாத – களங்கமற்ற – ,பிழை கண்டுபிடிக்க முடியாத, மனித கோடி அனைத்திற்கும் பொருத்தமான சட்டதிட்டங்களும் மனிதனைப்படைத்த அவனின் தேவைகளை அறிந்தவனான அல்லாஹ்விடத்திலிருந்தேயன்றி வேறு எவரிடத்திலிருந்தும் வெளிப்பட்டிருக்க முடியாது .

இது பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான் ..

﴿ لَقَدۡ أَرۡسَلۡنَا رُسُلَنَا بِٱلۡبَيِّنَٰتِ وَأَنزَلۡنَا مَعَهُمُ ٱلۡكِتَٰبَ
وَٱلۡمِيزَانَ لِيَقُومَ ٱلنَّاسُ بِٱلۡقِسۡطِۖ ... ﴾ [سورة الحديد، الآية:٢٥].

நிச்சயமாக நாம் நமது தூதர்களை தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பி வைத்தோம் .அவர்களுடன் வேதத்தையும், மனிதர்கள் கடைப்பிடித்து நடப்பதற்காக (பகுத்தறிவெனும் ) தராசையும் இறக்கி வைத்தோம் .

( ஸூரா அல் ஹதீது 25 ம் வசனம் .)

இத்தகைய வேதங்களுக்கேல்லாம் அடிப்படையாகத்திகழ்வது தான் அல்குர்ஆனாகும் . இது ஓர் அற்புதமிக்க இறை அத்தாட்சியாகும் .இதன் அகமியம் பற்றி அல்லாஹ் இவ்வாறு சிலாபித்துக் கூறுகிறான் .........

﴿ قُل لَّئِنِ ٱجۡتَمَعَتِ ٱلۡإِنسُ وَٱلۡجِنُّ عَلَىٰٓ أَن يَأۡتُواْ بِمِثۡلِ هَٰذَا
ٱلۡقُرۡءَانِ لَا يَأۡتُونَ بِمِثۡلِهِۦ وَلَوۡ كَانَ بَعۡضُهُمۡ لِبَعۡضٖ ظَهِيرٗا ٨٨
﴾ [سورة الإسراء، الآية:٨٨].

நபியே கூறுங்கள் . இக்குர்ஆனைப் போன்றதொன்றைக் கொண்டு வருவதற்காக மனித வர்க்கமும் ஜின் வர்க்கமும் (சேர்ந்து ) பாடுபட்டாலும் இதனைப் போன்றதொன்றை அவர்களால் கொண்டு வர முடியாது . அவர்களில் சிலர் சிலருக்கு உதவியாக இருப்பினும் சரியே .

( ஸூரா அல் இஸ்ரா.: 77ம் வசனம் )

**இ — இதயங்களின் இயற்கை நிலை.** அதாவது அல்லாஹ் மனிதர்களின் இதயங்களை இயற்கையிலேயே அவனை ஏற்று நடக்கும் அமைப்பிலேயே சிருஷ்டித்துள்ளான் .அல்லாஹ் மாத்திரம் தான் வணங்கப்படத் தகுதியானவன் எனும் ஓரிறைக் கொள்கை இயல்பாகவே மனிதர்களின் இதயங்களில் வேறூன்றி இருக்கிறது . ஏனெனில் ஒரு மனிதனுக்குத் தாங்க முடியாத இன்னல் ஏற்படும் போது இயல்பாகவே அவனது இதயம்

கடவுளின் பக்கம் நாட்டம் கொள்கிறது . அவனது பிரச்சினைகளை அவனிடமே முறையிட்டு பரிகாரம் காண முற்படுகின்றது . எனினும் அவனைச்சூழ்ந்துள்ள மாசுபட்ட சூழலும் , இறைவன் பற்றிய தவறான சிந்தனைப் போக்கும், பல கடவுள்க் கொள்கைச் சித்தாந்தமும் உன்மையான இறைவனைக் கண்டறிய முடியாமல் அவனுக்குத்தடை வேலி போட்டு விடுகின்றன . இந்த அழுக்குகள் , தடைகள் யாவும் விலகி சுதந்திரமாகச் சிந்திக்க அவன் தலைப்பட்டால் நிச்சயம் உன்மையான கடவுளாகிய அல்லாஹ்வின் பக்கமே மீண்டு வருவான் .அவன் மாத்திரமே வணக்கத்திற்குரியவன் என்றும் , அவனது பண்புகள் பெயர்கள் யாவும் தன்னிகரற்றவை என்றும் ஏற்று அவன் தனது நபிமார்களுக்கு அருளிய வேதங்களையும் ஏற்று அதன் பிரகாரம் வாழ முற்பட்டு விடுவான் ,

இது பற்றி அல்லாஹ் தனது திரு மறையில் பின்வருமாறு கூறுகின்றான் ……

﴿ فَأَقِمْ وَجْهَكَ لِلدِّينِ حَنِيفًا ۚ فِطْرَتَ ٱللَّهِ ٱلَّتِى فَطَرَ ٱلنَّاسَ عَلَيْهَا ۚ لَا
تَبْدِيلَ لِخَلْقِ ٱللَّهِ ۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلْقَيِّمُ وَلَٰكِنَّ أَكْثَرَ ٱلنَّاسِ لَا
يَعْلَمُونَ ﴿٣٠﴾ ۞ مُنِيبِينَ إِلَيْهِ وَٱتَّقُوهُ وَأَقِيمُوا۟ ٱلصَّلَوٰةَ وَلَا
تَكُونُوا۟ مِنَ ٱلْمُشْرِكِينَ ﴿٣١﴾ ﴾ [سورة الروم، الآيتان: ٣٠، ٣١].

நபியே நீர் உமது முகத்தை மார்க்கத்தின் பால் திருப்பியவராக நிலை நிறுத்தி விடுவீராக .. அல்லாஹ் மனிதர்களை எந்த மார்க்கத்தில் படைத்தானோ அத்தகைய மார்க்கமான இஸ்லாத்திலே நிலைத்திருப்பீராக . அல்லாஹ்வின் படைப்பில் எவ்வித மாற்றமும் கிடையாது .இதுவே நிலையான மார்க்கமாகும் .எனினும் மனிதர்களில் அதிகமானோர் இதனை அறிந்து கொள்ள மாட்டார்கள் . விசுவாசிகளே அல்லாஹ்வின் பால் மீண்டவர்களாக இஸ்லாத்திலே நிலைத்திருங்கள் .இன்னும் அவனைப்பயந்து கொள்ளுங்கள் , தொழுகையை நிறைவேற்றுங்கள் .இணைவைப்போரில் உள்ளவர்களாக நீங்கள் ஆகி விடாதீர்கள் .

. (அல்குர்ஆன் )

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் …… (உலகில்) பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இயற்கையிலேயே உன்மையான (இஸ்லாமிய) மார்க்கத்திலேயே பிறக்கின்றன .எனினும் அதனது பெற்றோர்களே அதனை யூதனாகவோ, கிருஷ்தவனாகவோ, நெருப்பு வணங்குபவனாகவோ ஆக்கி விடுகின்றனர் .எனக்கூறிவிட்டு மேலே கூறப்பட்ட வசனத்தை ஓதிக்காட்டினார்கள் .

. (ஆதாரம் ஸஹீஹுல் புகாரி )

# மலக்குகள் (வானவர்கள்) பற்றியநம்பிக்கை

## மலக்குகள் பற்றி நாம் எவ்வாறு ஈமான் கொள்ள வேண்டும் ?.

மலக்குகள் பற்றிய நம்பிக்கையை இரு பிரிவுகளாக வகுக்கலாம் .

1– சுருக்கமாக மலக்குகளைப்பற்றி அறிந்து கொள்ளல் .( ஈமான் முஜ்மல் )

2– அவர்களை விரிவாக விளங்கியறிந்து ஈமான் கொள்ளல் .( ஈமான் முபஸ்ஸல் ).

சுருக்கமான முறையில் அறிந்து நம்புவதென்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் .

1–மலக்குகள் எனும் ஒரு படைப்பு இருப்பதாகவும் அவர்களையும் இறைவனே தன்னை வணங்கி வழிபடுவற்காகப் படைத்தான் எனவும் , அவர்கள் இப்பிரபஞ்சத்தில் இருப்பது யதார்த்தமே வெறும் கற்பனையல்ல ஏனைனில் அவர்களை நாம் கண்களால் காணாததால் அவர்கள் இல்லையென முடிவு செய்யக்கூடாது எனவும் நாம் உறுதியாக நம்பியாக வேண்டும் . ஏனைனில் இப்பிரபஞ்சத்தில் காற்று மின்சக்தி, நெருப்பு போன்ற எத்தனையோ கண்ணுக்குத்தெரியாத வர்க்கங்கள் இருக்கின்றன . அவை நமது கட்புலத்திற்குப் புலப்படாததால்

அவை இல்லையெ நாம் முடிவு செய்வதில்லையே ... அதே போல் மலக்குகள் இருப்பது உன்மை . எனினும் அவர்களைப் பார்க்கும் சக்தி எமது கண்களுக்கு இல்லாததால் எம்மால் அவர்களைக் காண முடிவதில்லை . அந்த சக்தி எமது விழிகளுக்கு வழங்கப்பட்டால் நிச்சயம் எம்மால் அவர்களைக் காண முடியும் . ஏனைனில் எமது நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மலக்குகளின் தலைவரான ஜிப்ரீல் அவர்களை இரு தடவைகள் கண்டுள்ளார்கள் . சில நபித்தோழர்களும் மலக்குகள் சிலரை நேரிலே பார்த்திருக்கின்றார்கள் . இதற்கு பின் வரும் நபி மொழி சான்று பகர்கின்றது .

“ நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை அவர்களது சுய வடிவத்திலே கண்டிருக்கின்றார்கள் . அப்போது அவர்களுக்கு எழுநூறு இறக்கைகள் இருந்தன . ஒவ்வொரு இறக்கைகளும் வானத்தையே மறைக்கும் அளவுக்குப் பிரமாண்டமாக இருந்தன .

( அறிவிப்பவர் இப்னு மஸ்ஊத் , ஆதாரம் அஹ்மத் )

“ நபி (ஸல்) அவர்களிடம் ஜிப்ரீல் அலை அவர்கள் தனி வெள்ளை நிற உடையணிந்த , மிகக்கரிய தலை முடியுடைய ஒரு மனிதரின் ரூபத்தில் வருகை தந்தார்கள் அவரிடம் பிரயாணத்திலிருந்து வந்ததற்கான அறிகுறிகள் எதுவும் தென்பட வில்லை . அவரை ஸஹாபாக்களில் எவரும் இதற்கு முன் கண்டதுமில்லை .

( அறிவிப்பவர் உமர்(றழி) ஆதாரம் அஹ்மத் ).

3 – அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு வளங்கியுள்ள அந்தஸ்த்தினை நாமும் அவர்களுக்கு வழங்க வேண்டும் .அதில் கூட்டல் குறைத்தல் செய்தலாகாது . அதாவது அவர்களும் அல்லாஹ்வின் அடியார்களே . அவனது கட்டளைப்படி செயற்படுபவர்களே . அல்லாஹ் அவர்களைக் கண்ணியப்படுத்தியுள்ளான் . தனக்கு நெருக்கமானவர்களாக ஆக்கியுள்ளான் . அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியளவு சக்தி அதிகாரத்தைத் தவிர வேறெந்த விடயத்திலும் எவ்வித அதிகாரமும் அவர்களுக்குக் கிடையாது . அல்லாஹ்வின் அனுமதியன்றி தங்களுக்கோ , பிறருக்கோ எவ்வித உதவியோ தீங்கோ செய்ய அவர்களால் முடியாது என்று உறுதியாக நம்பிக்கை கொள்ள வேண்டும் .

இதன் காரணத்தினாலேயே அல்லாஹ்வுக்காக நாம் செய்யும் கிரிகைகளில் எதையுமே அவர்களுக்குச் செய்ய நாம் அனுமதிக்கப்பட வில்லை .அவ்வாறே கிருஸ்தவர்கள் மலக்குகளைப் பரிசுத்த ஆவி என்று நம்பி அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்த்து கற்பித்தது போல் நாம் செய்து விடவும் கூடாது .

இது பற்றி அல்லாஹ் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான் ……

﴿ وَقَالُواْ ٱتَّخَذَ ٱلرَّحۡمَٰنُ وَلَدٗاۗ سُبۡحَٰنَهُۥۚ بَلۡ عِبَادٞ مُّكۡرَمُونَ ﴿٢٦﴾

لَا يَسۡبِقُونَهُۥ بِٱلۡقَوۡلِ وَهُم بِأَمۡرِهِۦ يَعۡمَلُونَ ﴿٢٧﴾ ﴾

[سورة الأنبياء، الآيتان: ٢٦ ، ٢٧].

(கிருஷ்தவர்களான ) அவர்களோ றஹ்மானான அல்லாஹ் (தனக்கு ) குமாரர்களை ஆக்கிக்கொண்டான் எனக்கூறுகின்றனர் .அவன் மிகப்பரிசுத்தமானவன் (மலக்குகள் ) அவனது அடியார்களே (யன்றி அவனது குமாரர்களல்லர் .)

( ஸூராஅல் அன்பியா: 26 வசனம்)

மேலும் கூறுகின்றான் …… அவர்கள் (மலக்குகள் )அல்லாஹ்வுக்கு மாறு செய்ய மாட்டார்கள் . அவர்கள் கட்டளையிடப்பட்டவைகளையே நிறைவேற்றுகின்றனர் . ( ஸூரா அத்தஹ்ரீம் 6 ம் வசனம் )

மேற்கூறப்பட்டவாறு சுருக்கமாக மலக்குகளைப்பற்றி அறிந்து ஈமான் கொண்டிருப்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் – பெண் மீதும் கடமையாகும் . இந்தளவேனும் சுருக்கமாக ஒருவர் அறியாமலிருப்பதை ஒரு போதும் நியாயப்படுத்த முடியாது .

### மலக்குகளைப்பற்றி விரிவாக அறிதல் .

மலக்குகளைப்பற்றி விரிவாக அறிந்து நம்பிக்கை கொள்வதற்கு ஈமான் முபஸ்ஸல் எனப்படும் இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருக்கும் .

1— மலக்குகள் எப்படிப்பட்டவர்கள் என்று அறிதல் . அதாவது அல்லாஹ் மனித வர்க்கத்தை மண்ணிலிருந்தும் ஜின் வர்க்கத்தை நெருப்பிலிருந்தும் படைத்தது போல் மலக்குகளை ஒளிப்பிழம்பிலிருந்து படைத்துள்ளான் . இதற்கு பின்வரும் ஹதீது சான்றாக அமைகின்றது .

மலக்குகள் ஒளியினால் படைக்கப்பட்டுள்ளார்கள் .ஜின் வர்க்கத்தினர் நெருப்பினாலான பிழம்பிலிருந்து படைக்கப்பட்டுள்ளார்கள் .ஆதம் (அலை) ( மனித வர்க்கம் ) உங்களுக்கு (முன்னமே ) கூறப்பட்ட மண்ணிலிருந்து படைக்கப்பட்டுள்ளனர் என நபியவர்கள் கூறினார்கள் . ( ஆதாரம் முஸ்லிம் )

உ—மலக்குகளின் எண்ணிக்கையை அறிதல் . அதாவது மலக்குகளின் மொத்த எண்ணக்கையைஅல்லாஹ் வைத்தவீர வேறு எவராலும் கணிப்பீட்டுக்கூற முடியாது . அவர்களது எண்ணிக்கை அந்தளவு அதிகமானது . மட்டிட முடியாதது .வானத்தில் நான்கு வீரலளவுள்ள சிறியதொரு இடத்தில் கூட ஒரு மலக்கு வணங்கிக் கொண்டு அல்லது சுஜூது செய்து கொண்டு இருக்கிறார்.அதே போல் அல் ம.:மூர் எனும் ஏழாவது வானத்திலுள்ள ஒரு வீட்டினுள் தினமும் ஏழாயிரம் மலக்குகள் உட்பிரவேசிக்கின்றனர் . ஆனால் ஒரு போதும் அவர்கள் மீண்டு வருவதில்லை .
மறுமையில் நரகத்தைக் கொண்டு வரப்படும் .அது பிரமாண்டமான எழுவதாயிரம் கயிறுகளால் பிணைக்கப்பட்டிருக்கும் . ஒவ்வொரு கயிற்றினையும் எழுவதாயிரம் மலக்குகள் சேர்ந்து இழுத்துக் கொண்டு வருவார்கள் . ( ஆதாரம் முஸ்லிம் .)

மேற்படி ஹதீதிலிருந்து மலக்குகளின் எண்ணிக்கை மட்டிட முடியாதது என்பது தெளிவாகின்றது . நரகத்தை இழுத்துவரும் பணியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையே ஒன்பது மில்லியன் நாலாயிரமாகின்றது . அப்படியாயின் அல்லாஹ்வின் அனைத்துப் பணிகளிலும் ஈடுபடும் மலக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பது சொல்லாமலேயே தெளிவாகின்றது . அவர்களைப்படைத்து அவர்களின் எண்ணிக்கையையும் அறிந்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் அல் ஹம்து லில்லாஹ் .

3 –மலக்குகளின் பெயர்களைப்பற்றி அறிதல் . அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலும் , நபி (ஸல்) அவர்கள் ஹதீதிலும் கூறிய மலக்குகளின் பெயர்களைக் கட்டாயம் நாம் அறிந்து வைத்திருத்தல் வேண்டும் . அவர்களில் மிகப்பிரமாண்டமான படைப்பாகத் திகழ்பவர்கள் மூவராகும் .

**அ – ஜிப்ரீல் ...** இவர்கள் பரிசுத்தமானதோர் ஜீவனாகும் . இவர்களுக்கு ரூஹுல் குத்ஸ் என்றும் கூறப்படும் . இவர்களது பணி இதயங்களை ஈமானிய உயிர் பெற வைக்கும் வஹீ எனும் வேத வாக்கியங்களை இறைவனிடமிருந்து நபி மார்களுக்கு அறிவிப்பதாகும் .

**ஆ –மீக்காயீல் ...** இவர்களது பணி பூமி உயிர் பெறுவதற்கான மழைநீரைப் பொழிய வைப்பதாகும் . அல்லாஹ் அவர்களுக்கிட்ட கட்டளைப்படி உரிய இடத்தில் உரியளவு மழையைப் பொழிய வைப்பார்கள் .

**இ –இஸ்ராபீல் ...** யுக முடிவையும் மறுமை நாள் ஆரம்பிக்க இருப்பதையும் அறிவிக்குமுகமாக ஸூர் எனும் குழலை ஊதுவதற்கு நியமிக்கப்பட்டவர்கள் .இந்த ஸூர் ஊதியவுடன் இறந்த மனித உடல்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்து இறை உத்தரவு கொண்டு எழுந்து நிற்கும் .

4 –மலக்குகளின் குணாதிசயங்களைப் பற்றி அறிந்து வைத்திருத்தல் . அதாவது மலக்குகள் யதார்த்தமான ஒரு படைப்பாகும் .அவர்களுக்கும் உடல் உறுப்புக்களைல்லாம் உள்ளன .அவர்களுக்கு இயல்பான உருவமைப்பும் , தனிப்பட்ட குணாதிசயங்களும் உள்ளன என்று நம்ப வேண்டும் .

அவர்களது தன்மைகளில் சில ......

அ – இவர்கள் ஒரு பிரமாண்டமான படைப்பாகும் . இவர்களுக்கு மிகப் பெரிய உடலமைப்பு உண்டு .அல்லாஹ் அவர்களை அவ்வாறே சிருஷ்டித்துள்ளான் . அவர்களுக்கு இடப்பட்ட பாரிய பொறுப்புகளுக்கேட்ப அதிகபட்ச

சக்தியையும் அவர்களுக்கு வழங்கியுள்ளான் .அவர்களை வானங்களிலும் பூமியிலும் தனது கட்டளைகளை செயற்படுத்துவதற்காக நியமித்துள்ளான் .

ஆ – இவர்கள் இறக்கைகளையுடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர் . அல்லாஹ் இவர்களில் சிலருக்கு இரு இறக்கைகளையும் , சிலருக்கு மூன்று , சிலருக்கு நான்கு இறக்கைகளையும் படைத்துள்ளான் . மேலும் சிலருக்கு இதை விட அதிகளவு இறக்கைகளையும் அளித்துள்ளான் . நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை) அவர்களை அவர்களது சுய ரூபத்தில் கண்ட போது அவர்களுக்கு அறுநூறு இறக்கைகள் இருந்தன . அவை வானத்தையே மறைத்து விடுமளவுக்குப் பிரமாண்டமாயிருநதன .

இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் ……

﴿ٱلْحَمْدُ لِلَّهِ فَاطِرِ ٱلسَّمَٰوَٰتِ وَٱلْأَرْضِ جَاعِلِ ٱلْمَلَٰٓئِكَةِ رُسُلًا
أُو۟لِىٓ أَجْنِحَةٍ مَّثْنَىٰ وَثُلَٰثَ وَرُبَٰعَ ۚ يَزِيدُ فِى ٱلْخَلْقِ مَا يَشَآءُ ۚ ... ﴾

﴿ [سورة فاطر، الآية:١].

﴿ يُسَبِّحُونَ ٱلَّيْلَ وَٱلنَّهَارَ لَا يَفْتُرُونَ ﴿٢٠﴾ ﴾ [سورة الأنبياء، الآية:٢٠].

வானங்களைப்படைத்த – இவ்விரண்டு மூன்று நான்கு இறக்கைகளையுடைய மலக்குகளைத் தூதுவர்களாக ஆக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் . தனது படைப்பிலே தான் விரும்பியதை அவன் அதிகமாக்குவான் . அவன் அனைத்து விடயத்திலும் சக்தி வாய்ந்தவன் . ( ஸூரா பாதிர் 1ம் வசனம் .)

இ –அவர்களுக்கு உண்ணல் , பருகல் போன்ற எவ்வித உலக தேவைகளும் கிடையாது . உண்ணல் ,பருகல் மற்றும் திருமணம் , இன விருத்தி செய்தல் போன்ற எவையுமே அவசியமற்றவர்களாகவே அல்லாஹ் அவர்களைச் சிருஷ்டித்துள்ளான் .

ஈ – மலக்குகள் நுண்ணறிவு மிக்கவர்கள் . நல்இதயம் படைத்தவர்கள் . இவர்கள் அல்லாஹ்வுடன் உரையாடுவார்கள் .

அல்லாஹ்வும் அவர்களுடன் நேரடியாகப் பேசுவான் . நபி ஆதம் (அலை) போன்ற சில நபிமார்களுடன் இவர்கள் பேசியுள்ளார்கள் .

ஊ — இவர்கள் பல வடிவங்களில் உருமாறும் சக்தி மிக்கவர்கள் .தமது உன்மை உருவமல்லாத வேறு பல மனிதர்களின் உருவங்களிலும் தோன்றும் சக்தியை அல்லாஹ் இவர்களுக்கு அளித்துள்ளான். இதிலிருந்து விக்ரக ஆராதனை புரிவேரின் “ மலக்குகள் இறைவனின் பெண் மக்கள் “ எனும் வாதம் போலியானது என்பது தெளிவாகின்றது . அவர்கள் எவ்வாறு உருமாறுகின்றனர் என்பது எமக்குத் தெரியாது .எனினும் அவர்களுக்கு அந்த சக்தி உள்ளது உன்மை . நாம் அவர்களையும் மனிதர்களையும் வேறுபடுத்த முடியாத அளவுக்கு மிக நுணுக்கமான முறையில் பல்வேறு உருவங்களில் தோன்றுவார்கள் .

உ — மலக்குகளும் மரணிக்கக் கூடியவர்களே ….. . மலக்குகள் மரணத்தை விட்டும் விதி விலக்கானவர்களல்ல . உயிர் வாங்கும் மலக்கு உற்பட அவர்கள் அனைவரும் மரணிக்கக்கூடியவர்களே . அவர்கள் மரணித்த பின் தங்களுக்கு இடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவார்கள் .

ஊ — மலக்குகளின் வணக்க வழிபாடுகள் .

மலக்குகள் பல் வேறு வகையான வணக்க வழிபாடுகள் மூலம் அல்லாஹ்வை வணங்கி வழிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் .தொழுகை , துஆ , தஸ்பீஹ் ,ருகூஉ, ஸுஜூது, இறையச்சம் ,இறையன்புகொள்ளல் பேன்ற பல்வேறு வணக்கங்களில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள் .

அவர்களின் வணக்க வழிபாடுகளில் சில ……

1— சோர்வின்றி என்நேரமும் நிரந்தரமாக வணங்கி வழிபடல் .

2— அல்லாஹ்வை முழுமையான மனத்தூயமையுடன் வணங்குதல் .

3— அல்லாஹ்வுக்கு முழுமையாக அடிபணிந்து எவ்வித தப்பும்செய்யாதிருத்தல் .

4— அல்லாஹ்வுடன் பணிவுடன் நடந்து கொள்ளல் .

எ — மலக்குகளின் பணிகள் பற்றி அறிந்திருத்தல் . மலக்குகள் அல்லாஹ் தமக்கிட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர் . அவர்களின் முக்கிய பணிகளில் சில ……
1 – அல்லாஹ்வின் அர்ஸ் எனும் சிம்மாசனத்தைச் சுமந்து கொண்டிருத்தல் .
உ – நபி மார்களுக்கு வஹி எனும் வேதக்கட்டளைகளைக் கொண்டு வருதல் .
3 – சுவர்க்கம் , நரகத்திற்குப் பொறுப்பாக இருத்தல் .
4 – மலைகளின் மீது ஆதிக்கம் செலுத்தல் .
5 – மேகக்கூட்டங்களை இழுத்து வருதல் ,மழை பொழிவித்தல் , தானியங்களை முளைப்பித்தல் போன்றவற்றிக்குப் பொறுப்பாயிருத்தல் .
6 – சூர் எனும் குழலை ஊதுவதற்குப் பொறுப்பாயிருத்தல் .
7 – ஒவ்வொரு மனிதனும் செய்யும் அனைத்துச் செயல்களையும் பதிவு செய்தல் .
8 – மனிதனை ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பதற்கும் அவர்கள் பொறுப்பானவர்கள் . எனினும் அல்லாஹ் அவனுக்குத் தீர்மானித்து விட்ட தீங்கு ஏற்படும் போது தமது பணியிலிருந்து விலகிக் கொள்வார்கள் . எனவே அத்தீங்கு அவனுக்கு ஏற்படுகின்றது .
9 – எப்போதும் மனிதனுடனேயே ஒன்றாயிருந்து அவனை நன்மையின் பால் அழைப்பவர்கள் .
10 – கர்ப்பப்பையிலே இந்திரியத்தின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்கள் . இவர்களே இறை உத்தரவுப்படி கர்ப்பப் பையிலே உள்ள சிசுக்கு உயிர் கொடுப்பதுடன் அதன் வாழ் நாளின் அளவு, அது புரியும் செயல்கள் அதற்குரிய உணவுகள் , அந்த ஜீவன் மறுமையில் ஈடேற்றம் பெறுக்கூடியதா – அன்றேல் துர்ப்பாக்கியமுள்ளதா? என்பன போன்றவற்றையும் இறை உத்தரவுப்படி பதிவு செய்கின்றனர் .
11 – மனிதனின் உலக வாழ்க்கை முடிவுறும் நேரம் நெருங்கியதும் அவனது உயிரைக் கைப்பற்றப் பொறுப்பானவர்கள் .
12 – கப்ர் – புதை குழியிலே ஒவ்வொரு மனிதனிடமும் கேள்வி கணக்குக் கேட்பதற்காகவும் –பின் அவனது அமல்களுக்கேட்ப அவனுக்கு சுவன இன்பமளித்தல் அல்லது நரக வேதனை செய்தல் போன்ற விடயங்களுக்குப் பொறுப்பானவர்கள் .

13 – நபி(ஸல்) அவர்களுக்கு தமது உம்மத்தவர் கூறும் ஸலாத்தை எத்தி வைத்தல் .

போன்ற பணிகளை உதாரணமாகக்கூறலாம் . எனவே ஒரு முஸ்லிம் நபி(ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்வதற்காக மதீனாவுக்குத்தான் செல்ல வேண்டுமென்பதில்லை . அவன் எங்கிருந்து ஸலாம் சொன்னாலும் அது நபி (ஸல்) அவர்களைச் சென்றடையும் . எனவே மதீனாவுக்குச் செல்லும் போது மஸ்ஜிதுன் நபவீயில் தொழும் நோக்கத்திலேயே செல்ல வேண்டும் .

இவை தவிர மலக்குகளுக்கு வேறுபல பொறுப்புகளும் உள்ளன . மிக முக்கியமானவைகள் மாத்திரமே இங்கே கூறப்பட்டுள்ளனர் .

அல்லாஹூத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ......

﴿ ٱلَّذِينَ يَحۡمِلُونَ ٱلۡعَرۡشَ وَمَنۡ حَوۡلَهُۥ يُسَبِّحُونَ بِحَمۡدِ رَبِّهِمۡ وَيُؤۡمِنُونَ بِهِۦ

وَيَسۡتَغۡفِرُونَ لِلَّذِينَ ءَامَنُواْ ... ﴾ [سورة غافر، الآية:٧].

﴿ قُلۡ مَن كَانَ عَدُوّٗا لِّجِبۡرِيلَ فَإِنَّهُۥ نَزَّلَهُۥ عَلَىٰ قَلۡبِكَ بِإِذۡنِ ٱللَّهِ ... ﴾

[سورة البقرة، الآية:٩٧].

அர்ஷைச் சுமப்பவர்களும் அவர்களைச் சூழ உள்ளவர்களும் அல்லாஹ்வின் புகழைக் கூறித் துதிக்கின்றனர் .மேலும் இறை விசுவாசிகளுக்குப் பாவ மன்னிப்பும் தேடுகின்றுனர் .

( ஸூரா அல் காபிர் 7 ம் வசனம் .)

## மலக்குகள் விடயத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன ?

1 – மலக்குகள் எனும் படைப்பினர் இருப்பதாக நம்ப வேண்டும் .
2 – அவர்களை நேசித்து கண்ணியப்படுத்துவதுடன் அவர்களது சிறப்பியல்புகளை அறிந்து வைத்திருத்தல் வேண்டும் .

3 – அவர்கள் விடயத்தில் தரக்குறைவாக நடத்தல் , ஏசுதல் , பரிகசித்தல் போன்றவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும் .
4 – அவர்கள் வெறுக்கக்கூடிய விடயங்களை விட்டு விலகியிருத்தல் .மலக்குகள் –நல்ல மனிதர்கள் வெறுக்கும் அனைத்து விடயங்களையும் வெறுக்கும் இயல்பு உடையவர்கள் .

.

## மலக்குகள் பற்றி நம்பிக்கை கொள்வதால் ஏற்படும் பிரயோசனங்கள் .

1 – முழுமையான ஈமானை அடைந்து கொள்ள முடியும் . ஏனைனில் அவர்களை நம்புதல் ஈமானின் முக்கியமானதொரு அம்சமாகும் . அவர்களை நம்பாதவன் உன்மை மு:.மினாக இருக்க முடியாது .
உ – இவ்வாறான பேராற்றல் மிகு மலக்குகளைப்படைத்த அல்லாஹ் எவ்வாறான பேராற்றல் மிக்கவன் என்பதை சிந்தித்து அறிந்து கொள்ள முடிகின்றது .
3 – இம்மலக்குகளின் குணாதிசயங்கள் பண்புகள் பற்றியெல்லாம் ஒருவன் அறியும் போது அவனது இதயத்தில் ஈமான் அதிகரிக்கின்றது .
4 – அல்லாஹ் தனது சில அடியார்களுக்கு மலக்குகளது உதவிகள் , செயற்பாடுகளைக் காட்டும் போது அதனால் அவர்களுக்கு அமைதியும் நிம்மதியும் ஏற்படுகின்றது .
5 – ஒரு மனிதன் தனது இஸ்லாமியக் கடமைகள் வணக்க வழிபாடுகளை செவ்வனே நிறைவேற்றும் போது அதன் மூலம் அவனுக்கு மலக்குகளின் துஆ கிடைப்பதுடன் அவனுக்காக அவர்கள் பாவ மன்னிப்பும் கோருகின்றனர் .
6 – பாவ காரியங்கள் புரிவோரை மலக்குகள் சபிப்பார்கள் என்று அறியும் ஒருவன் அச்செயல்களை விட்டும் நீங்கி வாழ தன்னைப் பழக்கிக் கொள்கின்றான் .
7 – மனிதர்களை ஆபத்தின் போது காத்தல் , அவர்களது செயல்களை எழுதிப் பாதுகாத்தல் போன்ற பணிகளுக்காக அல்லாஹ் அதிகளவில் மலக்குகளை நியமித்திருப்பதை ஒருவன் நம்பும் போது தன்னையறியாமலேயே அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த முற்படுகின்றான் .

# வேதங்களைப் பற்றி நம்புதல்

அல்லாஹுத்தஆலா தனது நபி மார்களுக்கு அருளிய வேதங்களைப் பற்றி நம்பிக்கை கொள்வது ஈமானின் மூன்றாவது கடமையாகும் . அல்லாஹுத்தஆலா தனது நபிமார்களுக்குத் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து அனுப்பினான் .மனிதர்கள் மீது அவன் கொண்ட கருணையின் காரணத்தால் அவர்கள் இரு உலகிலும் வெற்றி பெற்று நேர்வழி அடைய வேண்டும் என்பதற்காகவும் , மக்கள் சீரான வாழ்க்கையை அமைத்து தமக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்பதற்காகவும் வேதங்களை அருளினான் இது பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் ......

﴿ لَقَدۡ أَرۡسَلۡنَا رُسُلَنَا بِٱلۡبَيِّنَـٰتِ وَأَنزَلۡنَا مَعَهُمُ ٱلۡكِتَـٰبَ وَٱلۡمِيزَانَ لِيَقُومَ
ٱلنَّاسُ بِٱلۡقِسۡطِۖ ... ﴾ [سورة الحديد، الآية:٢٥].

நிச்சயமாக நாம் நமது தூதர்களை தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பி வைத்தோம் .அவர்களுக்கு வேதங்களையும் , மக்கள் நீதியுடன் நடக்க வேண்டுமென்பதற்காக மீஸான் ( எனும் நேர்மைத் தராசையும் ) அருளினோம் .

( ஸூரத்துல் ஹதீத் 25 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் .........

﴿ كَانَ ٱلنَّاسُ أُمَّةً وَٰحِدَةً فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ مُبَشِّرِينَ وَمُنذِرِينَ

وَأَنزَلَ مَعَهُمُ ٱلْكِتَٰبَ بِٱلْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ ٱلنَّاسِ فِيمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ ۚ

﴾ [سورة البقرة، الآية: ٢١٣].

மனிதர்கள் அனைவரும் ஒரே சமுதாயத்தினராகவே இருந்தனர் .எனவே அல்லாஹ் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யவும் , நற் சோபனம் கூறுவதற்காகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான் .மேலும் அவர்கள் கருத்து வேற்றுமைப்படும் போது சிறந்த முறையில் தீர்ப்புச் செய்வதற்காக உன்மையான வேதத்தையும் அருளினான் .

( ஸூரத்துல் பகரா 213 ம் வசனம் )

## <u>வேதங்களை நம்புவதென்றால் என்ன ?</u>

வேதங்களை நம்புவதென்பது அல்லாஹ் தனது நபிமர்களுக்கு வேதக்கட்டளைகளை ( மக்களை நல் வழியின் பால் அழைப்பதற்காக அருளினான் என்று நம்புவதாகும் . இவ்வேதங்கள் யதார்த்தத்திலே இறை வசனங்களாகும் . அவனது பேச்சாகும் .தன்னகத்தே நேர்வழியைப் பொதிந்துள்ள பிரகாசமாகும் . அதில் கூறப்பட்டுள்ள யாவும் உன்மையும் நேர்வழியுமாகும் என்று உறுதியாக நம்பி உன்மைப்படுத்துவதுடன் , அதனைப்பின்பற்றி நடப்பதும் அதில் கூறப்பட்டுள்ளவாறு செயற்படுவதும் எம்மீது கடமை என்றும் நம்ப வேண்டும். வேதங்களின் மொத்த எண்ணிக்கை அல்லாஹ்வுக்கு மாத்திரமே தெரியும் .

இது பற்றி அல்லாஹ் பின் வருமாறு கூறுகின்றான் ......

﴿ كَانَ ٱلنَّاسُ أُمَّةً وَٰحِدَةً فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ مُبَشِّرِينَ وَمُنذِرِينَ وَأَنزَلَ

مَعَهُمُ ٱلۡكِتَـٰبَ بِٱلۡحَقِّ لِيَحۡكُمَ بَيۡنَ ٱلنَّاسِ فِيمَا ٱخۡتَلَفُواْ فِيهِۚ

﴾ [سورة البقرة، الآية:٢١٣].

நிச்சயமாக அல்லாஹ் மூஸா நபியுடன் வசனித்தான் .
( பேசினான் .)

﴿ وَإِنۡ أَحَدٞ مِّنَ ٱلۡمُشۡرِكِينَ ٱسۡتَجَارَكَ فَأَجِرۡهُ حَتَّىٰ يَسۡمَعَ كَلَٰمَ ٱللَّهِ ... ﴾

[سورة التوبة، الآية:٦].

முஸ்ரிகீன்களில் ( இணைவைப்போரில் ) ஒருவர் உன்னிடம் அபயமளிக்குமாறு வேண்டினால் அல்லாஹவின் பேச்சை ( குர்ஆனை) செவியுறுவதற்காக அவனுக்கு நீ அபயமளிப்பாயாக .
( ஸூரத்துத் தவ்பா:. 6 ம் வசனம் ).

வேதங்களைப் பற்றி நம்பிக்கை கொள்வது ஈமான் கொள்ள வேண்டிய ஆறு விடயங்களில் ஒன்று .இதை மறுப்பவனிடம் ஈமான் இருக்க முடியாது . எனவே அல்லாஹுத்தஆலா தனது றஸூல் மார்களுக்கு அருளிய வேதங்கள் அனைத்தையும் நம்பி ஈமான் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும் .அவ்வாறே அவை இறைவனின் பேச்சாகும் . அதை இறைவன் நபிமார்களுக்கு இறக்கி வைத்தான் . அது ( மஹ்லூக் ) அவனது படைப்பினங்களில் உள்ளதல்ல –மாறாக அது இறை வசனமாகும் .யார் அவற்றை முழுமையாகவோ அல்லது ஒரு பகுதியையோ மறுக்கின்றார்களோ அவர் காபிராக ( இஸ்லாத்தை விட்டு விலகியவராக ) ஆகி விடுவார் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

அல்லாஹுத்தஆலா இது பற்றி இவ்வாறு கூறுகின்றான் ……

﴿ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ ءَامِنُواْ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَٱلۡكِتَـٰبِ ٱلَّذِى نَزَّلَ عَلَىٰ رَسُولِهِۦ وَٱلۡكِتَـٰبِ ٱلَّذِىٓ أَنزَلَ مِن قَبۡلُۚ وَمَن يَكۡفُرۡ بِٱللَّهِ وَمَلَـٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ وَٱلۡيَوۡمِ ٱلۡأَخِرِ فَقَدۡ ضَلَّ ضَلَـٰلاَۢ بَعِيدًا ﴿١٣٦﴾

[سورة النساء، الآية: ١٣٦].

விசுவாசிகளே அல்லாஹ்வையும் , அவனது தூதரையும் , அவருக்கு அவன் அருளிய வேதத்தையும் , அதற்கு முன் அவன் அருளிய வேதத்தையும் நீங்கள் நம்புங்கள் .(ஏனைனில் )எவர் அல்லாஹ்வையும் ,அவனது மலக்குகளையும் ,றஸூல் மார்களையும் ,யுக முடிவு நாளையும் நம்ப மறுக்கின்றாறோ அவர் நிச்சயமாக (இஸ்லாத்தை விட்டு) வழி தவறி விட்டார் .

. ( ஸூரத்துன் நிஸா.:. 167 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் …

﴿ وَهَـٰذَا كِتَـٰبٌ أَنزَلۡنَـٰهُ مُبَارَكٌ فَـٱتَّبِعُوهُ وَٱتَّقُواْ لَعَلَّكُمۡ تُرۡحَمُونَ ﴿١٥٥﴾ ﴾

[سورة الأنعام، الآية: ١٥٥].

இது நாம் இறக்கிய அருள் மிகு வேதமாகும் அதனைப்பின் பற்றி ஒழுகுங்கள் . உங்களுக்கு அருள் புரியப்படும் .

( ஸூரத்துல் அன்ஆம் 155 ம் வசனம் .)

## மக்களுக்கு வேத வழிகாட்டியின் அவசியம்

1– மக்கள் தமது சமய விவகாரங்களை அறிந்து கொள்வதற்காகவும் , தமக்கு வழிகாட்டியாகவும் இருக்க வேதம் அவசியம் .

2 – சமூகத்திற்கு மத்தியில் எற்படும் பிரச்சனை – சச்சரவுகளுக்கு நீதியான தீர்வைப் பெறுவதற்கு வேதம் துணை புரிகின்றது .

3 – நபிகளாரின் மறைவுக்குப்பின் மக்கள் அதே நேர்வழியைப் பின்பற்றி ஒழுகுவதற்கு இந்த வேத போதனைகள் வழிகாட்டுகின்றன .

4 – மறுமை நாளில் குற்றம் புரிந்த மக்கள் தம்மை நேர்வழிப்படுத்துவதற்கு எவருமே இருக்க வில்லை என்று சாக்குப்போக்கு கூறாமல் இருப்பதற்காக அல்லாஹ் இவ்வேதங்களை நபிமார்களுக்கு இறக்கியுள்ளான் .

அல்லாஹ் இது பற்றி தனது திரு மறையிலே கூறும் போது ......

﴿ كَانَ ٱلنَّاسُ أُمَّةً وَٰحِدَةً فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ مُبَشِّرِينَ وَمُنذِرِينَ
وَأَنزَلَ مَعَهُمُ ٱلْكِتَـٰبَ بِٱلْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ ٱلنَّاسِ فِيمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ ۚ... ﴾

[سورة البقرة، الآية:٢١٣].

மனிதர்கள் (அனைவரும் ஒரே ) சமூகத்தினர்களாகவே இருந்தனர் . அல்லாஹ் ( அவர்களுக்கு ) அச்சமூட்டி எச்சிக்கை செய்யவும், நன்மாராயம் கூறவும் நபிமார்களை அனுப்பி வைத்தான் . அவர்கள் மக்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உன்மையான தீர்ப்பளிப்பதற்காக அவர்களுக்கு வேதத்தையும் அருளினான் .

( ஸூரத்துல் பகரா 213 ம் வசனம் .)

# வேதங்களை நாம் எவ்வாறு நம்ப வேண்டும்

அல்லாஹ்வின் வேதங்கள் பற்றிய நம்பிக்கை இரு வகைப்படும் .
ஒன்று… சுருக்கமான நம்பிக்கை . ( ஈமான் முஜ்மல் .)
இரண்டு .. விரிவான நம்பிக்கை ( ஈமான் முபஸ்ஸல்.)

சுருக்கமான ஈமான் என்பது அல்லாஹுத்தஆலா தனது நபி மார்களுக்கு வேதங்களை அருளினான் என்று சுருக்கமாக நம்புவதாகும் .

விரிவான ஈமான் என்பது பின்வருமாறு அமைதல் வேண்டும் .

அதாவது அல்லாஹ் அல் குர்ஆனிலே பெயர் குறிப்பிட்டுள்ள தவ்ராத் , ஸபூர் , இன்ஜீல் , புர்கான் ஆகிய வேதங்களையும் நபி மூஸா , இப்றாஹீம் (அலை) ஆகியோருக்கு அருளிய சுஹுபுகள் ( வேத வாக்கியங்கள் ) போன்றவற்றையும் உன்மையானவை என நம்பிக்கை கொள்வதாகும் . மேலும் இவை தவிர அல்குர்ஆனில் பெயர் குறிப்பிடப்படாத —அல்லாஹ் தனது நபிமார்களுக்கு அருளிய வேதங்களையும் நம்புவதுடன் அவைகளின் பெயர்கள் அவற்றின் எண்ணிக்கை போன்றவற்றை அல்லாஹ்வையன்றி வேறு எவரும் அறியமாட்டார்கள் என்றும் நம்ப வேண்டும் .

இவ்வனைத்து வேதங்களும் அருளப்படட்டதன் நோக்கமாவது …… மனிதர்கள் அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி வழிபட வேண்டுமென்பதற்காகவும் , அவனுக்கு எந்தச்சிலையையோ ,விக்ரகத்தையோ ஒப்பாக்குவதன் மூலம் இணை கற்பித்து விடக்கூடாது என்பதற்காகவுமேயாகும் . அத்துடன் மக்களை நற்கருமங்களின்பால் ஊக்கப்படுத்தி — தீய விடயங்கள், குற்றச்செயல்களை விட்டும் பாதுகாத்து சீரான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காகவும் இவ்வேதங்கள் அருளப்பட்டன .எனவே ஒவ்வொரு வேதங்களின் சட்டதிட்டங்களிலும் சில வித்தியாசங்கள் இருப்பினும் அவையவை அருளப்பட்ட நபி மார்கள் அனைவரினதும் அழைப்புப்பணியின் குறிக்கோளும் ஒன்றாகவே இருந்துள்ளது . எனவே சுருங்கக்கூறின் — வேதங்களை நம்புவதென்பது வேதங்கள் முன்னைய நபிமார்களுக்கு அருளப்பட்டவை என்று நம்புவதாகும் . அல்குர்ஆனை நம்புவதென்பது அது நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது என்று நம்புவதுடன் அதில் கூறப்பட்டுள்ள சட்ட

திட்டங்கள் அனைத்தையும் கடைப்பிடித்து நடப்பதையும் குறிக்கும் .

அல்லாஹ்த்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் .

﴿ ءَامَنَ ٱلرَّسُولُ بِمَآ أُنزِلَ إِلَيۡهِ مِن رَّبِّهِۦ وَٱلۡمُؤۡمِنُونَۚ كُلٌّ ءَامَنَ بِٱللَّهِ وَمَلَٰٓئِكَتِهِۦ وَكُتُبِهِۦ وَرُسُلِهِۦ ... ﴾ [سورة البقرة، الآية:٢٨٥].

மு.:.மின்களும் றஸூல் ( ஸல் ) அவர்களும் தமக்கு அருளப்பட்ட வேதமான அல்குர்ஆனை ஈமான் கொண்டனர் . இவர்கள் அனைவரும் அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் , அவனது வேதங்களையும் ,றஸூல் மார்களையும் நம்பிக்கை கொண்டுள்ளனர் .

( ஸூரத்துல் பகரா 285 ம் வசனம் .)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ......

﴿ ٱتَّبِعُواْ مَآ أُنزِلَ إِلَيۡكُم مِّن رَّبِّكُمۡ وَلَا تَتَّبِعُواْ مِن دُونِهِۦٓ أَوۡلِيَآءَۗ ... ﴾

[سورة الأعراف، الآية:٣].

நீங்கள் – உங்களுக்கு உங்கள் இறைவன் புறத்திலிருந்து இறக்கப்பட்ட (அல்குர்ஆனைப் பின்பற்றுங்கள் . அவனையன்றி வேறு எவரையும் உங்கள் பாதுகாவலராக்கி விடாதீர்கள் .

# ஏனையவேதங்களைவிட அல்குர்ஆனுக்கு இருக்கும் சிறப்பம்சங்கள் .

அல்குர்ஆன் ஏனைய வேதங்களுடன் ஒப்பிடும் போது பல்வேறு சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது . அவைகளில் சில ......

1 – அதன் வார்த்தைகளும் அர்த்தங்களும் அற்புதமானதாகும் . அது போன்றதொன்றைக் கொண்டு வர எவராலும் முடியாது . அவ்வாறே அது கூறும் அறிவியல் உன்மைகளும் , பிரபஞ்சத்தைப் பற்றி அது கூறும் விபரங்களும் விசித்திரமானதாகும் .

2 – அல்குர்ஆன் இறை வேதங்களில் இறுதியானதாகும் . நபி முஹம்மத் அவர்கள் இறுதி நபியாக வந்து நபிமார்களின் வருகைக்கு முத்திரை வைத்தது போல அல்குர்ஆனும் இறுதி வேதமாக இறக்கப்பட்டு வேதங்களின் வருகைக்கு முத்திரையிட்டு விட்டது .

3 – அல்லாஹ்வே அல் குர்ஆனை இறுதி வரை பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றுள்ளான் . எனவே முன்னைய வேதங்களில் ஏற்பட்டதுபோல் மாற்றங்களோ திருத்தங்களோ , இடைச்சொருகல்களோ இவ்வேதத்தில் ஏற்பட மாட்டாது.

4 – அல்குர்ஆன் அதற்கு முன் இறக்கப்பட்ட வேதங்களை உன்மைப்படுத்தும் வகையிலும் அவற்றில் காணப்படும் நல்ல விடயங்களைக் கண்காணித்தும் இறக்கப்பட்டுள்ளது .

5 – அல்குர்ஆன் –அதற்கு முன் இறக்கப்பட்ட வேதங்கள் அனைத்தையும் மாற்றியமைத்து அவற்றைச் செல்லுபடியற்றதாக ஆக்கி விட்டது .

அல்லஹூத்தஆலா இதன் தனித்துவம் பற்றி இவ்வாறு கூறுகின்றான் ...

﴿ مَا كَانَ حَدِيثًا يُفْتَرَىٰ وَلَٰكِن تَصْدِيقَ ٱلَّذِى بَيْنَ يَدَيْهِ وَتَفْصِيلَ كُلِّ شَىْءٍ وَهُدًى وَرَحْمَةً لِّقَوْمٍ يُؤْمِنُونَ ﴿١١١﴾ ... ﴾ [سورة يوسف، الآية:١١١].

( இக்குர்ஆன் ) இட்டுக்கட்டப்பட்ட பேச்சல்ல .

( ஸூரா யூஸுப் 111 ம் வசனம் )

# முன்னைய வேதங்களில் காணப்படும் செய்திகளை ஏற்கலாமா .?

நபிமார்களுக்கு அறிவித்த முன்னைய வேதங்களில் கூறப்பட்டுள்ள அனைத்து செய்திகளும் அடிப்படையில் உன்மையானவைகளே அவையனைத்தும் அல்லாஹ் தனது நபிமார்களுக்கு அருளிய வேதக்கட்டளைகளே என்பதையும் அவையனைத்தும் சந்தேகத்திற்கிடமற்றவை என்றும் நாம் உறுதியாக அறிவோம் .

மனிதக்கரங்களால் மாசுபடுத்தப்பட்டு பல்வேறு திருத்தங்களும் இடைச்செருகல்களும் நிறைந்துள்ளன . ஆகவே அவை அன்று அல்லாஹ் நபிமார்களுக்கு இறக்கிய நிலையில் இன்று இல்லை . எனினும் எமது அல்குர்ஆனில் காணப்படும் சில அடிப்படை ஒழுங்குவிதிகள் ஏனைய வேதங்களிலும் இருப்பதை எம்மால் அவதானிக்க முடியும் . உதாரணத்திற்கு “ மறுமையில் ஒருவனின் பாவச்சுமைகளை வேறெருவன் சுமக்க முடியாது ஒவ்வொருவரும் தான் உலகில் புரிந்தவற்றின் பிரதிபலனையே கண்டு கொள்வர் , ஒவ்வொருவரின் செயல்களுக்கேட்ப அவர்கள் விசாரிக்கப்பட்டு கூலி வழங்கப்படுவர் “ போன்ற வசனங்களைக் கூறலாம் . மேற்கூறிய கருத்துக்களைப் பொதிந்துள்ள வசனங்கள் அல்குர்ஆனிலும் காணப்படுகின்றன .

அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

﴿ أَمْ لَمْ يُنَبَّأْ بِمَا فِي صُحُفِ مُوسَىٰ ﴿٣٦﴾ وَإِبْرَاهِيمَ الَّذِي وَفَّىٰ ﴿٣٧﴾ أَلَّا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ ﴿٣٨﴾ وَأَن لَّيْسَ لِلْإِنسَانِ إِلَّا مَا سَعَىٰ ﴿٣٩﴾ وَأَنَّ سَعْيَهُ سَوْفَ يُرَىٰ ﴿٤٠﴾ ثُمَّ يُجْزَاهُ الْجَزَاءَ الْأَوْفَىٰ ﴿٤١﴾ ﴾

[سورة النجم، الآيات: ٣٦-٤١].

மனிதனுக்குஅவன் புரிந்தவற்றின் கூலியே உண்டு . அவன் புரிந்த செயல்கள் பின்னர் அவனுக்குக் காட்டப்படும் என்பதையும் , ஓருவனின் பாவச் சுமைகளை பிறிதொரு ஆத்மா சுமக்க

மாட்டாது என்பதையும் நபி மூஸா , இப்றாஹீமின் வேதக்கட்டளைகளில் (அவனுக்கு ) அறிவிக்கப்பட வில்லையா ?
( ஸூரா அன் நஜ்ம் 41ம் வசனம் )

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ بَلۡ تُؤۡثِرُونَ ٱلۡحَيَوٰةَ ٱلدُّنۡيَا ١٦ وَٱلۡأٓخِرَةُ خَيۡرٞ وَأَبۡقَىٰٓ ١٧ إِنَّ هَٰذَا لَفِي ٱلصُّحُفِ ٱلۡأُولَىٰ ١٨ صُحُفِ إِبۡرَٰهِيمَ وَمُوسَىٰ ١٩ ﴾

[سورة الأعلى، الآيات: ١٦-١٩].

" எனினும் நீங்கள் உலக வாழ்க்கையையே ( பெரிதுபடுத்தி ) தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள் . ஆனால் மறுமை வாழ்வே மிகச் சிறந்ததும் நிரந்தரமானதுமாகும் . இந்த விடயம் முன்னைய சுஹுபுகளில் கூறப்பட்டுள்ளது . இப்றாஹீம் , மூஸா நபி போன்றோரின் சுஹுபுகளிலும் கூறப்பட்டுள்ளது .

## முன்னைய வேதங்களில் கூறப்பட்டுள்ள –வற்றை நாமும் கடைப்பிடிக்க வேண்டுமா?.

அல்குர்ஆனில் கூறப்பட்ட சட்டங்கள் அனைத்தையும் எடுத்து நடப்பது எம்மீது கடமையாகும் . ஆனால் முன்னைய வேதங்களைப் பொறுத்த வரையில் அவ்வாறல்ல .அவற்றைப் பொறுத்த வரை அவை எமது மார்க்கச் சட்டங்களுக்கு முரணாகக் காணப்படும் போது அவற்றைப்புறக்கணிக்க வேண்டும் . காரணம் அவை பொய்யானவை என்பதற்காகவல்ல . எனினும் எமது அல்குர்ஆன் அவற்றின் சட்டங்களைச் செல்லுபடியற்றதாக்கி விட்டதால் நாம் அவற்றை எடுத்து நடக்க வேண்டியதில்லை . எங்களது மார்க்கச் சட்டங்களுக்கு அவை ஏற்புடையதாக இருக்கும் போது இஸ்லாத்தைத் தழுவியதாக அவை உள்ளதால் அவற்றை ஏற்றுக் கொள்வோம் .இஸ்லாத்திற்கு ஏற்புடையதாகவோ, மாற்றமானதாகவோ

இருப்பது தெளிவில்லாத பட்சத்தில் அவைகளை ஏற்கவோ நிராகரிக்கவோ செய்யாது அதன் வழியே விட்டு விடுவோம் .

## அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வேதங்கள் .

அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள வேதங்களின் எண்ணிக்கை நான்காகும் .

1 – அல்குர்ஆன் ..இது இறுதி நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கி வைக்கப்பட்ட அல்லாஹ்வின் கலாமாகும் .அல்லாஹ் அருளிய வேதங்களில் இறுதியானதாகும் .இது இதற்கு முன் வந்த வேதங்கள் அனைத்தையும் மாற்றி விட்டது .அல்லாஹ் இவ்வேதத்தை இறுதி வரைக்கும் எதுவித மாற்றங்களோ இடைச்செருகல்களோ ஏற்படாமல் பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளான் . இது பற்றி அல்லாஹ் கூறுகையில்

﴿ إِنَّا نَحۡنُ نَزَّلۡنَا ٱلذِّكۡرَ وَإِنَّا لَهُۥ لَحَٰفِظُونَ ۝٩ ﴾ [سورة الحجر، الآية:٩].

….நிச்சயமாக நாமே திக்ர் (எனும் குர்ஆனை) இறக்கி வைத்தோம் . மேலும் நாமே அதைப் பாதுகாப்போம் .

﴿ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلۡكِتَٰبَ بِٱلۡحَقِّ مُصَدِّقٗا لِّمَا بَيۡنَ يَدَيۡهِ مِنَ ٱلۡكِتَٰبِ وَمُهَيۡمِنًا عَلَيۡهِۖ فَٱحۡكُم بَيۡنَهُم بِمَآ أَنزَلَ ٱللَّهُۖ… ﴾ [سورة المائدة، الآية:٤٨].

“நாம் அல்குர்ஆனை உன்மையானதாகவும் அதற்கு முன்னுள்ள வேதங்களை உன்மைப்படுத்தக் கூடியதாகவும் அவற்றின் சட்டதிட்டங்களை பேணியதாகவும் நாம் உமக்கு இறக்கி வைத்தோம் . எனவே (நபியே ) அவர்களுக்கு மத்தியில் (ஏற்படும் பிரச்சினைகளுக்கு) அல்லாஹ் இறக்கியதன் மூலம் தீர்ப்பு வழங்குவீர்களாக .

௨ – இஞ்ஜீல் … இவ்வேதத்தை அல்லாஹ் முன்னைய வேதங்களை உன்மைப்படுத்திய நிலையில் நபி ஈஸா (அலை) அவர்களுக்கு இறக்கி வைத்தான் . இவ்விடயத்தில் ஈஸா நபிக்கு அல்லாஹ் அருளிய தூய இஞ் ஜீல் வேதத்தை நம்புவதே நம்மீது கடமையாகும் .இன்று கிருஸ்தவர்களின் கரங்களில் தவழும்

மாற்றங்களுக்கும் இடைச் சொருகல்களுக்கும் உள்ளான இஞ்ஜீலை நாம் நம்ப வேண்டியதில்லை .
அல்லாஹ் இது பற்றி இவ்வாறு கூறுகின்றான் ...

وَءَاتَيْنَـٰهُ ٱلْإِنجِيلَ فِيهِ هُدًى وَنُورٌ وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَيْهِ مِنَ ٱلتَّوْرَىٰةِ وَهُدًى وَمَوْعِظَةً لِّلْمُتَّقِينَ ﴿٤٦﴾ [سورة المائدة، الآية:٤٦].

நிச்சயமாக நாமே அவருக்கு (ஈஸாவுக்கு ) இஞ்ஜீலை அருளினோம் . அதில் நேர்வழியும் ஒளியும் காணப்பட்டதுடன் தவ்றாத்திலுள்ளவற்றை உண்மைப்படுத்தி – நேர்வழிகாட்டியாகவும் இறையச்சமுள்ளோருக்கு உபதேசமாகவும் அருளப்பட்டுள்ளது .

தவ்றாத் ,இஞ்ஜீல் ஆகிய இரு வேதங்களும் தன்னகத்தே நபி முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவ நற்சேதியைக் கொண்டிருந்தன . இது பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான் ....

﴿ ٱلَّذِينَ يَتَّبِعُونَ ٱلرَّسُولَ ٱلنَّبِيَّ ٱلْأُمِّيَّ ٱلَّذِى يَجِدُونَهُۥ مَكْتُوبًا عِندَهُمْ فِى ٱلتَّوْرَىٰةِ وَٱلْإِنجِيلِ يَأْمُرُهُم بِٱلْمَعْرُوفِ وَيَنْهَىٰهُمْ عَنِ ٱلْمُنكَرِ وَيُحِلُّ لَهُمُ ٱلطَّيِّبَـٰتِ وَيُحَرِّمُ عَلَيْهِمُ ٱلْخَبَـٰٓئِثَ وَيَضَعُ عَنْهُمْ إِصْرَهُمْ وَٱلْأَغْلَـٰلَ ٱلَّتِى كَانَتْ عَلَيْهِمْ... ﴾ [سورة الأعراف، الآية:١٥٧].

உம்மி ( எழுத வாசிக்கத் தெரியாத ) நபியும் றஸூலுமான முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் அவர்களின் தவ்றாத்திலும் ,இஞ்ஜீலிலும் அவர்பற்றிக் கூறப்பட்டிருப்பதைக் கண்டு கொள்வார்கள் .

3 ஸபூர் ... இது அல்லாஹுத்தஆலா தாவூத் நபிக்கு அருளிய வேதமாகும் . இதனைப் பொறுத்த வரைக்கும் யூதர்களின் கரங்களால் மாசுபடுத்தப்படுவதற்கு முன்னிருந்த அசல்

வேதத்தை நாம் நம்ப வேண்டும் . இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான். ……..

﴿ ... وَءَاتَيۡنَا دَاوُۥدَ زَبُورٗا ﴿١٦٣﴾ ﴾ [سورة النساء، الآية:١٦٣].

நாம் நபி தாவூத் அவர்களுக்கு ஸபூர் வேதத்தை அருளினோம் .
( ஸூரத்துன் நிஸா.:. 163 ம் வசனம் )

4 தௌராத் …இந்த வேதத்தை அல்லாஹ் நபி மூஸா ( அலை) அவர்களுக்கு இறக்கி வைத்தான் . அதனை நேர்வழி காட்டும் ஒளியாக ஆக்கினான் .அதிலுள்ளவாறே பனூா இஸ்ரவேலர்களின் நபிமார்களும் , அவர்களின் மார்க்க அறிஞர்களும் தீர்ப்பு வழங்கி வந்தனர் . இதிலும் நபி மூஸா அவர்களுக்கு அல்லாஹ் அன்று அருளிய தூய கலப்பற்ற தௌராத்தை நம்புவதே எம்மீது கடமையாகும் . இன்று அவர்களிடம் காணப்படும் மாசு படுத்தப்பட்ட ,இடைச்சொருகல்கள் நிறைந்த தவ்றாத்தை நாம் நம்ப வேண்டியதில்லை .

அல்லாஹ் கூறுகின்றான் …

﴿ إِنَّآ أَنزَلۡنَا ٱلتَّوۡرَىٰةَ فِيهَا هُدٗى وَنُورٞۚ يَحۡكُمُ بِهَا ٱلنَّبِيُّونَ ٱلَّذِينَ

﴿ أَسۡلَمُواْ لِلَّذِينَ هَادُواْ [سورة المائدة، الآية:٤٤]

நிச்சயமாக நாம் நேர்வழியும் பிரகாசமும் மிக்க தவ்ராத்தை இறக்கி வைத்தோம் .
( ஸூரத்துல் மாயிதா.:. 44 ம் வசனம் .)

5 நபி மூஸா (அலை) ,நபி இப்றாஹீம் ( அலை) ஆகியோருக்கு அருளப்பட்ட ஸூஹூபுகள் ( வேத வாக்கியங்கள் ) இந்த ஸூஹூபுகளை அல்லாஹ் மேற்படி நபிமார்களுக்கு வழங்கினான் இந்த ஸூஹூபுகள் இன்று எம் வசம் இல்லை . இவை இழக்கப்பட்டுவிட்டன . அல்குர்ஆனிலோ அல்ஹதீதிலோ கூறப்பட்ட விடயங்கள் தவிர்ந்த ஏனைய இதிலுள்ள விடயங்கள் பற்றி யாருக்கும் தெரியாது .

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் …

﴿ أَمۡ لَمۡ يُنَبَّأۡ بِمَا فِي صُحُفِ مُوسَىٰ ﴿٣٦﴾ وَإِبۡرَٰهِيمَ ٱلَّذِي وَفَّىٰٓ ﴿٣٧﴾

أَلَّا تَزِرُ وَازِرَةٌ وِزْرَ أُخْرَىٰ ﴿٣٨﴾ وَأَن لَّيْسَ لِلْإِنسَـٰنِ إِلَّا مَا سَعَىٰ ﴿٣٩﴾
وَأَنَّ سَعْيَهُۥ سَوْفَ يُرَىٰ ﴿٤٠﴾ ثُمَّ يُجْزَىٰهُ ٱلْجَزَآءَ ٱلْأَوْفَىٰ ﴿٤١﴾ ﴾

[سورة النجم، الآيات:٣٨-٤١].

( தனது பணியை ) நிறைவேற்றிய நபி இப்றாஹீம் , நபி மூஸா ஆகியோரின் சுஹுபுகளில் ஒருவர் சுமையை மற்றவர் சுமக்க மாட்டார் என அறிவிக்கப்பட வில்லையா? . மேலும் ஒரு மனிதனுக்கு தான் உலகில் தேடிய ( நற் செயல்களே) அன்றி வேறு எதுவும் கிடைக்காது , அவனது செயல்கள் பின்னர் அவனுக்குக் காட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட வில்லையா ?.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ بَلْ تُؤْثِرُونَ ٱلْحَيَوٰةَ ٱلدُّنْيَا ﴿١٦﴾ وَٱلْـَٔاخِرَةُ خَيْرٌ وَأَبْقَىٰٓ ﴿١٧﴾ إِنَّ هَـٰذَا
لَفِى ٱلصُّحُفِ ٱلْأُولَىٰ ﴿١٨﴾ صُحُفِ إِبْرَٰهِيمَ وَمُوسَىٰ ﴿١٩﴾ ﴾

[سورة الأعلى، الآيات:١٦-١٩].

தனது மனதைப் பரிசுத்தப்படுத்தி இறைவனை நினைவு கூறி தொழுது வந்தவன் நிச்சயமாக வெற்றி பெற்று வீட்டான் . ஆனாலும் நீங்கள் உலக வாழ்வையே தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள் . (ஆனால் ) மறுமையின் வாழ்வே சிறந்ததும் நிரந்தரமானதுமாகும் . இந்த விடயம் முன்னைய ஸுஹுபுகளில் ( கூறப்பட்டு ) இருக்கின்றன .( அதாவது நபி மூஸா , நபி இப்றாஹீம் அலை) அவர்களது ஸுஹுபுகளில் கூறப்பட்டுள்ளன

( ஸூரத்துல் அஃலா 16 – 19ம் வசனங்கள் )

## நபிமார்களைப்பற்றிய நம்பிக்கை

நபிமார்களைப் பற்றிய நம்பிக்கை ஈமானின் ஒரு முக்கிய அம்சமாகும் . இவர்களைப் பற்றிய நம்பிக்கையன்றி ஒருவரிடம்

ஈமான் இருக்க முடியாது . நபிமார்களைப் பற்றிய நம்புதல் என்று கூறும் போது அல்லாஹூத்தஆலா தனது தீனை நிலைநாட்டும் பிரச்சாரப் பணிக்காக ஒவ்வொரு சமூகத்தினருக்கும் குறிப்பிட்ட சில நபிமார்களைத் தெரிவு செய்து கொண்டான் என்று நம்புவதுடன் , அவர்களைப் பின்பற்றி நடப்போர் நேர்வழியடைவதுடன் மறுப்போர் வழிகேட்டில் வீழ்வர் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும் . அத்துடன் அவர்கள் தமக்கு இடப்பபட்ட கட்டளைகளை செவ்வனே நிறைவேற்றினார்கள் மக்களுக்கு தீனை நல்ல முறையில் எடுத்துக் கூறினார்கள்., தீனை எதிர்த்தோருக்கு எதிராக ஜிஹாத் – அறப்போர் புரிந்தார்கள் , தமது கூற்றுக்கு தக்க ஆதாரங்களை முன் வைத்தார்கள் , தமக்கு இடப்பட்ட பணியினை கூட்டல் குறைத்தலோ இடைச் செருகல்களோ இன்றி முழுமையாக நிறைவேற்றி வைத்தார்கள் என்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அத்துடன் அல்லாஹ் தனது அல்குர்ஆனிலே பெயர் குறிப்பிட்ட – குறிப்பிடப்படாத அனைத்து நபிமார்களையும் நம்ப வேண்டும் . ஒவ்வொரு நபிமார்களும் தனக்குப் பின் வரும் நபியைப் பற்றிய சுப சேதியைக் கூறிச் செல்வர் . அந்த நபி தனக்கு முன் வந்த நபியின் பிரச்சாரத்தை உன்மைப்படுத்துபவராகக் காணப்படுவார் .

அல்லாஹூத்தஆலா தனது மறையிலே பின் வருமாறு கூறுகின்றான் ...

﴿ قُولُوٓاْ ءَامَنَّا بِٱللَّهِ وَمَآ أُنزِلَ إِلَيۡنَا وَمَآ أُنزِلَ إِلَىٰٓ إِبۡرَٰهِـۧمَ
وَإِسۡمَٰعِيلَ وَإِسۡحَٰقَ وَيَعۡقُوبَ وَٱلۡأَسۡبَاطِ وَمَآ أُوتِيَ مُوسَىٰ وَعِيسَىٰ
وَمَآ أُوتِيَ ٱلنَّبِيُّونَ مِن رَّبِّهِمۡ لَا نُفَرِّقُ بَيۡنَ أَحَدٖ
مِّنۡهُمۡ وَنَحۡنُ لَهُۥ مُسۡلِمُونَ ١٣٦ ﴾ [سورة البقرة، الآية:١٣٦].

“ நீங்கள் கூறுங்கள் .. நாம் அல்லாஹ்வையும் அவன் எங்களுக்கு இறக்கி வைத்த வேதத்தையும் , நபிமார்களான இப்றாஹீம் இஸ்மாயீல் , இஸ்ஹாக் , ய:கூப் , அவர்களது சந்ததியினர் ,மற்றும் நபி மூஸா, ஈஸா ஆகியோருக்கு இறக்கி வைக்கப்பட்ட வேதங்களையும் , மற்றும் நபிமார்களுக்கு அவர்களது

இரட்சகனிடமிருந்து கொடுக்கப்பட்ட வேதங்களையும் நாங்கள் நம்புகின்றோம் . அவர்களில் ஒருவரைவிட மற்றொருவரை வேறுபடுத்திக் காட்ட மாட்டோம் . நாங்கள் அவனுக்கு அடிபணிந்தவர்கள் ( என்று கூறுங்கள் ) .

ஆகவே யாரொருவர் ஒரு நபியைப் பொய்ப்பித்தால் அவர் அனைத்து நபி மார்களையும் பொய்ப்பித்தவராகக் கருதப்படுவார் . ஒரு நபியின் கட்டளைக்கு மாறு செய்தால் அவர் அனைத்து நபிமார்களுக்கும் மாறுசெய்தவராகக் கருதப்படுவார் . ஏனெனில் அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்

﴿ إِنَّ ٱلَّذِينَ يَكۡفُرُونَ بِٱللَّهِ وَرُسُلِهِۦ وَيُرِيدُونَ أَن يُفَرِّقُواْ بَيۡنَ ٱللَّهِ وَرُسُلِهِۦ وَيَقُولُونَ نُؤۡمِنُ بِبَعۡضٖ وَنَكۡفُرُ بِبَعۡضٖ وَيُرِيدُونَ أَن يَتَّخِذُواْ بَيۡنَ ذَٰلِكَ سَبِيلًا ١٥٠ أُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡكَٰفِرُونَ حَقّٗاۚ وَأَعۡتَدۡنَا لِلۡكَٰفِرِينَ عَذَابٗا مُّهِينٗا ١٥١ ﴾ [سورة النساء، الآيتان: ١٥٠، ١٥١].

" நிச்சயமாக அல்லாஹுத்தஆலாவுக்கு மாறு செய்தவர்களும் அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் பிரிக்க முயல்பவர்களும் நாங்கள் சிலரை நம்புவோம் சிலரை மறுப்போம் என்று கூறுகின்றனர் . நிச்சயமாக அவர்கள் தான் காபிர்கள் . நிச்சயமாக நாம் காபிர்களுக்கு கடுமையான வேதனையைச் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம் .

. (அன்நிஸா150. 151. ம் வசனம் )

## நபித்துவம் என்றால் என்ன ?.

நபித்துவம் எனப்படுவது படைத்தவனான அல்லாஹ்வுக்கும் படைக்கப்பட்ட மனிதனுக்குமிடையில் மார்க்கத்தை எத்தி வைப்பதற்கான உருவாக்கப்பட்ட பாலம் எனலாம் . அல்லாஹ் தான் விரும்புவோர்க்கு இவ்வாறு நபிமார்களை அனுப்பி நேர் வழி காட்டுவான் . இதற்காக தான் விரும்பியவர்களை நபியாக தெரிவு

செய்தும் கொள்வான் . இவ்விடயத்தில் தலையீட அல்லாஹ்வைத்தவிர வேறு எவருக்கும் உரிமை இல்லை .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின் வருமாறு கூறுகின்றான் ….

﴿ ٱللَّهُ يَصۡطَفِي مِنَ ٱلۡمَلَٰٓئِكَةِ رُسُلٗا وَمِنَ ٱلنَّاسِۚ إِنَّ ٱللَّهَ سَمِيعُۢ بَصِيرٞ ٧٥ ﴾ [سورة الحج، الآية: ٧٥].

" அல்லாஹுத்தஆலா மலக்குகளில் இருந்தும் மனிதர்களில் இருந்தும் தான் விரும்பியோரைத் தூதர்களாகத் தெரிவு செய்து கொண்டான் . நிச்சயமாக அல்லாஹ் கேட்போனும் பார்ப்போனுமாக இருக்கிறான் .

நுபுவ்வத் எனும் நபித்துவம் அல்லாஹ் – தான் விரும்பியோருக்கு அருளிய அருட்கொடையாகும் . அதனை எவருமே சுய முயற்சியினாலோ அதிக பட்ச வணக்க வழிபாட்டினாலோ அடைய முடியாது . அதே போல் ஒரு நபிக்கு அவர் விரும்பியதாலோ வேண்டிக் கொண்டதாலோ நபித்துவம் கிடைப்பதில்லை. இது முற்றிலும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து தெரிவு செய்யப்படும் விடயமாகும்

. அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் …

﴿ ... ٱللَّهُ يَجۡتَبِيٓ إِلَيۡهِ مَن يَشَآءُ وَيَهۡدِيٓ إِلَيۡهِ مَن يُنِيبُ ١٣ ﴾

[سورة الشورى، الآية: ١٣].

" அல்லாஹ் தான் விரும்பியோரை ( நபியாக ) தெரிவு செய்கிறான் (அவன்பால்) நெருங்கி வருவோருக்கு நேர் வழி காட்டுகின்றான் .

# றஸூல்மார்கள் ( தூதர்கள் ) அனுப்பப்படுவதன் நோக்கம் .

பின்வரும் நோக்கங்களை மையமாகக் கொண்டு தூதுவர்கள் ஒவ்வொரு சமூகத்தினருக்கும் அனுப்பப்பட்டார்கள்' ...

1— மனித சமூகத்தை சிலை வழிபாடு தனிமனித வழிபாடு போன்றவற்றிலிருந்து களைந்து உன்மையான இரட்சகன் பால் மனிதனைத் தொடர்பு படுத்தி மனிதனுக்கு மனிதன் அடிபணிந்து வாழும் அடிமை வாழ்வை நீக்கி அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி வாழும் சூழலை உருவாக்குவதற்காக றஸூல் மார்கள் அனுப்பப்பட்டார்கள் . இது பற்றி இறைவன் அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

﴿ وَمَآ أَرۡسَلۡنَـٰكَ إِلَّا رَحۡمَةً لِّلۡعَـٰلَمِينَ ﴿١٠٧﴾ ﴾ [سورة الأنبياء، الآية:١٠٧].

"மனித கோடிகளுக்கு ஓர் அருட்கொடையாகவே அல்லாஹ் உம்மை ( நபி (ஸல்) அவர்களை) அனுப்பியுள்ளான் ." என்று கூறுகின்றான் .
(ஸூரா அல் அன்பியா.: 107 ம் வசனம் )

உ— அல்லாஹுத்தஆலா மனிதனைப் படைத்த நோக்கமான இறை வழிபாட்டினையும் ஏகத்துவத்தையும் மறந்து வாழ்வோருக்கு அவற்றை எடுத்துக் கூறி அவர்களை நேர்வழியின் பால் இட்டுச் செல்லல் . இந்த நோக்கம் மனித இனத்தைச் சார்ந்த சிறந்தவர்களாலேதான் சாத்தியப்படும் என்பதால் அல்லாஹ் அவர்களை நபிமார்களாகத் தெரிவு செய்தான் .

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே இது பற்றிக் கூறுகையில் ...

﴿ وَلَقَدۡ بَعَثۡنَا فِي كُلِّ أُمَّةٖ رَّسُولًا أَنِ ٱعۡبُدُواْ ٱللَّهَ وَٱجۡتَنِبُواْ ٱلطَّـٰغُوتَ... ﴾

[سورة النحل، الآية:٣٦].

" நிச்சயமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் இறைவனையே வணங்குங்கள் (அவனல்லாத ) போலி தெய்வங்களைப்

புறக்கணித்து விடுங்கள் என்பதை எடுத்துக் கூறும் தூதுவர்களை அனுப்பியிருந்தோம் . .
( ஸூரா அன் நஹ்ல் 36 ம் வசனம் .)

3 – வழிதவறிய மனிதர்கள் மறுமை நாளில் எங்களுக்கு வழிகாட்ட எவருமில்லாததால் நாங்கள் வழி தவறி விட்டோம் என்று கூறித் தப்பிக்காமலிருப்பதற்காக – அவர்களது போலிக் குற்றச் சாட்டுக்களைப் புறக்கணிப்பதற்காக அல்லாஹ் நபிமார்களை அனுப்பியுள்ளான் .
இது பற்றி இறைவன் அல்குர்ஆனில் பின் வருமாறு தெளிவு படுத்துகின்றான் ...

﴿ رُّسُلًا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ لِئَلَّا يَكُونَ لِلنَّاسِ عَلَى ٱللَّهِ حُجَّةٌۢ بَعْدَ ٱلرُّسُلِۚ وَكَانَ ٱللَّهُ عَزِيزًا حَكِيمًا ﴿١٦٥﴾ ﴾ [سورة النساء، الآية:١٦٥].

“ மனிதர்கள் மறுமையில் ( எங்களுக்கு வழிகாட்ட நீ யாரையும் அனுப்ப வில்லையென ) அல்லாஹ் மீது குற்றஞ்சாட்டாமல் இருப்பதற்காக நற் சோபனமும் அச்சமூட்டி எச்சரிக்கையும் செய்யும் தூதுவர்களை (அல்லாஹ்) அனுப்பி வைத்தான் .

4 – அல்லாஹ் , அவனது பண்புகள் மற்றும் மலக்குகள் , மறுமை நாள் போன்ற மனிதனால் அறிய முடியாத மறைவான விடயங்களைப் பற்றிய சரியான தகவல்களைக் கற்றுக் கொடுப்பதற்காகவும் அல்லாஹ் நபிமார்களை அனுப்பினான் .

5 – அல்லாஹ் நபி மார்களை பாவச் செயல்கள் , மனோ இச்சைகளைப் பின்பற்றல் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து உயரிய நற்குணசீலர்களாக அவர்களை ஆக்கியுள்ளதால் எமக்கு அவர்கள் சிறந்த முன்மாதிரியாகவும் , சீரிய வழிகாட்டியாகவும் திகழ்கின்றனர் . எனவே நாம் அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு நிச்சயம் வெற்றி பெற முடியும் .
இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே இவ்வாறு கூறுகின்றான் ...

﴿ أُوْلَٰٓئِكَ ٱلَّذِينَ هَدَى ٱللَّهُۖ فَبِهُدَىٰهُمُ ٱقْتَدِهْۗ ... ﴾ [سورة الأنعام، الآية:٩٠].

“ ( நபிமார்களான ) அவர்களுக்குத்தான் அல்லாஹ் நேர்வழி காட்டியுள்ளான் . எனவே அவர்களுடைய நேர்வழியை

நீங்களும்பின்பற்றுங்கள் .
( ஸூரத்துல் அன்ஆம் 90 ம் வசனம் )

மேலும் கூறுகையில் ...

﴿ لَقَدْ كَانَ لَكُمْ فِيهِمْ أُسْوَةٌ حَسَنَةٌ ...﴾ [سورة الممتحنة، الآية:٦].

அல்லாஹ்வின் தூதுவரிடம் உங்களுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியான வாழ்க்கை உள்ளது .
( ஸூரத்துல் மும்தஹினா 6ம் வசனம் )

6 – இதயங்களைப் பரிசுத்தப்படுத்தி அவற்றில் வீண் சந்தேகங்களும் தவறான கற்பனைகளும் ஏற்படுவதைத் தவிர்த்து நேர்வழியின் பால் இட்டுச் செல்ல நபிமார்களின் வருகை உதவி புரிகின்றது .
அல்லாஹ் இது பற்றிக் கூறுகையில் ...

﴿ هُوَ ٱلَّذِى بَعَثَ فِى ٱلْأُمِّيِّـۧنَ رَسُولًا مِّنْهُمْ يَتْلُوا۟ عَلَيْهِمْ ءَايَـٰتِهِۦ وَيُزَكِّيهِمْ وَيُعَلِّمُهُمُ ٱلْكِتَـٰبَ وَٱلْحِكْمَةَ ...﴾ [سورة الجمعة، الآية:٢].

“ அவன் ( அல்லாஹ் தான் ) எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு அவர்களின் சமூகத்திலிருந்தே எங்களது வசனங்களை ஓதிக்காட்டி அவர்களைப் பரிசுத்தப்படுத்தி வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்க தூதுவர்களை அனுப்பி வைத்தான் .
( ஸூரா ஜூம்ஆ 2ம் வசனம் )

அதே போல் நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள் ... “ நான் நற்குணங்களைப் பூர்த்தி செய்வதற்காக அனுப்பப் பட்டுள்ளேன் .
( ஆதாரம் அஹ்மத் ஹாகிம் )

## <u>நபிமார்களின் பணிகள்</u> .

நபி மார்களுக்கு பல்வேறு பணிகள் வழங்கப்பட்டுள்ளன . அவற்றில் சிலவற்றை கீழே நோக்குவோம்

1 — சரீஅத் சட்டங்களை மக்களுக்குப் போதனை செய்வதுடன் மக்களை ஓரிறைக் கொள்கையின் பால் அழைத்து போலி தெய்வங்களை வழிபடுவதை விட்டும் விடுவித்தல் . இது பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது .

﴿ ٱلَّذِينَ يُبَلِّغُونَ رِسَٰلَٰتِ ٱللَّهِ وَيَخۡشَوۡنَهُۥ وَلَا يَخۡشَوۡنَ أَحَدًا إِلَّا ٱللَّهَۗ وَكَفَىٰ بِٱللَّهِ حَسِيبٗا ﴾ [سورة الأحزاب، الآية: ٣٩].

“ அல்லாஹ்வின் வசனங்களைப் பிரச்சாரம் செய்யும் அவர்கள் ( நபிமார்கள் ) அவனுக்கு அஞ்சி வாழ்வதுடன் வேறு எவருக்கும் அஞ்சாதிருக்கின்றனர் . அவனே அவர்களுக்கு கேள்வி கணக்குக் கேட்கப் போதுமானவன் .

( ஸூரத்துல் அஹ்ஸாப் 39ம் வசனம்)

உ — அல்லாஹ் இறக்கிய மார்க்க விடயங்களைத் தெளிவு படுத்தல் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ بِٱلۡبَيِّنَٰتِ وَٱلزُّبُرِۗ وَأَنزَلۡنَآ إِلَيۡكَ ٱلذِّكۡرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيۡهِمۡ وَلَعَلَّهُمۡ يَتَفَكَّرُونَ ﴾ [سورة النحل، الآية: ٤٤].

அவர்கள் சிந்தனை செய்வதற்காக அவர்களுக்கு இறக்கப்பட்ட குர்ஆனை விபரிக்கும் பொருட்டு நபியே உமக்கு ( திக்ர் ) எனும் ஞானத்தை அருளினோம்

( ஸூரத்துன்நிஸா வசனம்44 )

3 — நற்காரியங்களின் பக்கம் மக்களுக்கு அழைப்பு விடுத்து தீய விடயங்களை விட்டும் அவர்களைத் தடுத்தல் . அவ்வாறே உலகில் நன்மை புரிந்தோருக்குக் கிடைக்கவிருக்கும் வெகுமதிகள் பற்றியும் தீமை புரிந்தோருக்குக் கிடைக்கவிருக்கும் தண்டனைகள் பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறுதல் .

இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு இயம்புகின்றது ...

﴿ رُّسُلٗا مُّبَشِّرِينَ وَمُنذِرِينَ... ﴾ [سورة النساء، الآية: ١٦٥].

“ றஸூல்மார்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் , நன்மாராயம் கூறுபவர்களாகவும் ( நாம் அனுப்பி வைத்தோம் ) .

4 – றஸூல்மார்கள் தமது சீரிய வாழ்க்கை , நடத்தைகள் பேச்சுக்கள் மூலம் மக்களுக்கு ஒரு பூரண வாழ்க்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அதன் பால் மக்களையும் அழைத்து வழிநடத்திச் செல்லல் .

5 – அல்லாஹ்வின் கட்டளைகள் , குற்றவியல் சட்டங்கள் , தண்டனைகள் போன்றவற்றை மக்கள் மத்தியில் அமுல்ப்படுத்துவதன் மூலம் மார்க்கத்தை நிலை நாட்டி ஸ்திரப்படுத்தல் .

6 – மறுமையில் தம்மை நிராகரித்த சமூகத்தினருக்கு எதிராக – தான் அவர்களிடம் தீனை எடுத்துக் கூறிப் பிரச்சாரம் செய்ததாக சாட்சியம் அளித்தல் .
இது பற்றி அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது ...

﴿ فَكَيْفَ إِذَا جِئْنَا مِن كُلِّ أُمَّةٍ بِشَهِيدٍ وَجِئْنَا بِكَ عَلَىٰ هَٰٓؤُلَآءِ شَهِيدًا ﴿٤١﴾ ﴾ [سورة النساء، الآية:٤١].

“ ( நபியே ) நாம் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் ( நபி ) ஒருவரை சாட்சியாக்கும் வேளையில் ( உம்மை மறுத்த ) அவர்களுக்கெதிராக உம்மை நாம் சாட்சியாக நிறுத்தும் போது ( உம்மை மறுத்த அவர்களின் நிலை எவ்வாறிருக்கும் .)

## <u>இஸ்லாம் ஒன்றே அனைத்து நபிமார்களினதும் மார்க்கமாகும் .</u>

இஸ்லாமிய மார்க்கம் ஒன்றே அனைத்து நபிமார்களினதும் றஸூல் மார்களினதும் மார்க்கமாகும் . அவர்கள் அனைவரும் இதனையே

பேசியும் பிரச்சாரம் செய்தும் வந்தார்கள் . இது பற்றி அல்லாஹ் கூறுகையில் ...

﴿إِنَّ ٱلدِّينَ عِندَ ٱللَّهِ ٱلۡإِسۡلَٰمُۗ ﴾ [سورة آل عمران، الآية:١٩].

“ நிச்சயமாக இஸ்லாமே அல்லாஹ்விடத்தில் ( ஏற்றுக் கொள்ளப்பட்ட ) மார்க்கமாகும் .

எனவே அனைத்து நபி மார்களும் அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டுமென்றும் அவனன்றி வேறெந்த போலிக்கடவுள்களையும் வணங்கக் கூடாதெனவும் போதனை புரிந்து வந்துள்ளனர் . ஒவ்வொரு நபிமார்களுக்கான சரீஅத் சட்டதிட்டங்கள் , ஒழுக்க விதிகள் வேறுபட்ட போதிலும் அவர்கள் அனைவரும் தவ்ஹீத் எனும்அடிப்படை ஏகத்துவக் கொள்கையில் ஒன்றுபட்டே இருந்துள்ளனர்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ... நபிமார்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் ஆவார்கள் .

## நபி மார்கள் றஸூல்மார்கள் கூட மறைவானவற்றை அறிய மாட்டார்கள் .

மறைவான விடயங்களை அறிவதென்பது அல்லாஹ்வுககு மாத்தரம் இருக்கும் ஒரு சிறப்பம்சமாகும் . இது நபிமார்களுக்குக் கூட வளங்கப்பட வில்லை . எனவே நபிமார்களுக்கு இதில் எவ்வித பங்குமில்லை . ஏனைனில் அவர்களும் எங்களைப் போல் உண்ணுகின்றனர் உறங்குகின்றனர் , உறவு கொள்கின்றனர் , நோய்வாய்ப்படுகின்றனர் , வாழ்க்கையில் கஸ்டங்களைச் சந்திக்கின்றனர் . எனவே மனிதனின் இயற்கை அம்சங்களிலிருந்து அவர்கள் விதிவிலக்குப் பெற்றவர்களல்லர் .

எனவேதான் அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ...

﴿ وَمَآ أَرۡسَلۡنَا قَبۡلَكَ مِنَ ٱلۡمُرۡسَلِينَ إِلَّآ إِنَّهُمۡ لَيَأۡكُلُونَ ٱلطَّعَامَ وَيَمۡشُونَ فِي ٱلۡأَسۡوَاقِۗ...﴾ [سورة الفرقان، الآية:٢٠].

“ நபியே உமக்கு முன் நாம் றஸூல்மார்களை ( உம்மைப் போன்று உண்ணுபவர்களாகவும் கடைத்தெருக்களில் நடமாடுபவர்களாகவுமேயன்றி நாம் அனுப்பவில்லை .

( ஸூரத்துல் புர்கான் 20 ம் வசனம் )

மேலும் இது பற்றிக் கூறுகையில் ...

﴿ وَلَقَدۡ أَرۡسَلۡنَا رُسُلٗا مِّن قَبۡلِكَ وَجَعَلۡنَا لَهُمۡ أَزۡوَٰجٗا وَذُرِّيَّةٗۚ ﴾

﴿ [سورة الرعد، الآية:٣٨].

“ நிச்சயமாக நாம் உமக்கு முன் பல தூதர்களை அனுப்பினோம் . அவர்களுக்கு மனைவி மக்களையும் இனபந்துக்களையும் ஆக்கிக் கொடுத்தோம் .

( ஸூரத்துர் ர.:.து 38 ம் வசனம் .)

எனவே சாதாரண மனிதனுக்கு ஏற்படக் கூடிய இன்ப துன்பங்கள் , உற்சாகம் , களைப்பு , ஏனைய மனித கோடிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் அனைத்தும் இவர்களுக்கும் ஏற்படும் . இவர்களை அல்லாஹ் தனது மார்க்கத்தைப் பிரச்சாரம் செய்வதற்காகத் தெரிவு செய்துள்ளான் . எனவே அல்லாஹ் இவர்களுக்கு எடுத்துக் கூறிய மறைவான விடயங்களைத் தவிர வேறெந்த மறைவான ஞானமும் இவர்களுக்கு இல்லை .

இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ عَٰلِمُ ٱلۡغَيۡبِ فَلَا يُظۡهِرُ عَلَىٰ غَيۡبِهِۦٓ أَحَدًا ٢٦ إِلَّا مَنِ ٱرۡتَضَىٰ مِن رَّسُولٖ فَإِنَّهُۥ يَسۡلُكُ مِنۢ بَيۡنِ يَدَيۡهِ وَمِنۡ خَلۡفِهِۦ رَصَدٗا ٢٧ ﴾

[سورة الجن، الآيتان ٢٦ ، ٢٧].

" ( அல்லாஹ்வே ) மறைவானவற்றை அறிந்தவன் . அவனது மறைவான ஞாத்தை தான் தெரிவு செய்த தூதர்களுக்கன்றி வேறு எவருக்கும் வெளிப்படுத்த மாட்டான் .
( ஸூரத்துல் ஜின் 26 – 27ம் வசனங்கள் )

## றஸூல் மார்கள் பாவம் புரிவதை வீட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள் .

அல்லாஹுத்தஆலா தனது இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்காக தனது படைப்பினங்களிலேயே மிகச் சிறந்தவர்களான நபிமார்களைத் தெரிவு செய்தான் . அவர்களை நற்பண்புள்ளவர்களாகவும் குணசீலர்களாகவும் ஆக்கினான் .அல்லாஹ்வின் வேதக்கட்டளைகளை உரிய முறையில் சமூகத்திற்கு ஒப்புவிக்க வேண்டுமென்பதற்காக அனைத்து வித உடல் உள குறைபாடுகளைவீட்டும் , பாவங்கள் புரிவதை வீட்டும் அவர்களைப் பாதுகாத்தான் . எனவே அனைத்து மார்க்க அறிஞர்களின் முடிவின் படியும் நபிமார்கள் மக்களுக்கு எத்தி வைக்கும் அனைத்தும் இறை தூதாகும் . அது வீடயத்தில் எவ்வித தவறுகளை இழைப்பதை வீட்டும் அவர்கள் பாதுகாக்கப்பட்டவர்கள் .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு கூறுகின்றான்...

﴿ يَـٰٓأَيُّهَا ٱلرَّسُولُ بَلِّغۡ مَآ أُنزِلَ إِلَيۡكَ مِن رَّبِّكَۖ وَإِن لَّمۡ تَفۡعَلۡ فَمَا بَلَّغۡتَ رِسَالَتَهُۥۚ وَٱللَّهُ يَعۡصِمُكَ مِنَ ٱلنَّاسِۗ ﴾ [سورة المائدة، الآية:٦٧].

"தூதர் அவர்களே .. உமது றப்பான ( அல்லாஹ்வீடமிருந்து ) உமக்கு அருளப்பட்டவைகளை பிரச்சாரம் செய்வீராக அவ்வாறு செய்யாவீடில் (இறைவனான ) அவனது தூதை நீர் எத்தி

வைத்தவராகமாட்டீர்கள் .(தீய) மனிதர்களின் கெடுதியை விட்டும் அல்லாஹ் உங்களைப் பாதுகாப்பான்.

( ஸூரத்துல் மாயிதா 67 ம் வசனம் .)

மேலும் கூறுகின்றான் ...

﴿ ٱلَّذِينَ يُبَلِّغُونَ رِسَٰلَٰتِ ٱللَّهِ وَيَخۡشَوۡنَهُۥ وَلَا يَخۡشَوۡنَ أَحَدًا إِلَّا ٱللَّهَۗ... ﴾ [سورة الأحزاب، الآية:٣٩].

﴿ لِّيَعۡلَمَ أَن قَدۡ أَبۡلَغُواْ رِسَٰلَٰتِ رَبِّهِمۡ وَأَحَاطَ بِمَا لَدَيۡهِمۡ وَأَحۡصَىٰ كُلَّ شَيۡءٍ عَدَدَۢا ٢٨ ﴾ [سورة الجن، الآية:٢٨].

" அல்லாஹ்வின் தூதை எத்தி வைக்கும் அவர்கள் ( நபி மார்கள் ) அவனுக்கு அஞ்சுகின்றனர் . ( அதுவிடயத்தில் ) அவர்கள் வேறு எவருக்கும் பயப்பட மாட்டார்கள் .

( ஸூரா அல் அஹ்ஸாப் 39 ம் வசனம் .)

அவர்களிடமிருந்து தூதுப்பணியுடன் சம்பந்தமற்ற சிறிய தவறுகள் ஏதேனும் ஏற்படினும் அது அவர்களுக்கு (இறைவன் புறத்திலிருந்து ) உடனடியாகத் தெரிவிக்கப்படும் . அவ்வேளை அவர்கள் அந்த நிமிடமே அல்லாஹ்விடம் அதற்காக பாவ மன்னிப்புக் கோரி அதைச் செய்யாதவர்களைப் போல் ஆகி விடுகின்றனர் . அத்துடன் அவர்களது அந்தஸ்த்து பாவ மன்னிப்பின் மூலம் முன்னையதை விட உயர்த்தப்படுகின்றது .

## நபிமார்கள் , றஸூல் மார்களது எண்ணிக்கை .

றஸூல் மார்களது எண்ணிக்கை சுமார் முன்னூற்றிப் பத்து என ஹதீதுகளின் மூலம் தெரிய வருகின்றது . ஏனைனில் நபி (ஸல்) அவர்களிடம் றஸூல் மார்களின் எண்ணிக்கை பற்றிக்

கேட்கப்பட்ட போது அவர்கள் றஸூல்மார்கள் குற்றுமதிப்பாக முன்னூற்றிப் பத்து நபர்கள் எனக் கூறினார்கள் .

( ஆதாரம் ஹாகிம் )

நபிமார்களது எண்ணிக்கையோ இதைவிடவும் அதிகமானதாகும் . அவர்களில் சிலரது சரிதைகளை அல்லாஹ் அல் குர்ஆனிலே கூறியிருக்கின்றான் . மேலும் பலரது வரலாறுகளைக் கூறாது விட்டிருக்கின்றான் . திருக்குர்ஆனிலே இருபத்தைந்து நபிமார்கள் றஸூல் மார்களை அல்லாஹ் பெயர் குறிப்பிட்டுக் கூறுகின்றான் . எனவே நாம் பெயர் குறிப்பிடப்பட்ட , குறிப்பிடப் படாத அனைவரையும் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின் வருமாறு கூறுகின்றான் ...

﴿ وَرُسُلًا قَدْ قَصَصْنَـٰهُمْ عَلَيْكَ مِن قَبْلُ وَرُسُلًا لَّمْ نَقْصُصْهُمْ عَلَيْكَ ۚ... ﴾

[سورة النساء، الآية:١٦٤].

" நபியே நாம் ( சில ) நபிமார்களின் வரலாற்றை உமக்குக் கூறியிருக்கின்றோம் . மேலும் சிலரது வரலாற்றை உமக்குக்கூறாது விட்டிருக்கின்றோம் .

( ஸூரத்துன் நிஸா.:. 164 ம் வசனம் )

மேலும் கூறுகின்றான் ...

﴿ وَتِلْكَ حُجَّتُنَآ ءَاتَيْنَـٰهَآ إِبْرَٰهِيمَ عَلَىٰ قَوْمِهِۦ ۚ نَرْفَعُ دَرَجَـٰتٍ مَّن
نَّشَآءُ ۗ إِنَّ رَبَّكَ حَكِيمٌ عَلِيمٌ ﴿٨٣﴾ وَوَهَبْنَا لَهُۥٓ إِسْحَـٰقَ وَيَعْقُوبَ ۚ كُلًّا
هَدَيْنَا ۚ وَنُوحًا هَدَيْنَا مِن قَبْلُ ۖ وَمِن ذُرِّيَّتِهِۦ دَاوُۥدَ وَسُلَيْمَـٰنَ وَأَيُّوبَ
وَيُوسُفَ وَمُوسَىٰ ۚ وَكَذَٰلِكَ نَجْزِى ٱلْمُحْسِنِينَ ﴿٨٤﴾ وَزَكَرِيَّا وَيَحْيَىٰ
وَعِيسَىٰ وَإِلْيَاسَ ۖ كُلٌّ مِّنَ ٱلصَّـٰلِحِينَ ﴿٨٥﴾ وَإِسْمَـٰعِيلَ وَٱلْيَسَعَ وَيُونُسَ
وَلُوطًا ۚ وَكُلًّا فَضَّلْنَا عَلَى ٱلْعَـٰلَمِينَ ﴿٨٦﴾ وَمِنْ ءَابَآئِهِمْ وَذُرِّيَّـٰتِهِمْ

﴿ وَإِخْوَٰنِهِمْۖ وَٱجْتَبَيْنَـٰهُمْ وَهَدَيْنَـٰهُمْ إِلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ ﴿٨٧﴾ ﴾

[سورة الأنعام، الآيات:٨٣-٨٧].

" இன்னும் ( மேற்கூறப்பட்ட ) அவை நம்முடைய அத்தாட்சிகளாகும் .நபி இப்றாஹீம் தன் சமூகத்துக்கெதிராக வெற்றி கொள்வதற்காக நாம் அவற்றை அவருக்குக் ( கற்றுக் ) கொடுத்தோம் . நாம் நாடுவோரின் அந்தஸ்த்தை உயர்த்துகின்றோம் . நிச்சயமாக உமது இரட்சகன் தீர்க்கமான அறிவுடையவன் , நன்கறிந்தவன் .

மேலும் நாம் ஜகரிய்யாவையும் , யஹ்யாவையும் ஈஸாவையும் இஸ்யாஸையும் (நேரான வழியில் செலுத்தினோம் . ) இவர்கள் அனைவரும் நல்லவர்களில் உள்ளவர்கள் .
( நபிமார்களான ) இஸ்மாயீலையும் அல்யஸஃவையும், யூனுஸையும் லூத்தையும் ( நேர்வழியில்செலுத்தி ) இவர்கள் அனைவரையும் ஏனைய அகிலத்தார்களை விட மேன்மைப்படுத்தி வைத்தோம் .
இவர்களது மூதாதைகள் , சந்ததியினரிலிருந்தும் , சகோதரர்களிலிருந்தும் (பலரை மேன்மைப்படுத்தியதுடன் ) அவர்களை நாம் தேர்ந்தெடுத்து நேரான வழியின்பால் செலுத்தினோம் .

மேலும் இதே போன்று அல்லாஹ் நபிமார்களில் சிலரை வேறு சிலரை விட ( ஒரு சில விடயங்களில் ) உயர்வு படுத்தியுள்ளான் . இது பற்றிக் கூறுகையில் ...

﴿ ...وَلَقَدْ فَضَّلْنَا بَعْضَ ٱلنَّبِيِّـۧنَ عَلَىٰ بَعْضٍۖ... ﴾ [سورة الإسراء، الآية:٥٥].

" நிச்சயமாக நாம் நபிமார்களில் சிலரை வேறு சிலரை விட உயர்வு படுத்தியுள்ளோம் " என்று கூறுகின்றான் .

அது போன்றே றஸூல் மார்களில் சிலரை வேறு சிலரை விட உயர்வு படுத்தியுள்ளான் . இது பற்றிக் கூறுகையில் ...

﴿ تِلْكَ ٱلرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلَىٰ بَعْضٍۘ... ﴾ [سورة البقرة، الآية:٢٥٣].

“ அந்த றஸூல் மார்களை சிலரை வேறு சிலரை விட நாம் உயர்வு படுத்தியுள்ளோம் .

( ஸூரத்துல் பகரா 253 ம்வசனம்)

றஸூல் மார்களிலே மிகச் சிறந்தவர்கள் உலுல் அஸ்ம்களாகும் . அதாவது மிகப் பெறும் இன்னல்களுக்கு முகம் கொடுத்தும் பொறுமையோடு இஸ்லாமியப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர்களான நபி நூஹ் , இப்றாஹீம் , மூஸா , ஈஸா , முஹம்மது (ஸல்) ஆகிய ஐவருமாவர் . இவர்கள் நபிமார்களிலேயே மிக உயர்ந்த அந்தஸ்த்து உடையவர்கள் .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான் …

﴿ فَٱصْبِرْ كَمَا صَبَرَ أُوْلُواْ ٱلْعَزْمِ مِنَ ٱلرُّسُلِ ... ﴾ [سورة الأحقاف، الآية:٣٥].

“ நபியே உலுல் அஸ்ம்களான நபிமார்கள் பொறுமையைக் கடைப்பிடித்தது போல் நீரும் பொறுமையைக் கடைப்பிடிப்பீராக .

( ஸூரத்துல் அஹ்ஸாப் 35 ம் வசனம் )

மேலும் கூறுகின்றான் …

﴿ وَإِذْ أَخَذْنَا مِنَ ٱلنَّبِيِّـۧنَ مِيثَـٰقَهُمْ وَمِنكَ وَمِن نُّوحٍ وَإِبْرَٰهِيمَ وَمُوسَىٰ وَعِيسَى ٱبْنِ مَرْيَمَ ۖ وَأَخَذْنَا مِنْهُم مِّيثَـٰقًا غَلِيظًا ۝٧ ﴾ [سورة الأحزاب، الآية:٧].

“ மேலும் நபியே நாம் நபிமார்களிடமிருந்தும் உம்மிடமிருந்தும் நபி நூஹ் ,இப்றாஹீம் , மூஸா , மர்யமின் மகன் ஈஸா ஆகியோரிடமிருந்தும் உடன்படிக்கை செய்து கொண்டதை நினைவு கூர்வீராக . நாம் அவர்களிடம் உறுதியான உடன்படிக்கை செய்தோம் .

( ஸூரத்துல் அஹ்ஸாப் 7ம் வசனம் )

நபிமார்களிலேயே மிகச் சிறந்தவர்களாக எம் நபி முஹம்மது ( ஸல்) அவர்கள் விளங்குகின்றனர் . அவர்கள் இறுதி நபியும் இறையச்சமுள்ள மு:.மின்களின் தலைவருமாவார்கள் . சுருங்கக்கூறின் நபி ஆதம் ( அலை) அவர்களது சந்ததியினர்

அனைவருக்கும் எங்கள் நபியவர்கள் தலைவராவார்கள் . மறுமையிலே ஆதி மனிதன் தொடக்கம் இறுதி மனிதன் வரை அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு ஒன்று சேர விரும்பும் மகாமும் மஹ்மூத் எனும் இடத்திற்குக் சொந்தக்காரராவார்கள் . அவ்வாறே லிவாஉல் ஹம்து எனும் கொடிக்கும் , ஹவ்லுல் கவ்தர் எனும் நீரூற்றிக்கும் சொந்தக் காரராவார்கள் . அது மாத்திரமா ? மறுமையில் படைப்பினங்களில் உள்ள குற்றம் புரிந்தவர்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைப்பவர்கள் . வஸீலா , பழீலா எனும் சிறப்புத் தகைமைகளுக்கு உரித்தானவர்கள் . அல்லாஹ் அவர்களுக்கு தனது தீனிய்யத்தான — சட்ட திட்டங்களிலேயே மிக சிறந்ததான இஸ்லாத்தை அவர்களுக்குக் கொடுத்து அனுப்பியுள்ளான் . அவர்களது சமூகத்தினராக எம்மை அனைத்து சமூகத்தினரை விடவும் சிறந்த சமுதாயமாக ஆக்கினான் .நபி முஹம்மத் அவர்களுக்கும் அவர்களது உம்மத்தான எமக்கும் மிகப் பெரும் சலுகைகளையும் , அருட்கொடைகளையும் , சிறப்பம்சங்களையும் வழங்கி பிற சமுகத்தினரை விட அந்தஸ்த்தால் உயர்வு படுத்தினான் . அர்களது உம்மத்து இறுதி உம்மத்தும் மறுமையில் முதன் முதலில் உயிர்ப்பித்து எழுப்பப்படும் உம்மத்துமாகும் .

இது பற்றி நபி (ஸல் ) அவர்கள் கூறியுள்ளார்கள் .
“ நான் ஏனைய நபிமார்களை விட ஆறு விடயங்களில் சிறப்பிக்கப் பட்டுள்ளேன் . ( ஆதாரம் முஸ்லிம் )
மேலும கூறியுள்ளார்கள் ...
“ ஆதம் நபி அவர்களின் சமுதாயத்தினர் அனைவருக்கும் நானே தலைவனாவேன் . ‘ லிவாஉல் ஹம்து ‘ எனும் கொடியும் என்கரத்திலேயே கொடுக்கப்படும் . இதனால் எனக்கு எதுவித பெருமையுமில்லை . ஆதம் நபி அவர்களோ அல்லது ஏனைய நபிமார்களோ யாராயினும் எனது கொடியின் கீழேயே அவர்கள் மறுமையில் ஒன்று சேர வேண்டும் .
.

நபி (ஸல்) அவர்களுக்கு அடுத்த அந்தஸ்த்தில் இருக்கும் நபி அல்லாஹ்வின் நேசரான இப்றாஹீம் நபி அவர்களாகும் .எனவே நபி (ஸல் ) அவர்களும் இப்றாஹீம் அலை அவர்களும் அல்லாஹ்வின் நெருங்கிய நேசர்களும் உலுல் அஸ்ம்களில் மிகச் சிறப்புக்குரியவர்களுமாவார்கள் . இவர்களுக்கு அடுத்த

அந்தஸ்த்தில் ஏனைய மூன்று உலுல் அஸ்ம்களான நபிமார்கள் திகழ்கின்றனர் .

# <u>நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் .</u>

அல்லாஹுத்தஆலா தனது நபிமார்களுக்கு அவர்களது பிரச்சாரத்திற்கு உறுதுணையாக பல்<u>வேறு</u> அத்தாட்சிகளையும் அற்புதங்களையும் வழங்கினான் . உதாரணமாக அல்குர்ஆனின் அற்புத தன்மை , சந்திரன் இரண்டாகப் பிழந்தமை , மூஸா நபியின் ஊன்று கோல் பாம்பாக மாறியமை , ஈஸா நபி களி மண்ணிலிருந்து அல்லாஹ்வின் உதவியால் பறவைகளைச் சிருஷ்டித்தமை போன்றவற்றைக் கூறலாம் . உலக வழக்கத்திற்கு மாற்றமான முறையில் இடம் பெறும் இவ்வற்புதங்கள் உன்மையான நபித்துவத்திற்கு கட்டியம் கூறி உறுதிப்படுத்தி நிற்கின்றன . அவ்வாறே கராமத் எனும் நல்லடியார்களான இறைநேசர்களுக்கு ஏற்படும் அற்புதங்களும் அவர்கள் நபித்துவ போதனைகளை ஏற்று நடந்தவர்கள் என்பதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன .

இது பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் ....

﴿ لَقَدۡ أَرۡسَلۡنَا رُسُلَنَا بِٱلۡبَيِّنَـٰتِ...﴾ [سورة الحديد، الآية:٢٥].

நாம் நமது நபிமார்களைத் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்தே அனுப்பியிருந்தோம் .

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் ...
“ நபிமார்களில் எவரும் அவருக்கு முன் வாழ்ந்த சமூகத்தினர் நம்பிய அற்புதத்தைப் போன்றதொரு அத்தாட்சியைக் கொடுக்கப்படாமல் அனுப்பப்பட்டதில்லை . எனக்குக் கொடுக்கப்பட்ட அற்புதம் அல்லாஹ்வின் அற்புதமான

அல்குர்ஆனாகும் .எனவே மறுமையிலே அதிக ஆதரவாளர்களை ( பின்பற்றுவோரைப் ) பெற்ற நபியாக நான் இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன் .

( ஆதாரம் புகாரி முஸ்லிம் .)

# நபி (ஸல்) அவர்களை நாம் எவ்வாறு நம்ப வேண்டும் .

நபி முஹம்மது (ஸல்) அவர்களை நபியாக நம்பி ஏற்று நடப்பது ஈமானின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும் . அவர்களை நபியென ஏற்காத ஒருவனிடம் ஈமான் இருக்க முடியாது .
இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் …

﴿ وَمَن لَّمْ يُؤْمِنۢ بِٱللَّهِ وَرَسُولِهِۦ فَإِنَّآ أَعْتَدْنَا لِلْكَٰفِرِينَ سَعِيرًا ﴿١٣﴾

﴾ [سورة الفتح، الآية:١٣].

" யார் அல்லாஹ்வையும் அவனது தூதர் நபி (ஸல்) அவர்களையும் நம்ப வில்லையோ அவ்வாறான ( காபிர்களுக்கு ) நாம் " ஸயீர் " எனும் நரகத்தைச் சித்தப்படுத்தி வைத்திருக்கின்றோம் .

( ஸூரா அல் பத்ஹு 13 ம் வசனம் ) .

மேலும் நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள் …

" மனிதர்கள் வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமில்லை என்றும் நான் அவனது தூதரென்றும் சாட்சி கூறும் வரை அவர்களுடன் போர் புரிமாறு எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது .

( ஆதாரம் புகாரி முஸ்லிம் ).

எனவே நபி (ஸல்) அவர்களை உண்மையாக நம்புவதென்றால் பின்வரும் விடயங்கள் ஒருவரிடம் நிறைவு பெற்றிருக்க வேண்டும் .

1 – நபி (ஸல்) அவர்களைப்பற்றி அறிந்திருத்தல் . அதாவது அவர்கள் முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிப் பின் ஹாஸிம் ஆவார்கள் ஹாஸிம் குரைஷ் வம்சத்தைச் சார்ந்தவர் . குஷை் என்பது அரபு வம்சங்களில் ஒன்றாகும் . அராபியர்கள் இஸ்மாயீல் பின் இப்றாஹீம் அலை அவர்களின் வம்சாவழியினர் .நபியவர்கள் அறுபத்தி மூன்று வருட காலம் வாழ்ந்தார்கள் . அதில் நாற்பது வருடங்கள் நபித்துவத்திற்கு முன்னும் இருபது வருடங்கள் நபியாகவும் றஸூலாகவும் வாழ்ந்துள்ளார்கள் .

2 – அவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறிய அனைத்தும் உன்மையெனக்கூறி அவர்களையும் உன்மைப்படுத்தல் . மேலும் அவர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதுடன் அவர்கள் தடுத்தவற்றைத் தவிர்ந்து அவர்களது வழிகாட்டலின் படியே அல்லாஹ்வை வணங்கி வழிபடல் வேண்டும் .

3 – அவர்கள் மனு – ஜின் அனைவருக்கும் நபியாக அனுப்பப் பட்டவர்கள் என்றும் , அவர்களையன்றி யாரும் வேறு எவரையும் பின்பற்றக் கூடாது என்றும் நம்ப வேண்டும். ஏனைனில் அல்லாஹ்

﴿ قُلۡ يَـٰٓأَيُّهَا ٱلنَّاسُ إِنِّى رَسُولُ ٱللَّهِ إِلَيۡكُمۡ جَمِيعًا ...﴾ [سورة الأعراف، الآية:١٥٨].

“ நபியே நான்தான் உங்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்ட அல்லாஹ்வின் தூதர் என்று மக்களைப் பார்த்துக் கூறுங்கள் . “ என்று கூறுகின்றான் .

4 – அவர்களது நபித்துவத்தை நம்புவதுடன் அவர்கள்தான் நபிமார்களில் சிறந்தவர்களும் இறுதித் தூதருமாவார்கள் என்றும் நம்ப வேண்டும் . அல்லாஹ் கூறுகின்றான்

﴿ ...وَلَـٰكِن رَّسُولَ ٱللَّهِ وَخَاتَمَ ٱلنَّبِيِّـۧنَ... ﴾ [سورة الأحزاب، الآية:٤٠].

“ இன்னும் அவர்கள் தான் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களில் இறுதியானவருமாவார்கள் . ( அல் அஹ்ஸாப் 41 ம் வசனம் )

மேலும் அவர்கள் அல்லாஹ்வின் நேசரும் ஆதம் நபியின் சந்ததியினருக்குத் தலைவரும் , மிகப் பெரும் பரிந்துரைக்கும், வஸீலா எனும் சுவனத்தின் உயர் அந்தஸ்த்திக்கும் , ஹவ்ழ்

எனும் நீர்த்தடாகத்திற்கும் உரித்தானவர்கள் . அவர்களின் சமூகத்தினரே அனைவரிலும் சிறந்த சமூகத்தினர் .

அல்லாஹ் கூறுகின்றான் ..

﴿ كُنتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ ...﴾ [سورة آل عمران، الآية:١١٠].

நீங்கள்தான் வெளியாக்கப்பட்ட மனித சமூகத்தில் மிக்க சிறந்தவர்கள் .

( ஆல இம்ரான் 20 ம் வசனம் )

அவர்கள்தான் சுவர்க்க வாசிகளில் மிக அதிகமானவர்களாகக் காணப்படுவார்கள் . அவர்களது சரீஅத் அனைத்து முன்னைய சரீஅத் சட்டங்களையும் மாற்றி விட்டது .

5 – அல்லாஹுத்தஆலா அவர்களை அல்குர்ஆன் எனும் அதி உன்னத அற்புதத்தை வளங்கி வலுப்படுத்தினான் . அது மாற்றங்கள் , இடைச்செருகல்களை விட்டும் பாதுகாக்கப்பட்ட ஏடாகும் . அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ قُل لَّئِنِ ٱجْتَمَعَتِ ٱلْإِنسُ وَٱلْجِنُّ عَلَىٰٓ أَن يَأْتُوا۟ بِمِثْلِ هَٰذَا ٱلْقُرْءَانِ لَا يَأْتُونَ بِمِثْلِهِۦ وَلَوْ كَانَ بَعْضُهُمْ لِبَعْضٍ ظَهِيرًا ﴿٨٨﴾ ﴾ [سورة الإسراء، الآية:٨٨].

நபியே கூறுங்கள் மனு ஜின் இரு கூட்டத்தினரும் அல்குர்ஆன் போன்றதொன்றைக் கொண்டு வருவதென ஒன்று சேர்ந்தாலும் அவர்கள் ( அவ்விடயத்தில் ) ஒருவருக்கொருவர் உதவியாக இருந்த போதிலும் அவ்வாறானதொன்றைக் கொண்டுவர அவர்களால் முடியாது .

( இஸ்ரா: 88 ம் வசனம் )

﴿ إِنَّا نَحْنُ نَزَّلْنَا ٱلذِّكْرَ وَإِنَّا لَهُۥ لَحَٰفِظُونَ ﴿٩﴾ ﴾ [سورة الحجر، الآية:٩].

“ நிச்சயமாக நாமே திக்ர் ( எனும் அல்குர்ஆனை ) இறக்கி வைத்தோம் . மேலும் நாமே அதைப் பாதுகாப்போம் .

6 – நபி (ஸல்) அவர்கள் தனது தூதுத்துவப் பணியினை செவ்வனே பூர்த்தி செய்து வைத்தார்கள் என்றும் தனது

பொறுப்புக்களை நிறைவேற்றி சமூகத்திற்கு அறிவுரை கூறிச் சென்றார்கள் என்றும்நம்ப வேண்டும் . அவர்கள் எதுவித நன்மையான காரியத்தையும் மக்களுக்குக் கூறாது விட்டதுமில்லை . எந்த தீங்கினையும் சமூகத்திற்கு எச்சரிக்காமல் விட்டதுமில்லை. அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ...

﴿ لَقَدۡ جَآءَكُمۡ رَسُولٞ مِّنۡ أَنفُسِكُمۡ عَزِيزٌ عَلَيۡهِ مَا عَنِتُّمۡ حَرِيصٌ عَلَيۡكُم بِٱلۡمُؤۡمِنِينَ رَءُوفٞ رَّحِيمٞ ١٢٨ ﴾ [سورة التوبة، الآية:١٢٨].

நிச்சயமாக உங்கள் சமூகத்திலிருந்தே உங்களுக்கு ஒரு தூதுவர் வந்து விட்டார்கள் .நீங்கள் சிரமப்படுவது அவருக்கு கஸ்டம் தரும் ஒன்றாகும் . (அவர் ) உங்கள் விடயத்தில் அதிக ஆர்வம் கொண்டவரும் மு:மின்கள் மீது அன்பும் இரக்கமும் காட்டக் கூடியவருமாகும் .

( தவ்பா: 128 ம் வசனம் )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ...
அல்லாஹுத்தஆலா எனக்கு முன்வாழ்ந்த சமூகத்தினருக்கு அனுப்பிய எந்த நபியும் தனது சமூகத்திற்கு அனைத்து வித நன்மையான காரியங்களை ஏவாமல் விட்டதுமில்லை . தீமையானவற்றறைத் தடுக்காமல் இருந்ததுமில்லை .

7 – நபி (ஸல் ) அவர்களை உளப்பூர்வமாக விரும்புவதுடன் அவர்களைத் தன்னை விடவும் அனைத்துப் படைப்பினங்களை விடவும் முன்னிலைப் படுத்த வேண்டும் . அத்துடன் அவர்களை உரிய முறையில் கண்ணியப்படுத்தி – அவர்களுக்குரிய அந்தஸ்த்தை வழங்கி கௌரவித்து அவர்களது கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் . ஏனெனில் இது அல்லாஹ் அவர்கள் விடயத்தில் நமக்கிட்ட கட்டளையாகும் . அதே போல் அவர்களை நேசிப்பதும் அவர்களுக்கு அடிபணிவதும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு அடிபணிவது போன்றதாகும் . அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ قُلۡ إِن كُنتُمۡ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِي يُحۡبِبۡكُمُ ٱللَّهُ وَيَغۡفِرۡ لَكُمۡ ذُنُوبَكُمۡۗ وَٱللَّهُ غَفُورٞ رَّحِيمٞ ٣١ ﴾ [سورة آل عمران، الآية:٣١].

8 " நபியே கூறுங்கள் . நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருப்பின் என்னைப் பின்பற்றுங்கள் . அப்போது அல்லாஹ் உங்களை நேசித்து உங்கள் பாவங்களையும் மன்னிப்பான் . அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் இரக்கமுடையவனுமாக இருக்கிறான் .

( ஆல இம்றான் 31 ம் வசனம் .)

இது போல்தான் நபி (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள் ... உங்களில் எவருமே என்னை தன் பெற்றோர் பிள்ளை ஏனைய அனைவரையும் விட அதிகமாக நேசிக்காத வரை ( உன்மை ) மு:.மின்களாக ஆக மாட்டீர்கள்

8 – நபி (ஸல் ) அவர்கள் மீது அதிகமாக ஸலவாத்தும் ஸலாமும் ஓத வேண்டும் . ஏனைனில் அவர்கள் மீது ஸலவாத்து கூறாதவனே உன்மையில் உலோபியாவான் . அல்லாஹ் கூறுகின்றான்

﴿ إِنَّ ٱللَّهَ وَمَلَٰٓئِكَتَهُۥ يُصَلُّونَ عَلَى ٱلنَّبِيِّۚ يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ صَلُّواْ عَلَيۡهِ وَسَلِّمُواْ تَسۡلِيمًا ﴾ [سورة الأحزاب، الآية:56].

" நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபிகளார் மீது ஸலவாத்து கூறுகின்றனர் எனவே மு:.மின்களே .. நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள் .

மேலும் நபியவர்கள் கூறியுள்ளார்கள் . " என் மீது ஒருவர் ஒரு தடவை ஸலவாத்துக் கூறினால் அல்லாஹ் அவர் மீது பத்துத் தடவைகள் ஸலவாத்துக் கூறுகின்றான் .

முக்கியமான இடங்களான தொழுகையின் அத்தஹிய்யாத், குனுாத் , ஜனாஸாத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை போன்ற சந்தர்ப்பங்களிலும் அதானுக்குப் பின்னுள்ள நேரம் , பள்ளியினுள் நுழையும் – வெளியேறும் வேளை , துஆக் கேட்கும் வேளை , நபிகளாரது பெயர் கூறப்படும் வேளை போனற் சந்தர்ப்பங்களில் ஸலவாத்துச் சொல்வது மிக முக்கியமாகும்..

9 – நபி (ஸல் ) அவர்களும் ஏனைய நபி மார்களும் அவர்களது இறைவனான அல்லாஹ்விடத்தில் உயிருடனேயே இருந்து கொண்டிருக்கின்றனர் . அந்த வாழ்க்கை பர்ஸக் என்ப்படும் ஒரு மறைவான மண்ணறை வாழ்க்கையாகும். இது ஷுஹதாக்களின் அந்தஸ்த்தை விடவும் மேன்மையானதாகும் . ஆனால் இவ்வாழ்க்கை அவர்களது உலக வாழ்க்கை போன்றதல்ல . சுருங்கக் கூறின் அவ்வாழ்க்கை எவ்வாறு என்பதன் யதார்த்த நிலை எமக்குத் தெரியாது . அதனால் அவர்களெல்லாம் மரணிக்க வில்லையென்று கூறவும் முடியாது .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் . “ நபிமார்களது உடல்களை உண்பதை ( அரிப்பதை ) அல்லாஹ் பூமிக்கு ஹராமாக்கியிருக்கின்றான் .

மேலும் கூறியுள்ளார்கள் … எந்த முஸ்லிமாயினும் எனக்கு ஸலாம் கூறினால் நான் அவருக்கு பதில் கூறுவதற்காக அல்லாஹ் எனது உயிரினை மீட்டுத் தருகின்றான் .

( ஆதாரம் அபூ தாவூத் )

10 – நபி (ஸல்) அவர்களது சமுகத்தில் உரத்த குரலில் சப்தமிட்டுப் போசாமலிருப்பது அவர்களுக்கு நாம் கொடுக்கும் கண்ணியமாகும் . இது அவர்கள் உயிரோடிருந்த காலத்தில் இருந்தது போன்றே இப்போது அவர்கள் மரணித்த பின்னும் அவர்களது கப்ருக்கு அருகாமையில் உரத்த குரலில் பேசக்கூடாது . இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான்

﴿ يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لَا تَرْفَعُوٓا۟ أَصْوَٰتَكُمْ فَوْقَ صَوْتِ ٱلنَّبِىِّ وَلَا تَجْهَرُوا۟ لَهُۥ بِٱلْقَوْلِ كَجَهْرِ بَعْضِكُمْ لِبَعْضٍ أَن تَحْبَطَ أَعْمَـٰلُكُمْ وَأَنتُمْ لَا تَشْعُرُونَ ۝٢ ﴾

[سورة الحجرات، الآية:٢].

“ …

முஃமின்களே நீங்கள் நபிகளது சத்தத்தை விட உங்கள் சத்தத்தை உரத்துப் பேசாதீர்கள் . மேலும் நீங்கள் உங்களுக்கு மத்தியில் ( சத்தமிட்டு ) பகிரங்ககமாகப் பேசுவது போன்று அவர்களிடத்தில் பேசாதீர்கள் .(ஏனைனில்) இதனால் நீங்கள் அறியாமலேயே உங்கள் நல்லமல்கள் அழிந்து விடக் கூடும் .

எனவே நபியவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த காலத்தில் கொடுக்கப்பட்ட அதே மரியாதை அவர்கள் மரணித்த பின்னும் கொடுக்கப்பட வேண்டும் . எனவே நபித்தோழர்களான அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட உத்தம ஸஹாபாக்கள் நபியவர்களைக் கண்ணியப்படுத்தியது போன்று நாமும் அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும் . அவர்கள் நபியவர்களை அனைத்து விடயங்களிலும் முழுக்க முழுக்க பின்பற்றி நடந்ததுடன் அவர்களுக்கு மாறு செய்வதையோ அவர்கள் மார்க்கத்தில் கூறாதவற்றைச் செய்வதையோ விட்டும் முற்று முழுதாக நீங்கியவர்களாகக் காணப்பட்டார்கள் .

11 – நபியவர்களை நேசிப்பதுடன் அவர்களது குடும்பத்தினர் , மனைவிமார்களையும் நேசிப்பது கடமையாகும் . அவர்களை மதித்து நடப்பதுடன் அவர்களை ஏசுதல் குறை கூறல் அவர்களது அந்தஸ்த்தைக் குறைக்கும் வகையில் நடந்து கொள்ளல் போன்றவற்றை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும் . ஏனெனில் அல்லாஹுத்தஆலாவே அவர்களைப் பொருந்திக் கொண்டதுடன் தனது நபியின் உறவினர்களாகவும் அவர்களைத் தெரிவு செய்து கொண்டான் . எனவே அவர்களையும் பின்பற்றி அன்பு பாராட்டி நடத்தல் எம் மீது கடமையாகும் .

ஏனெனில் அல்லாஹுத்தஆலா கூறுகின்றான் ...

﴿ وَٱلسَّٰبِقُونَ ٱلۡأَوَّلُونَ مِنَ ٱلۡمُهَٰجِرِينَ وَٱلۡأَنصَارِ وَٱلَّذِينَ ٱتَّبَعُوهُم بِإِحۡسَٰنٖ رَّضِيَ ٱللَّهُ عَنۡهُمۡ وَرَضُواْ عَنۡهُ ...﴾ [سورة التوبة، الآية:١٠٠].

" முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் ( இஸ்லாத்தை ஏற்க ) முதலாவதாக முந்திக் கொண்டவர்களும் , இவர்களை நல்ல முறையில் பின்பற்றியவர்கள் – இவர்கள் அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொண்டான் .

( ஸூரத்துத் தவ்பா 100 ம் வசனம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள் ... எனது தோழர்களை நீங்கள் ஏசாதீர்கள் . ஏனெனில் எனது உயிர் எவன் வசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக உங்களில் ஒருவர் உஹது மலையளவு தங்கத்தை ( அல்லாஹ்வின் பாதையில் ) செலவு செய்தாலும் அவர்கள் செலவு

செய்த ஒரு பிடியளவுக்கோ அரைப் பிடியளவுக்கோ கூட அது.சமமாகாது . .
( ஆதாரம் புகாரி )

அவர்களுக்குப் பின் வந்த வழித்தோன்றல்களான நாம் அவர்களுக்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோருவதுடன் அவர்களைப் பற்றிய தீய எண்ணத்தை எமது இதயங்களில் ஏற்படுத்தி விடக் கூடாதென்றும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ وَٱلَّذِينَ جَآءُو مِنۢ بَعۡدِهِمۡ يَقُولُونَ رَبَّنَا ٱغۡفِرۡ لَنَا
ٱلَّذِينَ سَبَقُونَا بِٱلۡإِيمَٰنِ وَلَا تَجۡعَلۡ فِي قُلُوبِنَا غِلّٗا لِّلَّذِينَ
ءَامَنُواْ رَبَّنَآ إِنَّكَ رَءُوفٞ رَّحِيمٌ ١٠ ﴾ [سورة الحشر، الآية:١٠].

( ஸஹாபாக்களான ) அவர்களுக்குப் பின் வந்தவர்கள் அல்லாஹ்விடம் எங்கள் இரட்சகனே .. எங்களுக்கும் எங்களுக்கு முன் வாழ்ந்த ஈமானிய சகோதர்களுக்கும் பாவமன்னிப்பை நல்குவாயாக .
எங்களது இதயங்களில் அவர்களைப் பற்றிய தீய எண்ணத்தை ஏற்படுத்தி விடாதே .. எங்கள் இரட்சகனே நிச்சயமாக நீ மன்னிப்பவனும் இரக்கமுடையவனாகவும் இருக்கிறாய் . என்றுபிரார்த்திப்பார்கள்
( ஸூரத்துல்ஹஸ்ர் 10 ம் வசனம்)

12 – நபி (ஸல்) அவர்களுடைய விடயத்தில் எல்லை மீறிச் செல்லாமலிருப்பதும் எம்மீது கடமையாகும் . ஏனைனில் இது மிகப் பெரிய தவறாகும் . நபியவர்கள் தன்னை எல்லை மீறிப் புகழ்வதையும் அவர்களுக்குரிய அந்தஸ்த்தை விட்டுவிட்டு கடவுள் அந்தஸ்த்துக்கு அவர்களை சித்தரித்தல் – இது போன்றவற்றை தனது சமூகத்தினருக்கு வன்மையாகக் கண்டித்துத் சென்றுள்ளார்கள் .

நபியவர்கள் கூறியுள்ளார்கள் ... நிச்சயமாக நானும் ஒரு (அல்லாஹ்வின்) அடியான்தான் . எனவே அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள் என்றே கூறுங்கள் . என்னை நீங்கள் எனது அந்தஸ்த்துக்கு மேலாகப் பகழ்வதை நான்
( ஒரு போதும் ) விரும்ப வில்லை . மர்யமின் மகன் ( ஈஸா நபியை ) கிருஸ்த்தவர்கள் அளவு கடந்து புகழ்ந்தது போல் என்னை நீங்கள் அளவு கடந்து புகழாதீர்கள் .

எனவே நபியவர்களிடம் எம் தேவையை நிறைவேற்றுமாறு துஆக் கேட்பதோ , அவர்களிடம் அபயமளிக்குமாறு வேண்டுவதோ , அவர்களது கப்ரைச் சுற்றி வலம்வருவதோ , அவர்களுக்காக நேர்ச்சை செய்தல் அறுத்தல் போன்றவைகளோ அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் சிர்க்கான காரியங்களாகும் . அல்லாஹ் அல்லாத எவருக்கும் எவ்வித இபாதத்களையும் நிறைவேற்றக் கூடாதென அல்லாஹ் எமக்குக் கட்டளையிட்டுள்ளான் .

அவர்களைக் கேலி செய்தல் போன்றவைகளும் ரித்தத்தை உண்டாக்கி வைக்கும் செயல்களாகும் . இவ்வாறு செய்பவர் காபிராகி விடுவார் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ ... قُلْ أَبِٱللَّهِ وَءَايَـٰتِهِۦ وَرَسُولِهِۦ كُنتُمْ تَسْتَهْزِءُونَ ﴿٦٥﴾ لَا تَعْتَذِرُوا۟ قَدْ كَفَرْتُم بَعْدَ إِيمَـٰنِكُمْ ۚ... ﴾ [سورة التوبة، الآية: ٦٦ ، ٦٧].

நபியே ( அவர்களுக்குக் ) கூறுங்கள் . அல்லாஹ் விடயத்திலும் அவனது அத்தாட்சிகள் தூதர்கள் விடயத்திலுமா நீங்கள் பரிகாசம் செய்து கொண்டிருந்தீர்கள்? . நீங்கள் மன்னிப்புக் கோர வேண்டாம் (ஏனைனில் ) நீங்கள் ஈமான் கொண்டதன்பின் ( மீண்டும் ) காபிர்களாகி விட்டீர்கள்

நபி (ஸல்) அவர்களை உன்மையாக மனப்பூர்வமாக நேசிப்பதாக இருந்தால் அவர்களது வழிமுறைகளையும் நேர்வழியையும் முழுமையாகப் பின்பற்ற வேண்டும் . அத்துடன் அவர்களது நேர்வழிக்கு மாற்றமான அனைத்து விடயங்களையும் விட்டு விலக வேண்டும் .

அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான் ..

﴿ قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ ۗ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ ﴾ [سورة آل عمران، الآية: 31].

நபியே கூறுங்கள் . ( மக்களே ) நீங்கள் அல்லாஹ்வை விரும்புபவர்களாயின் என்னைப் பின்பற்றறுங்கள் . ( அப்போது ) அல்லாஹ் உங்களை விரும்புவான் உங்களது பாவங்களையும் மன்னிப்பான் . ( ஆல இம்ரான் 31 ம் வசனம் )

எனவே நபியவர்களைக் கண்ணியப்படுத்தும் விடயத்தில் பொடுபோக்காக நடந்து கொள்வதோ , எல்லைமீறிச் செல்வதோ இரண்டும் கூடாது . அவர்களுக்கு தெய்வீக சக்தி இருப்பதாகக் கருதவும் கூடாது . அதே நேரத்தில் அவர்கள் விடயத்தில் மரியாதைக் குறைவாக நடக்கவும் கூடாது . அவர்களது வழிமுறைகளைப் பின்பற்றி நடப்பதும் அவர்கள் சென்ற வழியில் நடந்து நேர்வழியினை அடைவதுமே அவர்களை உன்மையாக நேசித்தல் என்பதன் அர்த்தமாகும் .

13 – நபி ( ஸல்) அவர்களை உன்மையான அல்லாஹ்வின் தூதர் என்று உன்மைப்படுத்தல் . இது அவர்களை உன்மைப்படுத்துவதுடன் அவர்களது வழிகாட்டலின் படி இபாதத் செய்து வருவதன் மூலமே நிறைவேறும் . இதுவே அவர்களுக்குக் கட்டுப்படுதல் என்பதன் அர்த்தமாகும் . அவர்களுக்குக் கட்டுப்படுதல் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதைப் போன்றாகும் . அவர்களுக்கு மாறு செய்தல் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதைப் போன்றதாகும் .

# ஈமானின் நான்காவது கடமை

## இறுதி நாள் பற்றியநம்பிக்கை

இந்த உலக வாழ்க்கை முற்று முழுதாக முடிவு பெற்று மறுவுலக சங்சாரத்தில் பிரவேசிப்பதே மறுவுலகம் எனப்படும் , இந்நாள் ஒரு மனிதன் மரணித்து அவனது மண்ணறை வாழ்கையும் முடிவுற்றதன் பின்னரே ஆரம்பமாகும் அதன் பின் மஹ்ஷர் வெளியிலே அனைவரும் ஒன்று சேர்க்கப்பட்டு அதன் பின்னர் ஒவ்வொருவரும் அவரவர் நன்மைதீமைபற்றி விசாரணை செய்யப்பட்டு அதன்படி தீர்ப்பளிக்கப்பட்டு சுவனத்திற்கு அன்றேல் நரகத்திற்கு அனுப்பப்படுவர்

இறுதி நாள் பற்றி ஒவ்வொரு முஸ்ஸிமும் நம்பிக்கை கொள்வது ஈமானின் மிக முக்கிய அம்சமாகும்இந்த நம்பிக்கை இல்லாத ஒரு மனிதனை முஸ்ஸிம் எனச்சொல்ல முடியாது இதை மறுப்பவர் காபிராகி விடுவார் ஏனெனில்அல்லாஹ் கூறுகின்றான்

﴿ ... وَلَٰكِنَّ ٱلۡبِرَّ مَنۡ ءَامَنَ بِٱللَّهِ وَٱلۡيَوۡمِ ٱلۡأٓخِرِ ... ﴾ [سورة البقرة، الآية:١٧٧].

" நல்லது எதுவெனில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பிக்கை கொள்வதாகும்"

(ஸூரா பகராவசனம் 117)

மேலும் ஹதீதீலே வருவதாவது ஒரு முறை ஜிப்றீல் அலை அவர்கள் நபியவர்களிடம் வந்து ஈமான் என்றால் என்ன? என்று கேட்டார்கள் அதற்கு நபியவர்கள் ஈமான் என்பது அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் வேதங்களையும்நபிமார்களையும் இறுதி நாளையும் நன்மை தீமை இறை நாட்டத்தின்படியே இடம் பெறும் என்றும் நம்ப வேண்டும் என்று கூறினார்கள் .

(ஆதாரம் முஸ்லிம் )

மேலும் இறுதி நாள் நிகழ்வதற்கு முன்பாக ஏற்படும் அடையாளங்களையும் ஒரு முஸ்லிம் நம்பியாக வேண்டும் மார்க்க அறிஞர்கள்இறுதி நாளின் அடயாளங்களை இரு பிரிவுகளாகப்பிரித்துள்ளார்கள்

1... சிறிய அடையாளங்கள் ... இவை இறுதி நாள் நெருங்கி விட்டதென்பதைச் சுட்டிக்காட்டும் காரணிகளாகும் இவைகளில் அதிகமானவை இடம்பெற்று முடிந்து விட்டன இவற்றுக்கு உதாரணமாக நபி ஸல் அவர்களின் வருகை , நம்பிக்கை மோசடி அதிகரித்தல், மஸ்ஜித்களை அழகு படுத்துவதில் பெருமை பாராட்டுதல் , ஆடு மேய்க்கும் இடையர்கள்போன்றோர் பெரும் செல்வம் பெற்று மாளிகைகளை அமைப்பதில் போட்டி போடுதல், யூதர்களுடன் முஸ்லிம்கள்போர் புரிதல்,கால நேரம் விரைவாகக் கழிதல், இபாதத்களில் குறைவு ஏற்படல், கொலை விபச்சாரம் போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம் இது பற்றி இறைவன்

﴿ ٱقۡتَرَبَتِ ٱلسَّاعَةُ وَٱنشَقَّ ٱلۡقَمَرُ ۝١﴾ [سورة القمر، الآية:١].

(யுக முடிவு நாள் நெருங்கி விட்டது சந்திரன் பிழக்கப் போகின்றது என்று கூறுகின்றான்.

(ஸூராஅல் கமர் 1)

.. அவற்றில் சில இன்னும் நடை பெற வில்லை அவற்றில் சில ....

இமாம் மஹ்திஅலை அவர்களின் வருகை , தஜ்ஜால் வெளிப்படல் , ஈஸா நபியவர்கள் இறங்குதல் – இவர்கள் இறங்கியதும் கிறிஷ்தவர்களின் சிலுவைகளை உடைத்து தஜ்ஜாலையும் மற்றும் பன்றிகளையும் கொன்றொழித்து ஜிஸ்யா திறைப்பணத்தை ரத்துச்செய்து சரீஅத் சட்டத்தின் படி தீர்ப்பு வழங்குவார்கள் இவ்வேளையிலேயே எ.:ஜூஜ் – ம.:ஜூஜ் எனும் ஒரு கூட்டத்தினர் தோன்றி அட்டூளியம் புரியவே நபி ஈஸா அலை அவர்கள் அவர்களுக்கெதிராக துஆச்செய்யவே அனைவரும் அழிந்துபோவார்கள் . அதன்பின் மூன்று சந்திர கிரகணங்கள் கிழக்கிலும் மேற்கிலும் அறபுத்தீப கற்பத்திலும் ஏற்படும் பின்னர்

வானத்திலிருந்து ஒரு வகைப்புகை ஏற்பட்டு அனைவரையும் சூழ்ந்து கொள்ளும் பின் அல்குர்ஆன் வானத்திற்கு உயர்த்தப்பட்டு விடும். அதன்பின்னர் சூரியன் மேற்கிலிருந்து உதித்தல் தாப்பா: எனும் ஒரு பிராணி தோன்றல் போன்றன நிகழ்ந்து இறுதியாக ஒரு பிரமாண்டமான தீப்பிழம்பு தோன்றி மக்களனைவரையும் சிரியா தேசம் நோக்கி ஒன்று சேர்க்கும் இதுவே இறுதியாக நிகழும் அடையாளமாகும் .

ஹுதைபா றழி அவர்கள் அறிவிக்கின்றார்கள் ஒரு முறை நாங்கள் கூடிப்பேசிக்கொண்டிருந்த வேளை நபியவர்கள் எங்களைநோக்கி வந்து நீங்கள் எது விடயமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என வினவினார்கள் நாங்கள் மறுமை நாள் பற்றி பேசிக்கொண்டிருப்பதாகக் கூறினோம் அதற்கு நபியவர்கள் நீங்கள் பத்து அடையாளங்களைக்காணும்வரை மறுமை நாள் இடம் பெற மாட்டாது எனக்கூறி விட்டுப் பின் வரும் அடையாளங்களைக்கூறினார்கள் .

1...புகை வெளிப்படல் .
2...தஜ்ஜால் தோன்றுதல்.
3..தாப்பா: எனும் பிராணி வெளிப்படல்.
4..சூரியன் மேற்கிலிருந்து உதித்தல் .
5..ஈஸா (அலை) அவர்கள் உலகிக்கு இறங்குதல் .
6.. எ:ஜூஜ் ம:ஜூஜ் கூட்டத்தினர் தோன்றுதல்.
7..மூன்று கிரகணங்கள் ஏற்படல் .
8.. யமனிலிருந்து பெரு நெருப்பு வெளிப்பட்டு மக்களை . அவர்கள் எழுப்பப்படும் இடத்திலேயே ஒன்றுசேர்த்தல்.

(ஆதாரம் முஸ்லிம் )

இமாம் மஹ்தி அவர்களின் வருகை பற்றி நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்

எனது இறுதி வழித்தோன்றலிலருந்து மஹ்தி என்ற ஒருவர் தோன்றுவார் அவருக்கு அல்லாஹ் மழையைப்பொழிவிப்பான் உடனே பூமியிலிருந்து தாவர வர்க்கங்கள் முளைக்கும் . கால்நடைகள் பல்கிப்பெருகும் . மக்கள் தொகை அதிகரிக்கும் .அவர் ஏழு அல்லது எட்டு

வருடங்கள் ஜீவிப்பார் . .
( ஆதாரம் ஹாகிம் )

மேற்கூறிய அடையாளங்கள் மணி மாலையின் மணிகள் ஒன்றன்பின் ஒன்றாக விழுவது போன்று தொடர்ச்சியாக ஏற்படும் இந்த அடையாளங்கள் அனைத்தும் இடம்பெற்று முடிந்ததும் இறை கட்டளைப்படி யுக முடிவு நாள் சம்பவிக்கும் .எனவே மறுமை எனப்டுவது மனிதர்கள் தங்கள் புதை குழிகளிலிருந்து இறைகட்டளைப்படி எழுப்பப்பட்டு வீசாரணைசெய்யப்பட்டு நன்மை புரிந்தோருக்கு இன்பப் பாக்கியங்கழும் "தீமை புரிந்தோருக்கு தண்டனையும் வழங்கப்படும் நாளாகும் . இதுபற்றி அல்லாஹ்
கூறுகின்றான் ...

﴿ يَوْمَ يَخْرُجُونَ مِنَ ٱلْأَجْدَاثِ سِرَاعًا كَأَنَّهُمْ إِلَىٰ نُصُبٍ يُوفِضُونَ ﴿٤٣﴾ ﴾

[سورة المعارج، الآية:٤٣].

" இணை வைப்போர் நடப்பட்டவைகளான சிலைகளின் பால் வீரைந்து செல்பவர்களைப்போல் மண்ணறைகளிலிருந்து வீரைந்து வரும் நாள் ( அந் நாளாகும் )
( அல் மஆரிஜ் 155 ம் வசனம் )

இறுதி நாளைப்பற்றி அல்குர்ஆனில்பல்வேறுபெயர்களில்பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள –தை நாம் அவதானிக்கலாம் அவைகளில் சில ......

1..யவ்முல் கியாமா ( எழுப்பப்படும் நாள் ) இறைவன் கூறுகின்றான் !

﴿ لَآ أُقْسِمُ بِيَوْمِ ٱلْقِيَٰمَةِ ﴿١﴾ ﴾ [سورة القيامة، الآية:١].

எழுப்பப்படும் நாள் மீது சத்தியம் செய்கின்றேன்
( ஸூரா கியாமா 1 ம் வசனம் )

உ..அல் காரிஆ.: ( திடுக்கிடச்செய்யும் நாள்) அல்லாஹ் கூறுகின்றான் .

﴿ ٱلۡقَارِعَةُ ۝١ مَا ٱلۡقَارِعَةُ ۝٢ ﴾ [سورة القارعة، الآيتان:١، ٢].

திடுக்கிடச்செய்யும் நாள் . திடுக்கிடச்செய்யும் நாள் என்றால் என்ன ?

( ஸூரத்துல் காரிஆ:. 1,2 ம் வசனங்கள் .)

3..யவ்முல் ஹிஸாப் ( விசாரிக்கப்படும் நாள் ) அல்லாஹ் கூறுகின்றான்

﴿ ...إِنَّ ٱلَّذِينَ يَضِلُّونَ عَن سَبِيلِ ٱللَّهِ لَهُمۡ عَذَابٞ شَدِيدُۢ بِمَا نَسُواْ يَوۡمَ ٱلۡحِسَابِ ۝٢٦ ﴾ [سورة ص، الآية:٢٦].

..இறைபாதையை விட்டு வழி தவறியவர்களுக்கு அவர்கள் விசாரிக்கப்படும் நாளை மறந்து வாழ்ந்ததற்காக கடுமையான வேதனை இருக்கின்றது

( .ஸூரா ஸாத் 26ம் வசனம் ..)

4.. யவ்முத்தீன் ( நியாயத்தீர்ப்பு நாள் )

﴿ وَإِنَّ ٱلۡفُجَّارَ لَفِي جَحِيمٖ ۝١٤ يَصۡلَوۡنَهَا يَوۡمَ ٱلدِّينِ ۝١٥ ﴾

[سورة الانفطار، الآيتان:١٣، ١٤].

... பாவிகள் ஜஹீம் எனும் நரகத்திற்குச் செல்வார்கள் நியாயத்தீர்ப்பு நாளன்று அதிலே நுழைவார்கள்.

(ஸூரா இன்பிதார் 14,15 ம் வசனங்கள்)

5..தாம்மா:. ( மிகத்திடுக்கிடச்செய்யும் நாள்)

﴿ فَإِذَا جَآءَتِ ٱلطَّآمَّةُ ٱلۡكُبۡرَىٰ ۝٣٤ ﴾ [سورة النازعات، الآية:٣٤].

.....இரண்டாவது முறையாக ஸூர் ஊதப்படுவதறகான மிகத்திடுக்கிடச் செய்யும் நாள் வந்து விட்டால் ...

(ஸூரா நாஸிஆத் 34 ம் வசனம் ).

6..அல் வாகிஆத்

﴿ إِذَا وَقَعَتِ ٱلۡوَاقِعَةُ ۝١ ﴾ [سورة الواقعة، الآية:١].

( நிச்சயம் சம்பவிக்கக்கூடிய நாள் )...நிச்சயம் சம்பவிக்கக்கூடிய நாள் ஏற்பட்டு விடுமானால்...

( ஸூரா வாகிஆ 1 ம் வசனம்)

..

7அல் ஹாக்கா.: (உறுதியாக நிகழக்கூடிய நாள் )

﴿ ٱلۡحَآقَّةُ ۝١ مَا ٱلۡحَآقَّةُ ۝٢ ﴾ [سورة الحاقة، الآيتان:١، ٢].

....உறுதியாக நிகழும் நாள் ....உறுதியாக நிகழும் நாள் என்றால் என்ன? .

( ஸூரா அல் ஹாக்கா.: 1ம் 2 ம்வசனங்கள் .)

8அஸ்ஸாக்கா.: ( காதைச்செவிடாக்கும் பயங்கர சத்தத்தின் நாள் )

﴿ فَإِذَا جَآءَتِ ٱلصَّآخَّةُ ۝٣٣ ﴾ [سورة عبس، الآية:٣٣].

காதைச்செவிடாக்கும் பயங்கர சத்தத்தையுடைய நாள் ஏற்படுமானால் ...

( ஸூரா அபஸ.: 33 ம் வசனம் )

9 அல்ஹாஸியா.: (சூழ்ந்து கொள்ளும் நாள் )

﴿ هَلۡ أَتَىٰكَ حَدِيثُ ٱلۡغَٰشِيَةِ ۝١ ﴾ [سورة الغاشية، الآية:١].

சூழ்ந்து கொள்ளக்கூடிய நாளின் செய்தி உமக்குக் கிடைத்ததா? .

. (ஹாஸியா 1 ம் வசனம் .)

இவை போன்று பல்வேறு பெயர்களில் இறுதி நாள் பற்றி விரிவாகக்கூறப்பட்டுள்ளமை அந்நாளின் கடின நிலையையும் அது பற்றிய நம்பிக்கையின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றன .

# இறுதி நாள் பற்றி நாம் எவ்வாறு நம்ப வேண்டும்.?

இறுதி நாள் பற்றிய நம்பிக்கையை சுருக்கமானது , விரிவானது என இரு பிரிவாக வகைப்படுத்தலாம்….

சுருக்கமான நம்பிக்கை எனப்படுவது அல்லாஹ் என்றாவது ஒரு நாள் இவ்வுலகத்தை முழுமையாக அழித்துவிட்டுபின் அனைவரையும் ஒரு இடத்தில் ஒன்று சேர்த்து அவர்களது செயல்களுக்குத தக்கவாறு அவர்களைச்சுவனத்திற்கோ நரகத்திற்கோ அனுப்புவான் என்று நம்புவதாகும் . இதற்கு ஈமான் முஜ்மல் எனப்படும் .

இது பற்றி அல்குர்ஆன்கூறுவதாவது …

﴿ قُلۡ إِنَّ ٱلۡأَوَّلِينَ وَٱلۡأٓخِرِينَ ۝٤٩ لَمَجۡمُوعُونَ إِلَىٰ مِيقَٰتِ يَوۡمٖ مَّعۡلُومٖ ۝٥٠ ﴾

[سورة الواقعة، الآيتان: ٤٩، ٥٠].

“நபியே கூறுங்கள் .முதல் ஜீவனிலிருந்து இறுதி ஜீவன் வரை அனைவரும் அறியப்பட்ட ஒரு தினத்திலே ஒன்று சேர்க்கப்படக்கூடியவர்களே .. . . (ஸூரா அல் வாகிஆ.:. 49 ம் 50 ம் வசனங்கள்.)

மறுமை பற்றி விரிவாக நம்புவதென்பது ஒரு மனிதன் தனது மரணத்தின் பின் சந்திக்கவிருக்கும் பல்வேறு கட்டங்களை உறுதியாக நம்புவதாகும் . அவற்றைப்பின் வருமாறு வகைப்படுத்தலாம் ..

## 1 – புதைகுழியில் நிகழவிருக்கும் விடயங்கள்.

ஒரு மனிதன் மரணித்ததன் பின் புதை குழியில் அடக்கப்பட்டதும் அவரிடம் மலக்குகள் (வானவர்கள் ) வருகை தந்து உனது கடவுள் யார் ? , உனது நபி

யார் ?, உனது மதம் என்ன? போன்ற கேள்விகளைக் கேட்பர் .உலகில் இறை நம்பிக்கையுடன் வாழ்ந்த மு.:மினை அல்லாஹ் சரியான பதில்களைக்கூற வைப்பதன் மூலம் ஸ்திரப்படுத்தி வைப்பான் நபியவர்கள் இது பற்றிக்கூறுகையில் ...

". ஒருவன் மு.:மினாக இருந்தால் அவ்வினாக்களுக்கு எனது கடவுள் அல்லாஹ் எனது மார்க்கம் இஸ்லாம் , எனது நபி முஹம்மது (ஸல்) என பதிலளிப்பான் ... என்று கூறினார்கள்.

. (புகாரிமுஸ்லிம்)

அம்மனிதன் நயவஞ்சகமிகு முனாபிக்காக இருந்தால் .. எனக்கு எதுவுமே தெரியாது மக்களில் சிலர் கூறியதை நானும் கூறிக்கொண்டிருந்தேன் .என பதிலளிப்பான் .உடனே மலக்குகளால் அவனுக்கு இரும்புச்சம்மட்டி கொண்டு அடிக்கப்படும். அவனது அலறலை மனித ஜின் தவிர்ந்த அனைவரும் கேட்கின்றனர்.

( புகாரி முஸ்லிம் )

எனவே ஹதிஸ்களில் வந்தவாறு கப்ரில் நிகழும் கேள்வி – கணக்கு அதற்கு மு.:மின் , காபிர் அளிக்கும் பதில்கள் இவற்றின் முறையானது எப்படியென்று எமக்குத்தெரியாமை போன்றவற்றை நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

## உ– கப்ரில் ஏற்படவிருக்கும் வேதனைகள் ..

முன்னையதை விட மிகச்சிரமமானதாகவே இருக்கும் .சுருங்கக்கூறின் கப்றுடைய வாழ்க்கை ஒன்றில் சுவனத்தின் பூஞ்சோலையாக இருக்கும்.அன்றேல்நரகத்தின் படுகுழியாகஇருக்கும்.எனவே ஒருவனுக்கு எப்போது மரணம் சம்பவிக்கின்றதோ அப்போது அவனது மறுவுலக வாழ்வு ஆரம்பித்து விடுகின்றதது.கப்ரில் ஏற்படும் இன்பங்கள் , வேதனைகள் அனைத்துமே உயிர் உடல் இரண்டுக்குமே ஏற்படுகின்றன.சில வேளைகளில் உயிருக்கு மாத்திரம் தனியாகவும் ஏற்படுவதுண்டு .இன்ப சுகங்கள் யாவும் மு.:மின்களுக்கும் வேதனைகள் காபிர்களுக்கும் உரியதென்பது தெளிவான விடயமாகும் .

கப்ருடைய வாழ்க்கை ஒருவன் தனது மறுமைக்கான பயணத்தின் போது சந்திக்கவிருக்கும் முதலாவது வீடயமாகும்.அதில் அவன் வெற்றி பெற்றால் ஏனையவற்றில்இலகுவாக வெற்றி பெறுவான்.அதில் அவன் வெற்றியடையாவிடில் அதன்பின் அவன் சந்திக்கவிருக்கும் இடங்கள் அனைத்தும் அவனுக்கு மிகச் சிரமமானதாகவே அமையும் .

மண்ணறையில் சந்திக்கவிருக்கும் இந்த வாழ்க்கைக்கு (பர்ஸக்.:.) திரையுலக வாழ்க்கை எனப்படும் .இவ்வாழ்கையை மரணித்த ஒவ்வொருவரும் அனுபவித்தே ஆக வேண்டும் .அவர் புதை குழியில் புதைக்கப்பட்டாலோ படா விட்டாலோ , உடல் முழுமையாக எரிந்து சாம்பலாக்கப்பட்டாலோ, நீரில் மூழ்கி இறந்தாலோ , பறவை – விலங்குகள் உண்டு விட்டாலும் சரியே .

கப்றுடைய வேதனை பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின் வருமாறு கூறுகின்றான் ..

﴿ ٱلنَّارُ يُعۡرَضُونَ عَلَيۡهَا غُدُوّٗا وَعَشِيّٗاۖ وَيَوۡمَ تَقُومُ ٱلسَّاعَةُ أَدۡخِلُوٓاْ ءَالَ فِرۡعَوۡنَ أَشَدَّ ٱلۡعَذَابِ ﴾ [سورة غافر، الآية:٤٦].

( அவர்களுக்கு நரகம் காலையிலும் மாலையிலும் எடுத்துக்காட்டப்படுகின்றது .மறுமை நாள் சம்பவித்ததும் பிர்அவ்னின் கூட்டத்தினரை கடுமையான வேதனைக்குள் உட்படுத்துங்கள் ) (என்று சொல்லப்படும் ) . ( ஸூரா அல் காபிர் 36 ம் வசனம்)

மேலும் நபியவர்கள் கூறினார்கள் ...

நீங்கள் மரணித்தவர்களை அடக்காது விட்டு விடுவீர்களோ என்று நான் அஞ்சாதிருப்பின் கப்ரில் ஏற்படும் வேதனைகளை உங்களுக்கும்கேட்கச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திருப்பேன் .

( ஆதாரம்முஸ்லிம்)

## 3 – ஸூர் எனும் குழலில் ஊதப்படுவதை நம்புவது

ஸூர் என்பது ஒரு குழலாகும் இஸ்ராயீல் எனும் ஒரு வானவர் அதற்குப்பொறுப்பாக்கப்பட்டுள்ளார் .அவர் முதலாவது தடவை ஸூர் ஊதியதும் அல்லாஹ் நாடிய சிலவற்றைத்தவிர ஏனைய படைப்பினங்கள் அனைத்தும் அழிந்து விடும் .பின்இரண்டாவது தடவை ஸூர் ஊதியதும் அல்லாஹ்வின் கட்டளைப்படி முதன்முதல் படைப்பு உட்பட இறுதியான படைப்பு வரைக்குமான அனைத்துப்படைப்பினங்களும் உயிர் பெற்று எழுந்து நிற்கும் .
அல்லாஹ் கூறுகின்றான் ……

﴿ وَنُفِخَ فِي ٱلصُّورِ فَصَعِقَ مَن فِي ٱلسَّمَٰوَٰتِ وَمَن فِي ٱلْأَرْضِ إِلَّا مَن شَآءَ ٱللَّهُ ثُمَّ نُفِخَ فِيهِ أُخْرَىٰ فَإِذَا هُمْ قِيَامٌ يَنظُرُونَ ﴿٦٨﴾ ﴾ [سورة الزمر، الآية:٦٨].

ஸூர் ஊதப்பட்டதும்வானம் – பூமியிலுள்ள அல்லாஹ் நாடியவற்றைத் தவிரவுள்ள அனைத்துப்படைப்பினங்களும் மூர்ச்சையுற்று வீழ்ந்து விடும் . பின் மறுதடவை ஊதப்பட்டதும் அவர்கள்’ எழுந்தவர்களாக நின்று (சுற்றுமுற்றும் ) பார்ப்பார்கள் .( ஸூரத்துஸ் ஸுமர் )

நபி (ஸல்) கூறியதாவது…….

பின்பு ஸூர் எனும் குழல் ஊதப்படும் அதனைச்செவியுறும் அனைவரும் மூர்ச்சையுற்று வீழ்ந்து விடுவர் .பின்பு அல்லாஹ் ஒரு மழையைப் பொழிவித்ததும் ஜீவராசிகளின் உடல்கள் முளைத்து வளரஆரம்பிக்கும் பின் மற்றொரு முறை ஸூர் ஊதப்பட்டதும் அனைவரும் எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்ப்பார்கள் .
(ஆதாரம் முஸ்லிம் )

## 4 – மரணத்தின் பின் மீண்டும் எழுப்பப் படுவதை நம்புதல் ..

-1

அனைத்துப்படைப்பினங்களும் இறந்து அழிந்து ஒழிந்ததன் பின்னர் அல்லாஹ் இரண்டாவது முறையாக ஸூர் ஊதுவான் அப்போது அனைவரும் அகில உலக இரட்சகனான அல்லாஹ்வின் முன்னிலையில் எழுந்து நிற்பார்கள். மேற்படி ஸூர் ஊதப்பட்டதும் உயிர்கள் அனைத்தும் அதனதன் உடல்களுக்குத்திரும்பி அனைவரும் மஹ்ஸர் மைதானத்தை நோக்கி பாதணிகளின்றி வெற்றுக்காலுடனும் , உடையின்றி நிர்வாணமாகவும்,விருத்தசேஷனம் செய்யப்படாதவர்களாகவும் எழுந்து வருவார்கள் .இந்நிலை மிக நீண்ட காலம் நீடிக்கும் .சூரியன் அவர்களுக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவரப்படும் .அதன் வெப்பமும் பன்மடங்கு அதிகரிக்கப்படும் .அதனால் மக்களின் வியர்வை வெள்ளம் போல் பெருக்கெடுத்து சிலருக்கு அவர்களது கரண்டைக்கால்வரை , சிலருக்கு முழங்கால் வரையிலும், இடுப்பளவுக்கு சிலருக்கும் ,சிலருக்கு நெஞ்சளவுக்கும், மேலும் சிலருக்கு தோள்ப்புயம் வரையிலும் வெள்ளம் பெருக்கெடுத்தோடும் .மேலும் சிலரோ முழுமையாக வெள்ளத்தில் மூழ்கி விடுவார்கள் . இவையனைத்தும் அவரவர் புரிந்த நன்மை தீமைகளுக்கேற்ப வித்தியாசப்படும்.

எனவேமரணத்தின்பின்னர்மீண்டும்எழுப்பப்படுதலென்பதுஅல்குர் ஆன் அல்ஹதீதின் மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும் .அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ ... قُلْ بَلَىٰ وَرَبِّى لَتُبْعَثُنَّ... ﴾ [سورة التغابن، الآية:٧].

நபியே கூறுங்கள் .. ஆம் என் இரட்சகன் மீது சத்தியமாக நீங்கள் மீண்டும் (உயிர்கொடுத்து ) எழுப்பப்படுவீர்கள் . (ஸூரத்தத்காபுன் 7ம் வசனம் .)

﴿ كَمَا بَدَأْنَآ أَوَّلَ خَلْقٍ نُّعِيدُهُۥ ... ﴾ [سورة الأنبياء، الآية:١٠٤].

நாங்கள் முதலாவது படைப்பை எப்படி ஆரம்பித்தோமோ அவ்வாறே அவற்றை மீண்டும் உயிர்ப்பிப்போம் .( குர்ஆன் )

எனவே மரணத்தின் பின் மீண்டும் எழுப்படுதல் அல்குர்ஆன் அல்ஹதீதின் மூலம் நிரூபிக்கப்பட்ட உன்மையாகும். குர்ஆன் ஹதீஸைப்பொறுத்தவரை பின் வரும் ஆதாரங்கள் அதற்கு சான்று பகர்கின்றன .

﴿ كَمَا بَدَأْنَآ أَوَّلَ خَلْقٍ نُّعِيدُهُۥ ... ﴾ [سورة الأنبياء، الآية:١٠٤].

..ஆம் முதல் படைப்பை நாம் எப்படி ஆரம்பித்தோமோ அவ்வாறே அதை மீண்டும் மீட்டுவோம். ( ஸூரத்துல் அன்பியா:. 104 ம் வசனம் )

﴿ ...قَالَ مَن يُحْيِ ٱلْعِظَٰمَ وَهِىَ رَمِيمٌ ۝٧٨ قُلْ يُحْيِيهَا ٱلَّذِىٓ أَنشَأَهَآ أَوَّلَ مَرَّةٍ ۖ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيمٌ ۝٧٩ ﴾ [سورة يس، الآيتان:٧٨، ٧٩].

( நிராகரிப்போர்) உக்கி இறந்த எலும்புகளை யாரால் மீண்டும் உயிர்ப்பிக்க முடியும் என்று கேட்கின்றனர் நீங்கள் கூறுங்கள் முதல் தடவையாக அதை உருவாக்கி (உயிர் கொடுத்த) அல்லாஹ்தான் அதனை மீண்டும் உயிர்கொடுத்து எழுப்புவான் .அவன் அனைத்துப்படைப்பினங்களையும் நன்கறிந்தவன் .

( ஸூரா யாஸீன் 78,79ம் வசனங்கள் )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்...

பின்னர் ஸூர் ஊதப்படும் அதனைச்செவியுறும் எவருமே மரணித்து விழுந்து விடுவர் .

(ஆதாரம் முஸ்லிம் 4 – 2259) )

அதே போல் அல்லாஹுத்தஆலா இந்த உலகத்திலேயே மரணித்த சில உயிர்களை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பியதன் மூலம் தன்னுடைய வல்லமையை நிரூபித்துள்ளான் . எனவே

அவன் மறுமையில் அனைவரையும் உயிர்கொடுத்து எழுப்புவதென்பது சந்தேகத்திற்கிடமற்ற ஓர் விடயமாகும் .

உலகிலேயே அல்லாஹ் மரணிக்கச்செய்து மீண்டும் உயிர்ப்பித்தவைகளில் சில….

1–நபி மூஸா அலை அவர்களது சந்ததிகளில் சிலரை மரணித்ததன் பின் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பியுள்ளான் .

2–பனு இஸ்ரவேலர்களில் படு கொலை செய்யப்பட்ட ஒருவரை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பியுள்ளான் .

3மரணத்திற்கஞ்சி வீட்டை வீட்டு வெளியேறி தப்பியோடிய ஆயிரக் கணக்கானோரை மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பியுள்ளான் .

4–குகை வாசிகளான சிலரை 300 ஆண்டுகள் மரணித்த நிலையில் வைத்திருந்து பின்னர் உயிர் கொடுத்து எழுப்பியுள்ளான் .

5 நபிஇப்றஹீம்(அலை) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான்கு பறவைகளை இறந்த பின் மீண்டும் உயிர்ப்பித்துள்ளான்.

6–உஸைர் அலை அவர்களை மரணிக்கச்செய்து நூறு வருடங்களின் பின்னர் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பியுள்ளான்

( பார்க்க… ஸூரத்துல் பகரா )

பகுத்தறிவு ரீதியாக நோக்கும் போது கூட மரணித்த ஒருவரை மீண்டும் உயிர்ப்பிப்பதென்பது அல்லாஹ்வைப்பொறுத்த வரை சிரமமானதொன்றல்ல . ஏனெனில் அவன் மனிதனை அவனுக்கு உயிர் –உடல் இரண்டுமே இல்லாதிருந்த வேளையிலேயே தன் ஆற்றலினால் அவனைப் படைத்தான். எனவேஉயிர் மாத்திரமே இல்லாத உடலுக்கு உயிர் கொடுப்பதென்பது அவனுக்கு முன்னையதை விட இலகுவானதே …

## 5 –மஹ்ஸர் மைதானத்தில் அனைவரும் ஒன்று கூட்டப்பட்டு விசாரிக்கப்படுவதை நம்பல்.

முஸ்லிமான அனைவரையும்அல்லாஹ் மஹ்ஸர் எனும் ஒரு மைதானத்தில் ஒன்று சேர்த்து நீதியைநிலை நாட்டுமுகமாக விசாரணை நடாத்தி ஒவ்வொருவரும் புரிந்த செயல்களுக்கேற்ப பிரதிபலன் வழங்குவான் என நம்ப வேண்டும் . இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது .

﴿ ...وَحَشَرۡنَٰهُمۡ فَلَمۡ نُغَادِرۡ مِنۡهُمۡ أَحَدٗا ﴿٤٧﴾ ﴾ [سورة الكهف، الآية:٤٨].

(அவர்கள் அனைவரையும் நாம் மஹ்ஸர் வெளியில்' ஒன்று கூட்டுவோம் , அவர்களில் எவரையும் விட்டு விடமாட்டோம்)

. (ஸூரத்துல்கஹ்பு47 ம் வசனம்)

மேலும் கூறுகையில்

﴿ فَأَمَّا مَنۡ أُوتِيَ كِتَٰبَهُۥ بِيَمِينِهِۦ فَيَقُولُ هَآؤُمُ ٱقۡرَءُواْ كِتَٰبِيَهۡ ﴿١٩﴾ إِنِّي ظَنَنتُ أَنِّي مُلَٰقٍ حِسَابِيَهۡ ﴿٢٠﴾ فَهُوَ فِي عِيشَةٖ رَّاضِيَةٖ ﴿٢١﴾ ﴾

[سورة الحاقة، الآيات:١٩–٢١].

.....எவனுக்கு அவனது செயலேடு அவனது வலக்கரத்தில் கொடுக்கப்படுகிறதோஅவன் (மகிழ்ச்சிமிகுதியால்) வாருங்கள் எனது செயலேட்டைப்படித்துப்பாருங்கள் .நிச்சயமாக நான் எனக்குரிய விசாரணையை சந்திக்க வேண்டியிருக்கும் என நம்பியிருந்தேன் என்று கூறுவான் . ஆகவே அவன் திருப்தி மிகு வாழ்விலேதிழைத்திருப்பான்..

. ( ஸூரத்துல் ஹாக்கா.ஃ 25,26 ம் வசனங்கள் )

ஹஸ்ர்(ஒன்று கூட்டல் ) என்பதுஅனைவரையும் குறிப்பிட்ட ஓர் இடத்தில் விசாரணைக்காக ஒன்று கூட்டுவதைக்குறிக்கும் . பஹ்த்.ஃ ,ஹஸ்ர் இரண்டுக்கும் இடையிலான வேறுபாடாவது பஹ்த்.ஃ என்பது மரணித்த உடல்களுக்கு உயிர் கொடுத்து எழுப்புவதாகும் . ஹஸ்ர் என்பது அவ்வாறு எழுப்பட்ட உயிர்களை குறிப்பிட்ட ஓர் இடத்தில் ஒன்று சேர்ப்பதைக் குறிக்கும் .

# விசாரணை நடத்தி அதன் பின் தீர்ப்பு வழங்கப்படுவதைநம்புதல்

விசாரணை நடாத்துதல் என்பது அல்லாஹ் தன் அடியார்கள் அனைவரையும் தன் முன்னிலையில் நிறுத்தி அவர்கள் புரிந்த செயல்களைச் சொல்லிக்காட்டுவதாகும் . இறையச்சமுள்ள அடியார்களுக்கு அவர்கள் புரிந்த செயல்களைச்சொல்லிக்காட்டுவதுடன் இலகுவாக முடிவடையும் .உடனே அவர்கள் உலகில் தமது குறைகளை பிறருக்குக்காட்டாமல் மறைத்து மறுமையில் அவற்றை மன்னித்த இறைவனைப் புகழ்ந்து கொள்வார்கள் . ஒவ்வொருவரினதும் ஈமானின் அளவுக்கேற்ப அவர்கள் ஒன்றுகூட்டப்படுவார்கள் .மலக்குகள் அவர்களை வரவேற்று அவர்களுக்கு சுவனம் கிடைக்குமென நன்மாராயம் கூறுவார்கள் மேலும் கவலைப்படவோ சஞ்சலப்படவோ இந்த நாளின் நிலை கண்டு கலங்க வேண்டியதோ இல்லையெனவும் ஆறுதல் கூறுவார்கள் .அந்த நாளில் மு:.மின்களின் வதனங்கள்வெண்மையானதாக ஒளி வீசும் அழகுடையதாக புன்னகை பூத்ததாக இலங்கிக் கொண்டிருக்கும்.

மறுமையைப்பொய்ப்பித்து வாழ்ந்த காபிர்களுக்கு விசாரணை மிகவும் கடுமையாக இருக்கும் .ஒவ்வொருசிறிய,பெரிய குற்றங்களும் துருவித்துருவி ஆராயப்படும் .உலகில் அவர்கள் மறுமையைப்பொய்ப்பித்து மனம்போனபடி களித்ததற்காக அவர்களை அவமானப்படுத்தும் வகையில் முகம்குப்பற இழுத்துச் செல்லப்படும்.

மறுமையில் முதன்முதலாக விசாரணை செய்யப்படுவது

எமதுநபிமுஹம்மது (ஸல்) அவர்களது சந்ததியினரே. அவர்களில் 70 ஆயிரம் நபர்கள் தமது கலப்பற்றதவ்ஹீத்கொள்கையின் காரணமாக எவ்விதமான கேள்வி கணக்கோ விசாரணையோ இன்றி சுவனம் செல்வார்கள். அவர்கள் பின் வரும் விடயங்களைக்கடைப்பிடித்து வாழ்ந்தவர்களென நபி (ஸல்) அவர்கள் அடையாளம் காட்டியுள்ளார்கள்.

சாத்திரம் , குறி , மந்திரித்தல் போன்றவற்றில் ஈடுபடாதவர்கள் .

பறவைச்சகுனம் பார்க்காதவர்கள்.

அனைத்து இன்ப துன்பங்களிலும் அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை வைத்து நடந்தவர்கள்.

உக்காஸா எனும் பெயருடைய ஒரு ஸஹாபியும் அந்த 70 ஆயிரம் நபர்களில் ஒருவர் என நபி (ஸல்) அவர்கள் சான்று பகன்றுள்ளார்கள் .

அல்லாஹ்வுக்குச்செய்ய வேண்டிய கடமைகளில் முதலில் தொழுகையைப்பற்றியே ஒவ்வொருவரிடமும் வீசாரணை செய்யப்படும் . மனிதர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களில் முதலில் கொலைக்குற்றத்தைப்பற்றியே விசாரிக்கப்படும்.

மறுமை நாளில் முதலாவதாக நபி (ஸல்) அவர்களுடைய சமூகத்தினரே விசாரணை செய்யப்படுவார்கள்.

## ஆறாவது் (நீர்த்தடாகம் .)

அதாவது நபி (ஸல்) அவர்களுக்கு மறுமையில் நீர்த்தடாகம் ஒன்று கொடுக்கப்படும் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் . அது பிரமாண்டமான சுவைமிகு ஓர் நீரூற்றாகும். மறுமையிலே இனிய பானம் அந்த ஆற்றிலே நிறைந்திருக்கும் . மு.ஃமின்கள் அந்த இடத்திற்கு வருவார்கள் .

அந்தநீரூற்றின் குணாதிசயங்கள் …

ஆது பாலை விட வெண்மையானது .பனிக்கட்டியை விடக்குளிரானது .தேனை விட இனிமையானது . கஸ்தூரியை விட வாசமானது அதன் நீளமும் அகலமும் சமமானது . அதன் ஒவ்வொரு மூலையின் தூரமும் ஒரு மாதகால நடைதூரமாகும் அது சுவனம் வரை நீண்டிருக்கும் யார் அதிலிருந்து ஒரு மிடர் நீர் அருந்துகின்றாரோ அதன் பின் அவருக்குத் தாகமே ஏற்பட மாட்டாது .

நபி ஸல் அவர்கள் கூறினார்கள் ….. என்னுடைய நீரூற்று ஒரு மாத கால நடை தூரத்தின் அளவாகும் . அதன் நீர் பாலை விட வெண்மையானது . கஸ்த்தூரியை விட மணமானது . இன்னும் அதன் பாத்திரங்களின் அளவு வானத்தின் நட்சத்திரங்களின் அளவாகும் . அதிலிருந்து யார் நீர் அருந்துகின்றார்களோ அதன் பின் அவருக்குத் தாகமே ஏற்பட மாட்டாது .

( ஆதாரம்புகாரி –முஸ்லிம்)

## .. ஏழாவது சிபாரிசு செய்தல் .

மக்கள் மறுமையில் மஹ்ஸர் வெளியிலே ஒன்று சேர்க்கப்பட்டதும் நீண்ட காலம் அந்த இடத்தில் நின்று கொண்டிருப்பதனால் வெயிலின் அகோரம் தாங்க முடியாமல் சகிக்க முடியாத அந்தக் கஷ்டத்திலிருந்து விடிவு கிடைப்பதற்காகவும் இறைவனிடத்தில் தமக்காக சிபாரிசு செய்வதற்காகவும் உலுல் அஸ்ம்கள் எனப்படும் நபிமார்களை நாடுவார்கள் . அதற்கு ஒவ்வொருவரும் தங்களால் முடியாது என்று ஒவ்வொரு காரணங்களைச் சொல்லித் தட்டிக்கழிக்கவே இறுதியாக எமது நபியாகிய முஹம்மத் (ஸல்) அவர்களிடத்திலே வருவார்கள் . உடனே நபியவர்கள் ஓரிடத்தில் எழுந்து நின்று அல்லாஹ்வைப் புகழ்ந்து அவன் அவர்களுக்கு அளித்துள்ள அந்தஸ்த்துக்களைக் கூறி அர்ஸின் கீழே சுஜூதில் வீழ்ந்து பிரார்த்திப்பார்கள் . உடனே அல்லாஹ் அவர்களது புகழ்ச்சியையும் அவர்கள் கோரி நின்ற பிரார்த்தனையையும் ஏற்றுக் கொண்டு தாங்க முடியாத கஷ்டத்தினால் அல்லலுற்றிருக்கும் மக்களுக்குச் சிபாரிசு செய்வதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுப்பான்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் …

மறுமையில் வியர்வை அதிகரிப்பதால் காதுச்சோனையின் அரைவாசியை வியர்வை நீரின் மட்டம் அடைகின்ற அளவுக்கு சூரியன் மிக அண்மையில் கொண்டு வந்து நிறுத்தப்படும் .மக்கள் நபிகளாரான ஆதம் , இப்றாஹீம், மூஸா , முஹம்மத் ஆகியோரிடத்தில் உதவி தேடுவார்கள் .அவ்வேளை மக்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கும் படி சிபாரிசு செய்வதற்காக அல்லாஹ் முஹம்மது நபி அவர்களை மகாமும் மஹ்மூதா ( புகழப்பட்இடம் ) எனும் இடத்தில் எழுப்புவான் . உடனே அவர்கள் அவ்விடத்திற்கு வருவார்கள் ..

இந்த மாபெரும் சிபாரிசினை அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் சொந்தமாக்கியிருப்பதுடன் வேறு சில விடயங்களில் சிபாரிசு செய்யும் உரிமையையும் அல்லாஹ் அவர்களுக்கு வளங்கியுள்ளான் . அவையாவன ...

அ – உலகில் தாம் புரிந்த நன்மைகளும் ,தீமைகளும் சமமாகக்காணப்படும் ஒரு கூட்டத்தினரை சுவனத்தில் நுழைவிக்கும் படி சிபாரிசு செய்தல் . ( இவ்விடயத்தை சில மார்க்க அறிஞர்கள் மாத்திரம் கூறுகின்றனர் . ஆனால் இதற்கு ஸஹீஹான ஹதீதோ, ஸஹாபாக்கள் கூறியதாகவோ எவ்வித சான்றும்

ஆ – சுவனம் செல்லத்தகுதி பெற்றவர்களை சுவனத்தில் நுழைவிக்கக் கோரி சிபாரிசு செய்தல் .

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ... ( மறுமையில் நான் ) சுவர்க்க வாயலுக்கு வந்து அதனைத்திறக்குமாறு வேண்டுவேன் . சுவர்க்கத்தின் பொறுப்பாளர் நீங்கள் யார் ? என்று கேட்பார் . நான்தான் முஹம்மது என்று கூறுவேன் . உடனே அவர் உங்கள். மூலமாகத்தான் இதனைத்திறக்க வேண்டுமென எனக்குக் கட்டளையிடப் பட்டிருக்கின்றது .இதற்கு முன் நான் யாருக்காகவும் சுவர்க்கத்தைத் திறந்ததில்லை என்று கூறுவார் .

இ – நரகத்திற்குச் செல்லத் தகுதியான ஒரு கூட்டத்தினரை நரகத்தில் நுழைவிக்காமல் இருப்பதற்குச் சிபாரிசு செய்தல் .

நபி ஸல்) அவர்கள் கூறினார்கள் . ... எனது சிபாரிசு என் உம்மத்தினரில் பெரும் பாவம் செய்தோருக்கு உண்டு . .
( நபி மொழி )

ஈ –சுவர்க்க வாசிகளின் அந்தஸ்த்தினை உயர்த்திக் கொடுக்கும் படி இறைவனிடம் சிபாரிசு செய்தல் .

நபி (ஸல்) அவர்கள் ( அபூஸலமாஎனும் ஒரு நபித்தோழரை நல்லடக்கம் செய்யும் போது கூறினார்கள் .) யா அல்லாஹ் அபூ ஸலமாவினது பாவங்களை மன்னிப்பாயாக . சொர்க்கத்திலே அவரது அந்தஸ்த்தினை அதிகரிக்கச் செய்வாயாக . என்று அவருக்காகப் பிரார்த்தனை செய்துள்ளார்கள் .

உ எவ்வித கேள்வி கணக்கோ தண்டனையோ இன்றிஒரு பெரும் கூட்டத்தினரை சுவனத்தில் நுழைவிக்கும் படி சிபாரிசு செய்தல் . உக்காஸா பின் முஹ்ஸின் அவர்களின் ஹதீது இதற்கு ஆதாரமாகும் அதாவது எழுபதாயிரம் மனிதர்கள் எவ்வித கேள்வி கணக்கோ தண்டனையோ இன்றி சுவனம் நுழைவார்கள் நபியவர்கள் மேற்படி உக்காஸாவையும் அவர்களில் ஒருவராக ஆக்கும் படி துஆச் செய்துள்ளார்கள் .

ஊ –நரகத்தில் நுழைந்த பாவிகளில் சிலரை நரகத்தை விட்டும் விடுதலையளிக்கும் படி சிபாரிசுசெய்தல் .

நபியவர்கள் கூறினார்கள் ... என்னுடைய சிபாரிசு எனது சமூகத்தைச் சேர்ந்த பாவிகளுக்கு இருக்கின்றது .

நபியவர்கள் கூறினார்கள் .... எனது சிபாரிசு அவருக்கு ( அபூ தாலிபுக்கு) ப் பலன் தரக்கூடும் . நரகத்தில் உள்ள பாதணியை அவருக்கு அணிவிக்கப்படும் . அதன் உஷ்னத்தால் அவரது மூளை கொதிக்கும் . ( நான் அவருக்குச் சிபாரிசு செய்திருக்காவிடில் அவர் அடி நரகத்தில் வேதனை செய்யப்பட்டிருப்பார் )

( புகாரி முஸ்லிம் )

எந்த விதமான சிபாரிசும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இரண்டு நிபந்தனைகளுண்டு ...

1 சிபாரிசு செய்பவரும் , செய்யப்படுபவரும் அல்லாஹ்வின் விருப்பத்திற்குள்ளானவர்களாக இருத்தல் வேண்டும் .

௨ சிபாரிசு செய்பவருக்கு சிபாரிசு செய்யுமாறு அல்லாஹ்வின் உத்தரவு கிடைக்க வேண்டும் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ وَلَا يَشۡفَعُونَ إِلَّا لِمَنِ ٱرۡتَضَىٰ ...﴾ [سورة الأنبياء، الآية:٢٨].

அவன் விரும்பியவர்களைத்தவிர ( மற்ற எவருக்கும் ) இவர்கள் பரிந்துரை செய்ய மாட்டார்கள் .
( ௨ – ௨8 )

﴿ ...مَن ذَا ٱلَّذِى يَشۡفَعُ عِندَهُۥٓ إِلَّا بِإِذۡنِهِۦۚ ...﴾ [سورة البقرة، الآية:٢٥٥].

அவனதுஅனுமதியின்றிஅவனிடத்தில் பரிந்து பேசுபவர் யார் ? . . ( ௨ – ௨25 )

## எட்டாவது `..( நன்மை தீமைகளை நிறுக்கப்படும்) தராசு .

மீஸான் எனும் தராசு ஒன்று இருப்பது உன்மையாகும் . அது இருப்பதாக நம்பிக்கை கொள்வது கடமையாகும் . மறுமையில் மனிதர்கள் புரிந்த அமல்களை நிறுத்து – எடைபோட்டு அதற்கேற்ப கூலி வளங்கும் பொருட்டு அல்லாஹ் அதைச் சித்தப்படுத்தி வைத்துள்ளான் . அமல்களை நிறுப்பதன் அர்த்தம் யாதெனில் ஒருவன் புரிந்த செயல்கள் அனைத்தையும் ( அல்லாஹ்வுக்கேயுரிய – அவனே அறிந்த முறைப்பிரகாரம் ) அவை கணிப்பிடப்படும் . தராசு கீழே கரிப்பதும் கரிக்காது விடுவதும் அமல்களை மாத்திரம் கவனிப்பதன் மூலமேயன்றி அமல் புரிந்தவனின்

அந்தஸ்த்தையோ அல்லது அவனது செயலேட்டைக் கருத்தில் கொண்டோ அல்ல .

அல்லாஹ் இது பற்றி இவ்வாறு கூறுகின்றான் ......

﴿ وَٱلۡوَزۡنُ يَوۡمَئِذٍ ٱلۡحَقُّۚ فَمَن ثَقُلَتۡ مَوَٰزِينُهُۥ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلۡمُفۡلِحُونَ ۝٨ وَمَنۡ خَفَّتۡ مَوَٰزِينُهُۥ فَأُوْلَٰٓئِكَ ٱلَّذِينَ خَسِرُوٓاْ أَنفُسَهُم بِمَا كَانُواْ بِـَٔايَٰتِنَا يَظۡلِمُونَ ۝٩ ﴾ [سورة الأعراف، الآيتان:٨ ، ٩].

எவர்களின் நல்லமல்களின் எடை அதிகரிக்கின்றதோ அவர்களே நிச்சயமாக வெற்றியாளர்கள் . எவர்களின் நன்மையின் எடை கனமற்றதாக (குறைவாக ) இருக்கின்றதோ அவர்கள் எமது அத்தாட்சிகளைப் பொய்ப்பித்ததுக் கொண்டு இருந்ததன் காரணமாக தங்களுக்குத் தாமே அழிவைத் தேடிக் கொண்டவர்கள் . ( 7 —8,9).

நபி ஸல் ) அவர்கள் கூறினார்கள் ... சுத்தம் ஈமானின் பாதியாகும் அல்ஹம்து லில்லாஹ் (எனும் திக்ர் மறுமையில் ) தராசினை ( அதன் நன்மைத்தட்டினை ) நிரப்பிவிடும் . ( ஆதாரம்முஸ்லிம் )

மேலும் கூறினார்கள் ... மறுமையில் மீஸான் எனும் தராசினைக் கொண்டுவரப்படும் . அதிலே வானம் பூமி ( இரண்டையும் ) வைக்கும் அளவுக்கு அது விசாலமானதாக இருக்கும் . ( நபி மொழி )

## ஒன்பதாவது... ஸிராத் ( பாலம் ).

மறுமையில் ஸிராத் எனும் பாலம் ஒன்று உள்ளதாக நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் .

அது நரகத்தின்மேல் போடப்பட்டுள்ளமிகப்பிரமாண்டமானதொருபாலமாகும்.மனிதர்கள் அனைவருமே அதனைக் கடந்துதான் சுவர்க்கம் செல்ல வேண்டும் . ஒவ்வொருவரும் தத்தமது நல்லமல்களுக்கேற்ப அதனை விரைவாகவோ, தாமதமாகவோ கடந்து செல்வார்கள் .ஒருசிலர் கணப் பொழுதிலும் , வேறுசிலர் மின்னல் வேகத்திலும் , மேலும் சிலர் காற்று வேகத்திலும் , இன்னும் சிலர் பறவை வேகத்திலும் , சிலர் குதிரை வேகத்திலும் , சிலர் கஷ்ட்டப்பட்டு மணலில் நடப்பது போன்றும் ,சிலர் தவழ்ந்த வண்ணமாகவும் அப்பாலத்தைக் கடந்து செல்வார்கள் .தத்தமது நல்லமல்களின் அளவுக்கேற்ப அவர்களுக்கு ஒளியும் வளங்கப்படும் . இவ்வாறு கடந்து கொண்டிருப்பவர்களில் சிலர் ( மலக்குகளால் ) பிடிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவார்கள் .. யார் இப்பாலத்தை முழுமையாகக் கடந்து வீடுகிறாரோ அவர் சுவர்க்கம் பிரவேசித்து. விட்டவராவார் .முதன் முதலாக இப்பாலத்தை எங்கள் நபி முஹம்மது (ஸல் ) அவர்களே கடப்பார்கள் .அவர்களுக்குப் பின் அவர்களின் உம்மத்தினரே முதலில் அதைக்கடப்பதற்கு அருகதை உடையவர்களாவார்கள் . அந்த நாளில் றஸூல்மார்களைத்தவிர (யாரும் யாருக்காகவும்) பரிந்து பேச முடியாது. அனைவரது இறைஞ்சுதலும் யா அல்லாஹ் எங்களைக் காப்பாற்றுவாயாக . என்று ( தமக்காக ) இறைஞ்சும் கோசமாகவே இருக்கும் . அந்த நரகத்தின் இரு மருங்கிலும் பெரிய கொழுக்கிகள் இருக்கின்றன . அவற்றின் எண்ணிக்கையை அல்லாஹ் மாத்திரமே அறிவான் .அவன் விரும்பியவர்களை அது பிடித்துக் கொள்ளும் .

## ஸிராத் எனும் பாலத்தின்இயல்புகள் ..

இப்பாலம் வாளை வீடக்கூரானது .தலைமுடியை வீட மென்மையானது .அல்லாஹ் எவரது பாதத்தை ஸ்திரப்படுத்தி வைக்கின்றானோ அவர்களைத்தவிர வேறு எவரும் அதிலிருந்து தப்பிக்க முடியாது.மேலும் அங்கு அமானிதத்தை பேணியும் , இனபந்துக்களை சேர்ந்தும்

வாழ்ந்தவர்களுக்கு சாதகமாகவும் அவற்றைப் பாழ் படுத்தி வாழ்ந்தோருக்கு எதிராகவும் அப்பாலத்தின் இரு பக்கங்களும் ஆக்கப்படும் .

அல்லாஹ்அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

﴿ وَإِن مِّنكُمْ إِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلَىٰ رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا ﴿٧١﴾ ثُمَّ نُنَجِّي الَّذِينَ اتَّقَوا وَّنَذَرُ الظَّالِمِينَ فِيهَا جِثِيًّا ﴿٧٢﴾ ﴾ [سورة مريم، الآيتان: ٧١، ٧٢].

. உங்களில் எவருமே அப்பாலத்திற்கு வரக்கூடியவர்களாகவேயன்றி இல்லை . இது உமது இரட்சகன் (தன் ) மீது உறுதியாக முடிவு செய்யப்பட்ட விடயமாக ஆகிவிட்டது .( அவ்வாறு கடந்து வந்ததன் பின் ) பயபக்தியுடையோராக இருந்தவர்களை நாம் ஈடேற்றம் அடையச் செய்வோம் . அநியாயக்காரர்களை முழந்தாழிட்டவர்களாக ( கைசேதப்பட்டவர்களாக ) அதிலே விட்டு.விடுவோம் . . (அல்குர்ஆன் )

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ... நரகத்தின் முன்னிலையிலே ஸிராத் எனும் பாலத்தை நிறுத்தப்படும் .நானும் எனது உம்மத்தினரும் அதனை முதலிலே கடப்போம் .

( ஆதாரம் முஸ்லிம் .)

மேலும் கூறினார்கள் ... நரகத்தின் . முதுகின் மேலே பாலத்தை நிறுத்தப்படும் . ஆரம்பமாக அதை நானே கடப்பேன் அந்த நேரத்தில் நபிமார்களுடைய பிரார்த்தனை கூட யா அல்லாஹ் என்னை ஈடேற்றம் அடையச் செய் அல்லாஹ் என்னை ஈடேற்றம் அடையச்செய் என்றே இருக்கும் . .

. ( ஆதாரம் புகாரி – முஸ்லிம் .)

ஆபூ ஸஈதுல் குத்ரி அவர்கள் கூறுகின்றார்கள் ...நிச்சயமாக அப்பாலம் தலைமயிரை விட

மென்மையானது .வாளைவிட கூர்மையானது என எனக்குச் செய்தி கிடைத்தது .

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
… அமானிதத்தைப் பேணிக்காத்தல் , உறவினர்களுடன் சேர்ந்து நடத்தல் போன்றவற்றை அப்பாலத்தின் வலப்பக்கமும் இடப்பக்கமும் நிறுத்தப்படும் .உங்களில் ஒவ்வொருவருமே ஆரம்பமாக அப்பாலத்தை மின்னலைப் போன்றும காற்றைப்போன்றும் பறவையைப்போன்றும் இன்னும் ,பிரயாணியைப்போன்றும் ,அவரவர்களுடைய நல்லமல்களின் அளவுக்கேற்ப விரைவாகவும் தாமதமாகவும் கடப்பார்கள் .நபியவர்கள் அதில் நின்று கொண்டு யாஅல்லாஹ் காப்பாற்று .. காப்பாற்று .. என்று கூறி தவழ்ந்த வண்ணம் அதைக் கடக்கும ஒவ்வொரு் மனிதரும் ( மறு பக்கம் )செல்லும் வரை மக்களுக்காகப் பிரார்த்திப்பார்கள் . மேலும் அப்பாலத்தில் இருக்கும் கொழுக்குகளுக்கு அதன் மேல் செல்லும் சிலரைப் பிடிக்குமாறு கட்டளையிடப்பட்டிருக்கின்றது. அதிலே கொழுவப்படாதவன் வெற்றியடைந்து விடுவான் .அதிலே கொழுவப்பட்டவன்.நரகிலிடப்படுவான் .

. ( ஆதாரம் முஸ்லிம் .)

## பத்தாவது் .. கின்தரா.:. ..( எனும் ஓர் இடம் .)

முஃமின்கள் ஸிராத் எனும் பாலத்தைக்கடந்து பின் கின்தரா.:. எனும் ஓர் இடத்தில் தடுத்து நிறுத்தப் படுவார்கள் என்று நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் . இது நரகத்திறகும் சுவர்க்கத்திற்கும் இடையில்உள்ள ஓர்இடமாகும் . ஸிராத் எனும் பாலத்தைக்கடந்து சுவர்க்கத்தில் நுழைவதற்கு முன்னால் மக்கள்( தமக்கு மத்தியில் புரிந்த அநீதிகளுக்காக ) பழிவாங்கப்படுவதற்காக அவ்விடத்தில் தடுத்து நிறுத்தப்படுவார்கள் . அவற்றிலிருந்து பரிசுத்தமாக்கப்பட்ட பின்னரே சுவர்க்கத்தில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் .

நபி ( ஸல் ) அவர்கள் கூறினார்கள் ….
எனது உயிர் எவன் வசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ் மீது ஆணையாக .. முஃமின்கள்

நரகத்தில் இருந்து வீடுவிக்கப்பட்டு நரகத்திற்கும் சுவர்க்கத்திற்கும் இடையிலுள்ள “ கின்தரா “ எனும் தடுத்து வைக்கப்படுவார்கள் . உலகிலே அவர்களுக்கு மத்தியில் நடந்த அநியாயங்களுக்குப் பழிவாங்கப்பட்டதன் பின் பாவங்களை வீட்டும் பரிசுத்தமாக்கப்பட்டு பின்னர் சுவர்க்கதில் நுழைவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் .

( நபி மொழி )

## பதினொன்றாவது .. சுவர்க்கம் – நரகம் .

சுவர்க்கம் –நரகம் ஆகிய இரண்டும் .அழியாது ஒழியாது இன்றும் அன்றும் என்றும் நிரந்தரமாக இருக்கின்றன என்று நாம் நம்பிக்கை கொள்ளவேண்டும் .அவ்வாறே சுவன வாசிகளின் சுகபோக வாழ்க்கையும் , நிரந்தரநரகவாசிகள் நரகில் படும் வேதனைகளும் நிரந்தரமானவையே என்றும் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும் . அல்லாஹ்வை உன்மையாக நம்பிக்கை கொண்டிருந்த நரகவாசிகளைப் பொறுத்தவரை அவர்களுக்காகச் செய்யப்படும் சிபாரிசினை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அல்லாஹ்வின் அருளின் காரணமாக அவர்கள் நரகத்திலிருந்து வெளியேற்றப்படுவார்கள் .

சுவர்க்கம் என்பது அல்லாஹூத்தஆலா தன்னைப் பயந்துவாழ்ந்த நல்லடியார்களுக்காக தயார் செய்து வைத்திருக்கும் மிகச்சிறந்த இடமாகும் .அதிலே பல நீரூற்றுக்களும் ஆடம்பரமான மனைகளும் அழகிய துணைவியர்களும் இதற்கும் மேலாக எந்தக்கண்ணுமே கண்டிராத எந்தக்காதுமே கேட்டிராத எந்த உள்ளமும் கற்பனை செய்து கூடப்பாத்திராத , மனதுக்கினிய அனைத்து சுகபோகங்களும் இருக்கும் .அவைகள் எதுவுமே என்றுமே அழியாதவை . நிரந்தரமானவை . சுவர்க்கத்திலே ஒரு சாட்டையினை வைக்கக்கூடியவுசிறியதோர் இடம் கூட இவ்வுலகம் அதிலுள்ள அனைத்தையும் விட மேலானதாகும் . அச்சுவர்க்கத்தின் நறுமணம் நாற்பது ஆண்டுகள் தொலை தூரத்திற்கு அப்பால் உள்ள இடங்களிலெல்லாம் வீசும் . முஃமின்கள் ( இறை விசுவாசிகள் ) தமது அல்லாஹ்வை நேரிலே கண்களால் காண்பதே அங்குள்ள அருட்கொடைகள் அனைத்திலும் மிகச்சிறந்ததாகும் .

காபிர்களைப் பொறுத்த வரை அவர்களால் அல்லாஹ்வைக் காண முடியாது .மு.:.மின்கள் அல்லாஹ்வைக்காண்பார்கள் .. இதை யார் மறுக்கின்றாரோ அவர் மு.:.மின்களையும் காபிர்களையும் சமப்படுத்தியவராகக் கருதப்படுவார் .

சுவர்க்கத்தில் நூறு படித்தரங்கள் (அந்தஸ்த்துக்கள் ) இருக்கின்றன . அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலான வேறுபாடு வானம் பூமிக்கு இடையிலுள்ள வேறுபாட்டைப் போன்றதாகும் . சுவர்க்கத்தில் மிக உயர்ந்தது "ஜன்னதுல் பிர்தவ்ஸ் " எனும் சுவர்க்கமாகும் . அல்லாஹ்வின் அர்ஸ் எனும் சிம்மாசனமே இதன் கூரையாகும் . சுவர்க்கத்திற்கு மொத்தம் எட்டுக்கதவுகள் இருக்கின்றன . ஒருவருக்கு சுவர்க்கத்தில் கிடைக்கும் ஆகக் குறைந்த அந்தஸ்த்தின் அளவு இவ்வுலகத்தைப் போன்று பத்து மடங்கு அளவுள்ள இடமாகும் .

அல்லாஹ் சுவர்க்கப் பற்றிக் கூறுகையில் ......

﴿ أُعِدَّتۡ لِلۡمُتَّقِينَ ١٣٣ ﴾ [سورة آل عمران، الآية:١٣٣].

" அது பயபக்தியுடையோருக்காகத் தயார் படுத்தப்பட்டுள்ளது .
( 3 – 133 )

சுவர்க்கத்தின் நிரந்தரத் தன்மையைப் பற்றி அல்லாஹ் கூறுகையில் ......

﴿ جَزَآؤُهُمۡ عِندَ رَبِّهِمۡ جَنَّٰتُ عَدۡنٖ تَجۡرِي مِن تَحۡتِهَا ٱلۡأَنۡهَٰرُ
خَٰلِدِينَ فِيهَآ أَبَدٗاۖ رَّضِيَ ٱللَّهُ عَنۡهُمۡ وَرَضُواْ عَنۡهُۚ ذَٰلِكَ لِمَنۡ
خَشِيَ رَبَّهُۥ ٨ ﴾ [سورة البينة، الآية:٨].

" அவர்களது இரட்சகனிடம் அவர்களுக்கான கூலி " அத்ன் " எனும் சுவர்க்கமாகும். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும் . அவர்கள் அதில் என்றென்றும் தங்கியிருப்பார்கள் .
(ஸூரத்துல் பய்யினா.:. 98 – 8 )

நரகத்தைப் பொறுத்தவரை அது அல்லாஹ் தன்னை நிராகரித்தோருக்காகவும் பாவிகளுக்காகவும் தயார் செய்துள்ள இடமாகும் . அதிலே பலவகையான கடினமான வேதனைகள் இருக்கின்றன . அதற்குப் பொறுப்பாக பயங்கரத் தோற்றமும் கடின சுபாவமும் கொண்ட பலம் பொருந்திய மலக்குகள் இருக்கின்றனர் . அதிலே காபிர்கள் நிரந்தரமாகத் தங்கியிருப்பார்கள் . அவர்களுக்கு உணவாக கள்ளி மரத்தின் முள் வழங்கப்படும் . பருகுவதற்கு வலுவாகக் காய்ச்சப்பட்ட வெந்நீர் வழங்கப்படும் .உலகில் உள்ள நெருப்பானது நரக நெருப்பின் உஷ்னத்தில் எழுபதில் ஒரு பகுதியேயாகும் . அதன் பின்பும் அந்நரக நெருப்பின் வெப்பம் அதே போன்று தொண்ணூற்றொன்பது மடங்கு வரை அதிகரிக்கப்படும் .

இந்த நரகானது அதிலே போடப்படுபவர்களினால் ஒருபோதும் நிறைந்து விடாது மாறாக இன்னும் யாரேனும் உண்டா ? என்றே கேட்டுக் கொண்டிருக்கும் .அதற்கு ஏழு கதவுகள் இருக்கின்றன . ஒவ்வொரு கதவினூடாகவும் நுழைவதற்காக ( குறிப்பிடப்பட்ட நரக வாசிகள் ) இருக்கின்றனர் .

அல்லாஹ் நரத்தைப் பற்றிக் கூறும் போது ...

﴿ أُعِدَّتْ لِلْكَـٰفِرِينَ ﴿١٣١﴾ ﴾ [سورة آل عمران، الآية:١٣١].

" அல்லாஹ்வை நிராகரித்தவர்களுக்காக அது சித்தப்படுத்தப்பட்டுள்ளது ."என்று கூறுகின்றான் .

பார்க்க ( 3 – 131 )

மேலும் கூறுகின்றான் ...

﴿ إِنَّ ٱللَّهَ لَعَنَ ٱلْكَـٰفِرِينَ وَأَعَدَّ لَهُمْ سَعِيرًا ﴿٦٤﴾ خَـٰلِدِينَ فِيهَآ أَبَدًا ... [سورة الأحزاب، الآيتان:٦٤، ٦٥].

நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்போரைச் சபித்து விட்டான் . கொளுந்து விட்டெரியும் ( நரக) நெருப்பை அவர்களுக்காகத் தயார் படுத்தியுள்ளான் .
( 33 – 64 ,65 )

## மறுமை நாளை நம்புவதால் ஏற்படும் பயன்கள்....

1 – அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதற்கு ஆர்வமும் அதன் நன்மையை எதிர் பார்த்திருப்பதில் உட்சாகமும் ஏற்படுகின்றது .

2 – அல்லாஹ்வின் தன்டனைகளுக்கு அஞ்சுவதால் அல்லாஹ்வுக்கு மாறு செய்வதில் பயம் ஏற்படுகின்றது .

3 – மறுமை நாளில் அவனின் அருட்கொடைகளையும் , நற்கூலியையும் ஆதரவு வைத்து எதிர்பார்த்திருப்பதால் அவனுக்கு உலக லாபம் ஏதேனும் தவறிப் போவது பற்றி அவனது மனம் கவலைப்படாது ஆறுதலடைகின்றது .

4 – மறுமையில் ஒவ்வொருவரும் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதை நம்புவதால் சமூகத்தில் குழப்பங்களின்றி அமைதியாக வாழும் நிலை ஏற்படுகின்றது . ஏனைனில் படைப்பினங்கள் அனைத்துமே மறுமையில் மீண்டும் எழுப்பப்பட்டு விசாரிக்கப்பட்டு அவைகளுக்குப் பிரதிபலன் வழங்கப்படும் என்று நம்பும் ஒரு மனிதன் வீணாண குழப்பங்களிலும் பிரச்சினைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் அமைதியாக வாழ முற்படுகின்றான் . இதன்

காரணத்தால் சமூகத்தில் சாந்தி நிலவும் . சமாதானம் வியாபிக்கும் . நிம்மதி சந்தோசமும் சமூக ஒருமைப்பாடும் ஏற்படும் .

## கழா கத்ர் – விதியை நம்புதல் .

ஒரு மு:.மின் நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்களில் ஆறாவதாக இடம் பெறுவது விதியமைப்பைப் பற்றிய நம்பிக்கையாகும் . அதாவது நன்மையான – தீமையான அனைத்து செயல்களுமே அல்லாஹ்வின் முன்னேற்பாட்டின் படியே நடைபெறுகின்றன என்று நம்புவதாகும் . இந்த கழாக்கத்ர் பற்றிய நம்பிக்கையை நாம் பின்வரும் கோணங்களில் வகைப்படுத்தலாம் .

## விதி என்றால் என்ன ? அதனை நம்புவதன் அவசியம் என்ன ?

கழாக்கத்ர் – விதி என்றால் அல்லாஹுத்தஆலா இவ்வுலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் ஏற்படவிருக்கும் அனைத்து நிகழ்வுகளையும் ஏற்கனவே தீர்மானித்துள்ள ஒரு ஏற்பாட்டையே குறிக்கும் .இந்த விடயத்தில் அல்லாஹ்வுடைய தனிப்பட்ட அறிவும் ஞானமும் மாத்திரமே சம்பந்தப்பட்டிருக்கின்றது . ஏனைனில் அல்லாஹ் மாத்திரமே தான் விரும்பிய எந்த விடயத்திலும் தலையீடும் தனிப்பட்ட அதிகாரத்தைக் கொண்டிருக்கிறான் .அவனே அனைத்தின் பாலும் சக்தியுள்ளவனாகவும் இருக்கின்றான் .

விதியமைப்பை நம்பிக்கை கொள்வது அல்லாஹ்வின் றுபூபிய்யத் எனும் தெய்வீகத் தன்மையை நம்புவதில் உள்ளதாகும் . இதை நம்பிக்கை கொள்வது ஈமானுடைய அடிப்படை விடயங்களில் உள்ளதாகும் .இதை நம்புவதாலேயே ஒரு மனிதனின் இறை

நம்பிக்கை முழுமைபெறுகின்றது . இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறும் போது ……

﴿ إِنَّا كُلَّ شَيۡءٍ خَلَقۡنَـٰهُ بِقَدَرٍ ﴿٤٩﴾ ﴾ [سورة القمر، الآية:٤٩].

நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் ( அதனுடைய முன்னேற்பாட்டின் படியே படைத்துள்ளளோம் . ( 54 –49 ) என்று கூறுகின்றான் .

நபி (ஸல்) அவர்கள் விதி பற்றிக் கூறும் போது கூட “ வாலிபம் வயோதிபம் உட்பட அனைத்துமே அல்லாஹ்வின் முன்னேற்பாட்டின் படியே இடம் பெறுகின்றது “ என்று கூறினார்கள் .

## விதியின் படித்தரங்கள்

நான்கு விடயங்களை முழுமையாக நம்புவதன் மூலம் விதியைப்பற்றிய நம்பிக்கை முழுமை பெறுகின்றது .

1 – அல்லாஹ்வின் அறிவு அனைத்து விடயங்களையும் வியாபித்துள்ளது என்பதை நம்புவதாகும் . இது பற்றி அல்லாஹ் கூறும் போது …

﴿ أَلَمۡ تَعۡلَمۡ أَنَّ ٱللَّهَ يَعۡلَمُ مَا فِي ٱلسَّمَآءِ وَٱلۡأَرۡضِۚ إِنَّ ذَٰلِكَ فِي كِتَـٰبٍۚ إِنَّ ذَٰلِكَ عَلَى ٱللَّهِ يَسِيرٞ ﴿٧٠﴾ ﴾ [سورة الحج، الآية:٧٠].

“ நபியே நிச்சயமாக வானத்திலும் பூமியிலும் இருப்பவை அனைத்தையும் அல்லாஹ் அறிவான் என்பதை நீர் அறிய வில்லையா? இவை நிச்சயமாக ( லவ்ஹுல் மஹ்பூழ் ) எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் இருக்கிறன . நிச்சயமாக இவை அல்லாஹ்வுக்கு மிகச் சுலபமானதே .. ( 21 –70 )

2 – அல்லாஹ் படைப்பினங்கள் அனைத்திற்கும் நிர்ணயித்துள்ள விதிகளைப் பாதுகாக்கப்பட்ட ஏட்டிலே எழுதி வைத்துள்ளான் என்பதை நம்புவது . அல்லாஹ் இது பற்றிக் கூறும் போது …

﴿ مَّا فَرَّطۡنَا فِي ٱلۡكِتَـٰبِ مِن شَيۡءٖۚ … ﴾ [سورة الأنعام، الآية:٣٨].

" ( இவைகளில் ) எதனையும் எமது பதிவேட்டில் குறிப்பிடாது விட்டதில்லை . ( 6 – 38 ) என்று கூறுகின்றான் .
மேலும் நபி (ஸல் ) அவர்கள் கூறினார்கள் ...... அல்லாஹ் படைப்பினங்களைப் படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னரே அவற்றின் விதிகளை – ஏற்பாடுகளை எழுதி விட்டான் . . . (ஆதாரம் முஸ்லிம் )

3 – அல்லாஹ்வின் நாட்டத்தின் பிரகாரமே அனைத்தும் நடக்கின்றன என்று நம்பிக்கை கொள்வதாகும் . இது பற்றிக் கூறுகையில் அல்லாஹ் பின் வருமாறு வியாபிக்கின்றான் ...

﴿ ٱللَّهُ خَـٰلِقُ كُلِّ شَىۡءٍۖ وَهُوَ عَلَىٰ كُلِّ شَىۡءٍ وَكِيلٌ ﴾ [سورة الزمر، الآية:٦٢].

" அகிலமனைத்தின் இரட்சகனான அல்லாஹ் நாடுவதையே உங்களால் நாட ( செய்ய) முடியும் . ( 81 – 29 )

நபியவர்கள் ஒரு முறை " அல்லாஹ் நாடியதையே நீங்களும் நாடினீர்கள் " என்று கூறிய ஒரு மனிதரைப் பார்த்து நீர் அல்லாஹ்வுக்கு என்னை சமமாகஆக்கி விட்டீரா ? அல்லாஹ்தான் – தான் நாடியதை தானே செய்யக்கூடியவனாக இருக்கிறான் என்று கூறினார்கள் . ( ஆதாரம் அஹ்மத் )

4 – அல்லாஹ்தான் அனைத்துப் பொருட்களையும் எவ்வித முன்னுதார
– ணமுமின்றிப் படைத்தான் என்று நம்புவது .
அல்லாஹ் கூறுகின்றான் ..

﴿ ٱللَّهُ خَـٰلِقُ كُلِّ شَىۡءٍۖ وَهُوَ عَلَىٰ كُلِّ شَىۡءٍ وَكِيلٌ ﴾ [سورة الزمر، الآية:٦٢].

" அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தான் அவன் அனைத்து பொருட்களின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் வல்லமை உள்ளவனாக இருக்கிறான் . ( 39 – 62 )

மற்றுமோர் இடத்தில் .

﴿ وَٱللَّهُ خَلَقَكُمۡ وَمَا تَعۡمَلُونَ ﴾ [سورة الصافات، الآية: ٩٦].

." அல்லாஹ்தான் உங்களையும் நீங்கள் செய்கின்றவற்றையும் படைத்தான் . என்கிறான் . ( 37 –96 )
மேலும் நபியவர்கள் கூறியுள்ளார்கள் ...

." நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அவை புரிகின்றவற்றையும் படைத்தவனாக இருக்கின்றான் .
( ஆதாரம் புகாரி ) .

## களா கத்ர் – விதியின் வகைகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனால் நிர்ணயிக்கப்படும் விதி –ஏற்பாடு பின் வருமாறு வகைப்படுத்தப்படும் .

1 – அனைத்துப்படைப்பினங்களின் விதியையும் தீர்மானிக்கப்பட்ட ஒரு பொதுவான ஏற்பாடு . இந்த வகை ஏற்பாடு வானம் பூமியைப்படைப்பதற்கு ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன் லவ்ஹுல் மஹ்பூழ் எனும் பலகையில் எழுதப்பட்டு விட்ட விடயமாகும் .

2 – ஒவ்வொரு மனிதனும் இவ்வுலகில் உயிர் வாழும் காலத்தில் சந்திக்கவிருக்கும் விதியேற்பாடு .

3 – ஒவ்வொரு வருடத்திற்குமான ஏற்பாடு . இவ்வேற்பாடு ஒவ்வொரு மனிதரும் ஒரு வருட காலத்தினுள் புரியவிருக்கும் விடங்களைத் தீர்மானிக்கும் ஏற்பாடாகும் . இவ்விதியமைப்பு ஒவ்வொரு வருடமும் லைலத்துல் கத்ர் எனும் இரவில் இடம்பெறுகின்றது . அல்லாஹ் கூறுகின்றான்

﴿ فِيهَا يُفۡرَقُ كُلُّ أَمۡرٍ حَكِيمٍ ﴾ [سورة الدخان، الآية: ٤].

" அந்த இரவில் அனைத்து நுட்பமான விடயங்களும் பிரித்து வேறுபடுத்தப்படுகின்றது .
( ஸூரா 44 வசனம் 4 )

4 – தினந்தோறும் நாளாந்தம் இடம் பெறும் பிறப்பு இறப்பு நன்மை . தீமை சாதக தீர்மானிக்கப்படும் விதியேற்பாடு . .

இது சாதகம் – பாதகம் போன்ற அனைத்து விடயங்களையும் தீர்மானிக்கும் ஒரு முறையைக்குறிக்கும் .
இது பற்றி அல்லாஹ் கூறுகையில்

﴿ يَسْـَٔلُهُۥ مَن فِى ٱلسَّمَـٰوَٰتِ وَٱلْأَرْضِ ۚ كُلَّ يَوْمٍ هُوَ فِى شَأْنٍ ﴿٢٩﴾ ﴾

[سورة الرحمن، الآية: ٢٩].

" வானம் பூமியிலுள்ள ( அனைவரும் தங்கள் தேவைகளை ) அவனிடமே கேட்கின்றனர் . அவன் எந்நேரமும் காரியத்தில் (செயலாற்றுபவனாகவே) இருக்கின்றான் .

## • விதி பற்றியவிடயத்தில் ஸஹாபாக்களின் கொள்கை

கழாக்கத்ர் – விதியேற்பாடு பற்றிய விடயத்தில் ஸஹாபாக்கள் மற்றும் அவர்களுக்குப் பின் வந்த உத்தமர்களின் கொள்கை பின்வருமாறு அமைந்திருந்தது .

நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அவற்றை உரிய முறையில் ஆட்சி செய்பவனாக இருக்கிறான் . அந்தப படைப்பினங்களைப் படைப்பதற்கு முன்னால் அவற்றின் தலைவிதியை ஏற்பாடு செய்து விட்டான் . அவர்கள் இவ்வுலகில் வாழும் கால எல்லை , உண்ணும் உணவுகள் , புரியும் செயற்பாடுகள் ., அவர்கள் மரணிப்பது நல்லவர்களாகவா? அல்லது தீயவர்களாகவா ? ஆகியன போன்ற விடயங்களை அவர்களைப்படைப்பதற்கு முன்னமே எழுதி விட்டான் . அவன் எது நடக்க வேண்டுமென நினைக்கின்றானோ அது நடந்து விடும் . எது நடக்கக்கூடாது என எண்ணுகிறானோ அது ஒருபோதும் நடக்காது . மேலும் அவன் நடந்தவை , நடக்கப்போகின்றவை , இது வரை நடக்காதவை இனிமேல் நடப்பதானால் எப்படி நடக்கும் போன்ற அனைத்து விடயங்களையும் அறிந்தவனாகும் . தான் விரும்பியவர்களுக்கு நேர்வழி காட்டுகின்றான் . தான் விரும்பியவர்களை வழி கெடுக்கின்றான் . அனைத்து விடயங்கள் மீதும் அவன் ஆற்றல் மிக்கவன் . எவராயினும் எவ்வேலையை செய்வதாயினும் அதை அல்லாஹ் முன்னமே நாடியிருந்தாலேயே செய்ய முடியும் .

அல்லாஹ் இது பற்றி பின் வருமாறு பிரஸ்தாபிக்கினறான் . ...

﴿ وَٱلَّذِينَ جَٰهَدُواْ فِينَا لَنَهۡدِيَنَّهُمۡ سُبُلَنَاۚ ...﴾ [سورة العنكبوت، الآية:٦٩].

எவர் எங்களை ( எங்கள் நேர்வழியினை) அடைய முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு எங்கள் ( நேரான ) பாதையைக்
காட்டுவோம் . ( 29 – 69 )

மேலும் அல்லாஹ்வே அடியார்களையும் அவர்கள் புரிகின்ற செயல்களையும் படைத்தவனாக இருக்கிறான் . அவன் நாடிய படியே அவர்கள் செயற்படுகின்றார்கள் .அல்லாஹ்வுக்கு முன்னால் யாரும் நியாயம் கேட்க முடியாது . எனினும் அவனே அடியார்களை விசாரிப்பவனாகும் . தாம் புரிந்த குற்றச் செயல்களை நியாயப்படுத்தும் வகையில் யாரும் அவனிடம் விதியைக் காரணம் காட்ட முடியாது . இதற்குப் பின்வரும் சம்பவமும் சான்றாக இருக்கின்றது

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் "நபி ஆதம் (அலை) அவர்களும் , மூஸா (அலை) அவர்களும் விதி விடயத்தில் ஓருவருக்கொருவர் தர்க்கித்துக் கொண்டனர் .மூஸா (அலை) அவர்கள் ஆதம் (அலை) அவர்களைப்பார்த்து நீங்கள் ( சுவனத்தில் தடுக்கப்பட்ட கனியை உண்டதன் மூலம் ) செய்த தவறின் காரணத்தினாலேயே சுவர்க்கத்தை விட்டு வெளியேற்றப்பட்டீர்கள் .( அதனாலேயே நாமெல்லாம் உலகுக்குவர வேண்டியதாயிற்று ) என்று கூறினார்கள் . ஆதம் (அலை ) அவர்கள் மூஸாவைப்பார்த்து ( அமைதியாக ) உம்மை அல்லாஹ் நபியாகத் தேர்ந்தெடுத்துள்ளான் , உம்மோடு நேரடியாகப் பேசியுள்ளான் . இவ்வாறிருக்க நீர் – அல்லாஹ் என்னைப்படைப்பதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னமே அல்லாஹ் எழுதி வைத்து விட்ட விதி விடயத்தில் என்னை நீர் பரிகசிக்கின்றீரா? என்றுபதிலலித்தார்கள். .

. ( ஆதாரம் ஸஹீஹுல் புகாரி ).

## மனிதர்கள் புரியும் செயல்கள் .

அல்லாஹ்வின் அடியார்கள் புரியும் செயல்களை இரண்டு வகையாகப் பிரிக்க முடியும்.

.

ஒன்று ... அல்லாஹ் ஒவ்வொரு அடியார்களுக்கும் இதையிதைத்தான் செய்ய வேண்டும் என ஏற்கனவே தீர்மானித்து எழுதி வைத்துவிட்ட விதி . இவ்விடயத்தில் தலையிடுவதற்கு எவருக்கும் எவ்வித அதிகாரமும் இல்லை . அவன் இந்த விடயத்தில் யாருக்கு எது நடக்க வேண்டுமென விரும்புகின்றானோ அது கட்டாயம் நடந்தே தீரும் . அதில் அவரின் விருப்பு வெறுப்புக்கு எவ்வித மதிப்பும் அளிக்கப்பட மாட்டாது . ஒருவருடைய பிறப்பு , இறப்பு , நோய் பிடித்தல் ,

குணமடைதல் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம் .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு கூறுகின்றான் ….

“

﴿ وَٱللَّهُ خَلَقَكُمۡ وَمَا تَعۡمَلُونَ ٩٦ ﴾ [سورة الصافات، الآية:٩٦].

அல்லாஹ்தான் உங்களையும் நீங்கள் புரியும் செயல்களையும் படைத்தான் . .
( ஸூரா 37 –96 )

மேலும்

﴿ ٱلَّذِى خَلَقَ ٱلۡمَوۡتَ وَٱلۡحَيَوٰةَ لِيَبۡلُوَكُمۡ أَيُّكُمۡ أَحۡسَنُ عَمَلًاۚ ﴾ [سورة الملك، الآية:٢].

“ அவனே உங்களில் நற்கருமங்கள் புரிவதில் மிகச்சிறந்தவர் யார் என்பதை சோதிப்பதற்காக உங்களுக்கு வாழ்வையும் மரணத்தையும் படைத்தான் .” என்று கூறுகின்றான் .
(ஸூரத்துல் முல்க் 2 ம் வசனம் .)

**இரண்டாவது …** மனிதர்களின் வி ருப்பத்தேர்வுக்கு அமைவாக அல்லாஹ் அமைத்துள்ள விதியமைப்பு . இந்தவகை விதி ஒவ்வொரு மனிதனின் சொந்த விருப்பதின் பிரகாரமே இடம் பெறுகின்றது . ஏனைனில் அல்லாஹ் இவ்வகை விடயத்தை செய்தல் – செய்யாது விடல் இதில் ஒன்றை தீர்மானிக்கும் பொறுப்பை மனிதனின் கையில் ஒப்படைத்து இருக்கிறான் . மனிதன் தனது பகுத்தறிவைப் பயன் படுத்தி தனக்கு நன்மை பயக்கக் கூடியதை தெரிவு செய்து கொள்ள வேண்டியது அவனது உரிமையும் கடமையுமாகும் .

இது பற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு இயம்புன்றான் …

﴿ لِمَن شَآءَ مِنكُمۡ أَن يَسۡتَقِيمَ ٢٨ ﴾ [سورة التكوير، الآية:٢٨].

“ உங்களில் எவர் நேர்வழி பெற விரும்புகிறாரோ அவர் நேர்வழி பெறட்டும்
( ஸூரா அத்தக்வீர் 28 ம் வசனம் .)

﴿ ...فَمَن شَآءَ فَلۡيُؤۡمِن وَمَن شَآءَ فَلۡيَكۡفُرۡۚ... ﴾ [سورة الكهف، الآية:٢٩].

“ விரும்புபவர் விசுவாசம் கொள்ளட்டும் விரும்பியவர் நிராகரிக்கட்டும் .”
( ஸூரத்துல் கஹ்ப் 29 ம் வசனம் )

இவ்விடயத்தில் ( தனது பகுத்தறிவைப்பயன்படுத்தி ) நல்லதைத் தெரிவு செய்து கொள்பவர் பாராட்டப்படுகின்றார் தீமையில் வீழ்ந்து விடுபவர் இகழப்படுகின்றார் . அல்லாஹ் மனிதனின் விருப்பத்தின் பிரகாரம் தெரிவு செய்யும் பொறுப்பை அவனிடம் விட்டு விட்ட விடயங்களில் மாத்திரமே அவன் இழைத்த குற்றங்களுக்கு தண்டனை வழங்குகின்றான் .

அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ ...وَمَآ أَنَا۠ بِظَلَّٰمٖ لِّلۡعَبِيدِ ﴾ [سورة ق، الآية:٢٩].

“ நான் ஒரு போதும் அடியானுக்கு அநீதி இழைப்பவனல்ல . “. ( ஸீரா அல் காப் 29 ம் வசனம்)

எனவே ஒவ்வொரு மனிதனும் தனது சுய விருப்பத்தின் பேரில் புரியும் செயல் – தனது விப்பமின்றி தன்மீது திணிக்கப்படும் செயல் ஆகிய இரண்டுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வது அவசியம் . உதாரணமாக ஒருவன் உயரமான கட்டடத்தில் இருந்து வேண்டுமென்றே விழுந்து தற்கொலை செய்கின்றான் . மற்றொருவனை சிலர் வேண்டுமென்றே உயரத்திலிருந்து பலவந்தமாக கீழே தள்ளி வீடுகின்றனர் .இதிலே முதலாம் வகைசெயல் அவனது சுய விருப்பத்தின் பேரில் இடம் பெற்றதாகும் . இரண்டாவது அவனது விருப்பத்திற்கு அப்பாற் பட்டதாகும் . முதலாம் வகை செயலுக்காக அவனுக்கு தண்டனை வழங்கப்படும் . இரண்டாம் வகை செயலுக்காக அவன் தண்டிக்கப்படுவது கிடையாது . ஏனெனில் அது அவனது சுய விருப்பத்திற்கு அப்பாற்ப் பட்டதாகும் ..

# அல்லாஹ்வின்படைப்புக்கும் மனிதனின் செயலுக்கும் இடையிலான தொடர்பு .

அல்லாஹ்வே மனிதனையும் அவனது செயல்களையும் படைத்தான் என்பதை முன்னர் அறிந்தோம் . அவ்வாறே அல்லாஹ் அவனுக்கு நாட்டத்தையும் சுய விருப்பத்தையும் கொடுத்துள்ளான் . எனவே ஒருவன் சுயமாகச் செய்யும் செயல்களுக்கு அவனே பொறுப்பாளனாகும் . அவன் ஈமான் கொள்வதென்றாலும் நிராகரிப்பதென்றாலும் அவனது சுய விருப்பத்தின் படியே அவற்றைச் செய்கின்றான் . எனவே அல்லாஹ்வே மனிதனது செயல்களைப் படைத்தான் என்பதற்காக தனது செயல்களுக்கு அல்லாஹ்வே பொறுப்பு என மனிதன் வாதிட முடியாது . உதாரணமாக மண்ணிலிருந்து மரமும் மரத்திலிருந்து பழமும் உருவாயின என நாம் கூறுகின்றோம் . உன்மையிலேயே இவ்விரண்டும் உருவாகுவதற்கு மண்ணே அடிப்படை . எனினும் பழம் வருவதற்கு மரமே காரணம் என்றுதான் கூறுகின்றோம் . அவ்வாறுதான் மனிதனையும் அவனது செயல்களையும் அல்லாஹ்வே படைத்திருந்தாலும் மனிதன் புரிந்த செயல்களுக்கு அவன்தான் பொறுப்பாகும் . ஏனெனில் அவனே ஒவ்வொரு செயல்களையும் செய்வதா விடுவதா என்று தீர்மானிப்பவனாக இருக்கின்றான் . எனவே இவ்விரண்டு விடயங்களுக்கு மத்தியில் எவ்வித முறண்பாடும் இல்லை . இது போல்தான் அல்லாஹ்வின் விதியேற்பாடும் அவனது ஸரீஅத் சட்டங்களும் எவ்வித முறண்பாடுகளுமின்றி ஒன்றோடொன்று இணங்கிப் போகின்றன .

அல்லாஹ் கூறுகின்றான் ……

﴿ وَٱللَّهُ خَلَقَكُمۡ وَمَا تَعۡمَلُونَ ﴿٩٦﴾ ﴾ [سورة الصافات، الآية:٩٦].

“அவனே உங்களையும் உங்களது செயல்களையும் படைத்தான் .” ( அல்குர்ஆன் .)

மேலும் கூறுகின்றான் …

﴿ فَأَمَّا مَنۡ أَعۡطَىٰ وَٱتَّقَىٰ ﴿٥﴾ وَصَدَّقَ بِٱلۡحُسۡنَىٰ ﴿٦﴾ فَسَنُيَسِّرُهُۥ لِلۡيُسۡرَىٰ ﴿٧﴾

﴿ وَأَمَّا مَنۢ بَخِلَ وَٱسۡتَغۡنَىٰ ۝٨ وَكَذَّبَ بِٱلۡحُسۡنَىٰ ۝٩ فَسَنُيَسِّرُهُۥ لِلۡعُسۡرَىٰ ﴾

[سورة الليل، الآيات:٨-١٠].

“ஆகவே யார் ( தனது செல்வத்தை பிறருக்கு ) வழங்கி , அல்லாஹ்வைப்பயந்து நல்லமல்கள் மூலம் (இஸ்லாத்தை) உண்மைப்படுத்துகின்றாரோ அவருக்கு ( சுவனம் செல்ல ) இலகுவான வழியை ( கடைப்பிடித்தலை ) இலகுவாக்கிக் கொடுப்போம் . யார்உலோபித்தனம் செய்து அல்லாஹ்வின் அருள் தனக்குத் தேவையில்லையெனக்கருதி நல்லவற்றைப் பொய்யாக்கியும் நடக்கின்றாரோ அவருக்கு கஸ்டமான ( நரக வழியை) இலகுவாக்கி வைப்போம் .

( ஸூரத்துல் லைல் 5 – 10 ம் வசனங்கள் )

## அல்லாஹ்வின் கழா – விதி வீடயத்தில் மனிதன் செய்ய வேண்டியது என்ன ?

அல்லாஹ்வின் விதி வீடயத்தில் மனிதன் இரண்டு வீடயங்களைக் கடைப்பிடித்து நடப்பது கடமையாகும் .

**ஒன்று ...** அல்லாஹ் தனக்குச் செய்யுமாறு கட்டளையிட்ட வீடயங்களை செய்வதற்கும் , தடுத்த வீடயங்களைத் தவிர்ந்து நடப்பதற்கும் தனக்கு உதவி செய்ய வேண்டுமென அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும் . மேலும் நல்லடியார்களின் செயல்களைப் புரிவதை தனக்கு இலகுவானதாகவும் தீயவர்களின் செயல்களில் ஈடுபவதில் தனக்கு வெறுப்பையும் தர வேண்டுமெனவும் அல்லாஹ்விடம் இறைஞ்ச வேண்டும் . ஏனைனில் நன்மையானவற்றைச் செய்வதற்கோ தீயதை விட்டு விலகுவதற்கோ அல்லாஹ்வின் உதவி இல்லாமல் எதுவும் செய்ய முடியாது . பின்னர் அல்லாஹ்

மீது தவக்குல் — நம்பிக்கைவைத்து விட்டு செயலில் இறங்க வேண்டும் . நபி ( ஸல் ) அவர்கள் கூறியுள்ளார்கள் …

“ நீ உனக்கு ( மறுமையில் ) உபயோகப்படுபவற்றைச் செய்வதற்கே ஆசைப்படு . அதற்காக அல்லாஹ்விடம் உதவி செய்யுமாறு இறைஞ்சு . எந்த விடயத்திலும் நம்பிக்கையிழந்து விடாதே . உனக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டு விட்டதன் பின்னால் நான் இவ்வாறு செய்திருப்பின் இது ஏற்பட்டு இருக்காதே என்று வருந்தாதே

அல்லாஹ் இதை எனக்கு நடக்க வேண்டுமென விதியில் எழுதி விட்டதால் இது நடந்து விட்டது என்று கூறி மனதை ஆறதலடையச் செய் . ஏனெனில் “ இதை” அப்படிச் செய்திருந்தால் …, இப்படிச் செய்திருந்தால் … “ என்ற சிந்தனை இறுதியில் ஷைத்தானின் செயல்களைப் புரிவதற்குரிய பாதையைத் திறந்து விடும் . .
( ஆதாரம் முஸ்லிம் )

**இரண்டாவது …** அல்லாஹ் ஒரு மனிதனுக்கு அவனது விதியின் படி ஏதேனும் தீங்கினை விட்டுச் சோதித்தால் அவன் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் . அவசரப்பட்டு பொறுமையிழந்து செயற்பட்டு விடக் கூடாது . இந்தத் துன்பத்தை அல்லாஹ் நமக்கு விட வேண்டுமென்றே தீர்மானித்து விட்டான் . அதுதான் இன்று நடந்து விட்டது என்று கூறி மனதைத் தேற்றிக் கொள்ள வேண்டும் . தன்னைப் பீடித்த துன்பம் ஒரு போதும் தன்னை விட்டு தவறிப்போகாது. தவறிப் போகும் என விதியில் எழுதப்பட்டது ஒருபோதும் தனக்குக் கிடைக்கப் போவதுமில்லை எனும் நம்பிக்கை எம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும் .

நபி (ஸல் ) அவர்கள் கூறினார்கள் ….
“ அறிந்து கொள் உனக்கு தவறிப்போனது உனக்கு கிடைக்கவிருந்ததுதில்லை உன்னைப் பீடித்துக் கொண்டது உன்னை விட்டு தவறிப் போவதுமில்லை .”
. ( நபி மொழி )

# கழா கத்ர் –விதியினைப் பொருந்திக் . கொள்ளல் .

அல்லாஹுத்தஆலா எம் ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்திய முன்னளப்பு –விதியினை நாம் ஏற்று பொருந்திக் கொள்ள வேண்டும் . ஏனைனில் இதனை ஏற்றுக் கொள்வதால்தான் ஒரு மனிதனின் இறைநம்பிக்கை முழுமை பெறுகின்றது . ஏனைனில் அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் தீர்மானித்த விதி அவனுக்கு நன்மையாகவே அமையும் . அவ்விதி நீதி – நியாயத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டதே . யாரொருவர் தனக்குக் கிடைக்கக் கூடாது என்று எழுதப்பட்டது கிடைக்கப் போவதுமில்லை . கிடைக்க வேண்டுமென எழுதப்பட்டது கிடைக்காமல் தவறப் போவதுமில்லை' என்ற நம்பிக்கையில் செயற்படுகின்றாரோ அவரது மனம் தடுக்கம் – மனக்குழப்பம் போன்றவற்றை விட்டும் நீங்கி நிம்மதி அடைகின்றது . வீணான பதற்றம் கவலை போன்றவை அவரை விட்டு விடைபெறுகின்றன . எனவே அவர் தனக்கு தவறிப் போனவை பற்றி கவலைப்படாமலும் , எதிர்காலத்தைப் பற்றிய கலக்கமற்றும் வாழ முடிகின்றது .எனவே யார் தனது வாழ் நாள், உணவு இதர தனது தேவைகள் அனைத்துமே அல்லாஹ்வினால் அன்றே தீர்மானிக்கப்பட்டு விட்டன என்றும் அவற்றில் எதுவுமே அணுவளவு கூட கூடவோ குறையவோ மாட்டாது என்றும் அடிமனதில் இருத்திக் கொள்கின்றானோ அவன் தனது வாழ்வில் ஏற்பட்ட இன்னல் துன்பக்களுக்காக நிராசையாகி வீடாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பான் . தான் செய்த தவறுகளுகாக உடனுக்குடன் பாவ மன்னிப்புக் கோருவான் .அல்லாஹ் தனக்கு

வீதித்ததை திருப்பதியுடன் ஏற்றுக் கொண்டு , துன்பத்தில் பொறுமையைக் கடைப்பிடித்து அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வாழ்வான் .

அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

﴿ مَآ أَصَابَ مِن مُّصِيبَةٍ إِلَّا بِإِذۡنِ ٱللَّهِۗ وَمَن يُؤۡمِنۢ بِٱللَّهِ يَهۡدِ قَلۡبَهُۥۚ وَٱللَّهُ بِكُلِّ شَيۡءٍ عَلِيمٞ ١١ ﴾ [سورة التغابن، الآية: 11].

" எந்தத் துன்பமும் அல்லாஹ்வின் அனுமதியன்றியேயன்றி ( யாரையும்) பீடிப்பதில்லை . எனவே யார் அல்லாஹ்வை நம்புகின்றாரோ அவரது இதயத்திற்கு அல்லாஹ் (பொறுமையுடனிருக்க) வழிகாட்டுகின்றான்.
( ஸூரா அத்தகாபுன் வசனம் 11 )

மேலும் அல்லாஹ் கூறுகின்றான் ...

﴿ فَٱصۡبِرۡ إِنَّ وَعۡدَ ٱللَّهِ حَقّٞ وَٱسۡتَغۡفِرۡ لِذَنۢبِكَ ﴾ [سورة غافر، الآية: 55].

" ( துன்பத்தில் ) பொறுமையாயிரு .. நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உன்மையானது . ( நீ புரிந்த பாவங்களுக்கு ) தவ்பா செய்து கொள் . ( அல்குர்ஆன் )

## ஹிதாயத் – நேர்வழியின் வகைகள் .

ஹிதாயத் எனும் நேர்வழி இருவகைப்படும் .

முதலாவது ... உன்மையையும் யதார்த்ததத்தையும் இனம் காட்டி சரியானதை சரியென சொல்லிக் கொடுக்கும் நேர்வழி . இந்த வகை நேர்வழியைத்தான் இறைதூதர்களாலும் ஏனைய இஸ்லாமிய அழைப்பாளர்களாலும் சாதித்துக் காட்ட முடியும் .இதற்கு ஹிதாயா அத்தலாலா: எனப்படும் .

அல்லாஹ் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றான் .

﴿ وَإِنَّكَ لَتَهْدِيٓ إِلَىٰ صِرَٰطٖ مُّسْتَقِيمٖ ﴾ [سورة الشورى، الآية:٥٢].

“ நிச்சயமாக நீங்கள் ( மக்களை ) நேர்வழியின் பால் அழைக்கின்றீர்கள் .”
( ஸூரத்துத் ஸூரா: 52 ம் வசனம் .)

இரண்டாவது ... ஹிதாயத் அத் தவ்பீக் . இது அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு சத்தியத்தை ஏற்று நடப்பதற்கு அவரது இதயத்தை சாதகமானதாக்கி அதனால் மறுமையில் வெற்றிபெறுவதற்காக அல்லாஹ் அவருக்குக் காட்டும் நேர்வழியைக் குறிக்கும் . இது அல்லாஹ் விரும்பியவர்களுக்கு மாத்திரம் வழங்கும் ஓர் அருட்கொடையாகும் . இந்த வகை நேர்வழியை கொடுப்பதற்கு அல்லாஹ்வைத்தவிர எவருமே சக்தி பெற மாட்டார்கள் .

இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் .

﴿ إِنَّكَ لَا تَهْدِي مَنْ أَحْبَبْتَ وَلَٰكِنَّ ٱللَّهَ يَهْدِي مَن يَشَآءُ ﴾ [سورة القصص، الآية:٥٦].

“ ( நபியே ) நிச்சயமாக நீங்கள் விரும்பியவர்களுக்கெல்லாம் உங்களால் நேர்வழி கொடுக்க முடியாது . எனினும் அல்லாஹ்வே தான் விரும்பியோருக்கு நேர்வழி காட்டுக்கின்றான்

( ஸூரத்துல் அன்கபூத் 57 ம் வசனம் .)

♦

## இராதத் – அல்லாஹ்வின் நாட்டம் .

அல்குர்ஆனை ஆராய்ந்து பார்க்கும் போது இராதத் – இறைநாட்டம் என்பது இரண்டு அர்த்தங்களில் உபயோகப்படுத்தப் பட்டுள்ளதை அறிய முடிகிறது .

ஒன்று –. இராதா.: அல் கதரிய்யா.: – ( விதியிலே தீர்மானிக்கப்பட்ட நாட்டம் ) . அதாவது அல்லாஹுத்தஆலா ஒவ்வொருவருக்கும் எதை நாடுவதாக விதியிலே தீர்மானித்துள்ளானோ அதை நடத்திக் காட்டுவதே இந்த வகை நாட்டமாகும் .

இரண்டாவது – இராதா.: அஸ்ஸரஇய்யா ( அல்லாஹ் பொதுவாக அனைவரிடமும் இருக்க வேண்டுமென விரும்பும் விருப்பம் .) அதாவது அல்லாஹுத்தஆலா அனைவரும் நல்லவற்றைப் புரிந்து சுவர்க்கம் செல்ல வேண்டுமென்பதையே விரும்புகின்றான் . எனினும் அல்லாஹ் இவ்வாறு விரும்பினாலும் அம்மனிதனின் தலைவிதி எவ்வாறு அமைய வேண்டுமென ஏற்கனவே நிர்ணயித்துள்ளானோ அவ்வாறே நடத்திக் காட்டுவான் .இதனை ஒரு
சிறிய உதாரணம் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும் ( ஒரு பாடசாலையின் வகுப்பாசிரியர் தனது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுமே சித்தியடைய வேண்டுமென்றே விரும்புவார் . எனினும் யார் யார் சித்தியடைய மாட்டார்கள் என்பதையும் அவரது முன் அனுபவத்தின் மூலம் அறிந்து வைத்திருப்பார் . அவ்வாறே அந்த மாணவர்களுடைய நிலையும் பரீட்சை முடிவில் தெரிந்து விடுகின்றது .)

அல்லாஹ் அல்குர்ஆனிலே கூறுகின்றான் ……

﴿ ...يُرِيدُ ٱللَّهُ بِكُمُ ٱلۡيُسۡرَ وَلَا يُرِيدُ بِكُمُ ٱلۡعُسۡرَ... ﴾ [سورة البقرة، الآية:١٨٥].

அல்லாஹுத்தஆலா உங்களுக்கு இலகுவையே நாடுகின்றான் . உங்களைச் சிரமப்படுத்த விரும்ப வில்லை .

( ஸூரத்துல் பகரா 185 ம் வசனம் )

**இராதா.:. அல்கவ்னிய்யா.:.** என்பது இறைவனின் பொதுவானதொரு விருப்பமாகும் . ஏனெனில் இராதா.:. அஸ்ஸரஇய்யா.:.விலுள்ள அனைத்துமே இராதா.:.அல் கவ்னிய்யா.:.வுக்குள் அடங்கும் . ஒவ்வொரு மனிதனுக்கும் அல்லாஹ் தீர்மானித்த தலைவிதி அவன் மனமுவந்து அவனுக்குத் தீர்மானித்ததாக கருத முடியாது . உதாரணமாக அபூபக்ர் (றழி) அவர்களுக்கு அல்லாஹ் ஈமானை நஸீபாக்கியது அவனது இரண்டு வகை விருப்பத்தின் பேரில் அமைந்ததாகும் . அபூ ஜஹ்ல் காபிராக மரணிக்க வேண்டுமென்பது அல்லாஹுவின் இராதா.:. அல் கவ்னிய்யா.:.வின் படி அமைந்ததாகும் . ஏனெனில் எவருமே காபிராக மரணிப்பதை அல்லாஹ் விரும்புவதில்லை . ஆனால் அபூ ஜஹ்ல் காபிராக மரணிக்க வேண்டுமென்பது அல்லாஹ் ஏற்கனவே அவனுக்குவிதித்த தலைவிதியாகும் . ஏனெனில் அல்லாஹ் ஒருவனை அவனுக்கு விதித்த தலைவிதியின் படி பாவியென தீர்மானித்தாலும் அவன் பாவியாக இருப்பதை அல்லாஹ் விரும்புவதில்லை . பாவம் புரிவதை அவன் வெறுக்கிறான் . பாவிகள் மீது கோபப்படுகிறான் .பாவங்கள் புரிவதை விட்டும் மனிதனை தடுத்து பாவிகளுக்குதண்டனை வழங்குவதாக எச்சரிக்கின்றான் . எனினும் அனைத்துமே அவன்விதித்த விதியின் படியே நடைபெறுகின்றன .

அல்லாஹ் ஒவ்வொரு மனிதனும் நன்மை புரிந்து அவனுக்கு வழிப்பட்டு நடப்பதையே விரும்புகின்றான் . நன்மை புரிவோருக்கு சிறந்த வெகுமதி தருவதாக வாக்களிக்கின்றான் . எனினும் நன்மையோ தீமையோ அவன் விரும்பினாலேயே அன்றி எதுவும் நடைபெற மாட்டாது .

அல்லாஹ் கூறுகின்றான் …

﴿ وَلَا يَرۡضَىٰ لِعِبَادِهِ ٱلۡكُفۡرَ... ﴾ [سورة الزمر، الآية:٧].

அவனது அடியார்கள் காபிர்களாவதை அவன் விரும்புவதில்லை . ( ஸூரத்துஸ்ஸூமர் வசனம் 8 )

﴿ وَٱللَّهُ لَا يُحِبُّ ٱلۡفَسَادَ ۝٢٠٥ ﴾ [سورة البقرة، الآية:٢٠٥].

அல்லாஹ் ( தீமையை ) குழப்பத்தை விரும்புவதில்லை . . (ஸூரத்துல் பகரா வசனம் 205 )

அல்லாஹுத்தஆலா விதித்த ஒவ்வோரு தலைவிதிக்கும் அவற்றைத்தடுக்கக் கூடிய சில விடயங்களைச் சொல்லித் தந்துள்ளான் . அவற்றைச் செய்வதன் மூலம் மாற்ற முடியும் எனத்தீர்மானித்த தலைவிதியை மாற்றியமைக்க முடியும் . துஆப்பிரார்த்தனை , ஸதகா:. , சிகிச்சை செய்தல் , முன்னைச்சரிக்கையாக இருத்தல் , மன வலிமையுடன் செயற்படல் போன்றன அவற்றில் சிலவாகும் . ஏனைனில் இயலாமை , புத்திக்கூர்மை உட்பட அனைத்துமே அல்லாஹ்வின் விதிப்படி இடம் பெறுபவையேயாகும் .

## படைப்பினங்களின் விதி ஏற்பாடு அல்லாஹ்விடமுள்ள இரகசியமாகும் .

படைப்பினங்களின் விதியேற்பாடு என்பது அல்லாஹ் மாத்திரமே அறிந்து வைத்துள்ள இரகசியமாகும் . அவற்றின் யதார்த்த நிலையை அல்லாஹ்வைத்தவிர வேறு எவரும் அறிய மாட்டார்கள் . மனிதனின் குறுகிய அறிவினால் அவற்றை அறிந்து கொள்ள முடியாது . உதாரணமாக அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டுவான் யாரை வழிகெடுப்பான் , யாருக்கு உயிர் கொடுப்பான் , யாரை மரணிக்கச் செய்வான் , யாருக்கு பொருளைக் கொடுப்பான் ,

யாருக்குக் கொடுக்க மாட்டான் என்பதெல்லாம் அல்லாஹ் மாத்திரமே அறிந்த இரகசியங்களாகும் .

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் ... விதி பற்றிப் பேசப்பட்டால் ( குறுக்கீடு செய்யாமல் ) நீங்கள் மௌனமாக இருங்கள் .

( ஆதாரம் முஸ்லிம் )

எனினும் கழாக்கதர் பற்றி கற்பித்தல் , அதன் பிரயோசனங்கள் படித்தரங்கள் , அதனை ஏற்பதால் ஏற்படும் ஆக்க பூர்வ விளைவுகள் பற்றி மக்களுக்குப் புரிய வைப்பது ஆகுமாக்கப்பட்டதாகும் ஏனெனில் கழாக்கதர் பற்றி நம்பிக்கை கொள்வது ஈமானின் கடமைகளில் ஒன்றாகும் . அவற்றைப்படிப்பது தீனைப்படிப்பதில் உள்ளதாகும் .. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் ஜிப்ரீல் (அலை ) அவர்களுக்கு ஈமானின் கடமைகளைக் கூறிக்காட்டிய போது " இவர்தான் ஜிப்ரீல் . உங்களுக்கு உங்களது மார்க்கத்தைப் படித்துத் தருவதற்காக இவர் வந்தார் " என்று கூறினார்கள் .
( ஆதாரம் முஸ்லிம் .)

அல்லாஹுத்தஆலா இவ்வுலகத்தில் நடபெறவிருக்கும் அனைத்து விடயங்களையும் அறிந்து வைத்துள்ளான் . அந்த அறிவு அவனுக்கு மாத்திரமே உரிய மறைவான விடயமாகும் . மனிதர்கள் எவருக்குமே இது பற்றிய அறிவு கிடையாது . அதே போல் மனிதன் தான் செய்யும் பாவங்களுக்கு விதியைக்காரணம் காட்டி நியாயப்படுத்த முடியாது . எனவே விதியின் மேல் பாரத்தைப் போட்டு நல்லமல்கள் எதுவும் செய்யாமல் இருந்து விட முடியாது . அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு அல்லாஹ்வுக்கோ மனிதர்களுக்கோ எதிரான செயலில் இறங்கி விடவும் முடியாது . ஏனெனில் ஒவ்வொருவரும் தாம் புரிந்த செயல்களுக்கு விதியைக் காரணம் காட்டி அதன் மேலே பழியைப் போட்டால் குற்றச் செயல்களுக்காக எவரையும் தண்டிக்க முடியாது . காபிர்களைக் கொலை செய்யவும் முடியாது . அல்லாஹ் விதித்த

ஹத்து – தன்டனைகளை நிறைவேற்றவும் முடியாது . எவரையும் பிறருக்கு அநியாயம் புரிவதை விட்டும் தடுக்கவும் முடியாது . எனவே இத்தகைய கண்ணோட்டம் மக்கள் மத்தியில் பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படக் காரணமாக அமைந்து விடும் .

விதியைக் காரணம் காட்டி தனது குற்றச் செயல்களை நியாயப்படுத்துபவனிடம் “ நீ சொர்க்க வாதியா நரக வாதியா ? என உனக்கு நிச்சயமாகத் தெரியுமா ? “ என நாம் கேட்க வேண்டும் . அவன் நிச்சயம் தெரியாது என்றே கூறுவான் . அப்படியாயின் நீ தீமை புரிவதை விட்டுவிட்டு நன்மையையே செய்து வா ( நீ சுவர்க்க வாதியாகக் கூட இருக்கலாம் தானே ) அல்லாஹ் தன் அருளினால் நீ சுவர்க்க வாதியாக ஆகுவதற்கு உதவி புரிவான் என்று நாம் கூற வேண்டும் .

நபித் தோழர்கள் எவரிடமாவது விதி பற்றிய நபிமொழிகளைக் கூறப்பட்டால் “ நான் இப்போதைய நிலையை விட அமல்களின் பால் அதிக முயற்சி செய்ய வேண்டியிருக்கின்றது “ என்றே கூறுவார்கள் .

நபி ஸல்) அவர்களிடம் விதியைப்பற்றிக் கேட்கப்பட்ட போது “ நீங்கள் நல்லமல்களையே செய்து கொண்டிருங்கள் . ஒவ்வொருவரும் ( சுவர்க்கம் நரகம் இரண்டில் ) எதற்காகப் படைக்கபட்டுள்ளாரோ அதற்குரிய செயல்களில் ஈடுபடவது அவருக்கு இலகுவாக்கிக் கொடுக்கப்படும் . யார் ஈடேற்றம் அடைவோரின் பட்டியலில் பதியப்பட்டிருக்கின்றாரோ அதற்குரிய காரியங்களில் ஈடுபடுவது அவருக்கு இலகுவாக்கிக் கொடுக்கப்படும் . யார் கெட்டவர்களின் பட்டியலில் பதியப்பட்டிருக்கிறாரோ அதற்குரிய செயல்களில் ஈடுபடுவது அவருக்கு இலகுவாக ஆக்கிக் கொடுக்கப்படும் என்று கூறிவிட்டு பின் வரும் வசனத்தை ஓதிக்காட்டினார்கள் .

﴿ فَأَمَّا مَنْ أَعْطَىٰ وَاتَّقَىٰ ۝٥ وَصَدَّقَ بِالْحُسْنَىٰ ۝٦ فَسَنُيَسِّرُهُ لِلْيُسْرَىٰ ۝٧
وَأَمَّا مَنْ بَخِلَ وَاسْتَغْنَىٰ ۝٨ وَكَذَّبَ بِالْحُسْنَىٰ ۝٩ فَسَنُيَسِّرُهُ لِلْعُسْرَىٰ ۝١٠

[سورة الليل، الآيات:٥–١٠].

" யார் பிறருக்கு தானதர்மம் செய்து அல்லாஹ்வைப்பயந்து இறுதி நாளை உன்மைப்படுத்துகின்றாரோ அவருக்கு ( சுவர்க்கத்தின் ) வழியை நாம் இலகுவாக்கி வைப்போம் . மேலும் யார் உலோபித்தனம் செய்து அல்லாஹ்வின் அருளைவீட்டும் தான் தேவையற்றவன் எனக் கருதி ( மார்க்கத்தை ) பொய்ப்பித்தும் வைத்தாரோ அவருக்கு கஷ்டத்திற்குரிய ( நரக) வழியை நாம் இலகுவாக்கி வைப்போம் . "

. ( ஸூரத்துல் லைல் 5 –10ம் வசனங்கள்)

மனிதனுக்கு ஏற்படும் முஸீபத்துக்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் .

ஒன்று ... மனிதன் தனது புத்தியினாலும் உபாயத்தாலும் தப்பித்து விடுபடக் கூடிய முஸீபத்துக்கள் .

இரண்டாவது ... புத்தி சாதுரியத்திற்கும் உபாயத்திற்கும் எவ்வித பங்களிப்புமற்ற – நிச்சயம் இடம் பெற்றே ஆகக் கூடிய எவராலும் தடுத்து நிறுத்த முடியாத முஸீபத்துக்கள் .

அல்லாஹுதஆலா எந்தவித முஸூபத்தும் இடம் பெற முன்னரே அது யாருக்கு எப்படி இடம் பெறும் என்பதை அறிந்தவனாக இருக்கின்றான் . அவ்வாறு அறிந்திருப்பதன் காரணமாக அவனே வேண்டுமென்று அந்த முஸீபத்தை ஒரு மனிதனுக்கு விட்டதாகக் கூற முடியாது . அது இடம்பெறுவதற்கான காரணிகளை அம்மனிதன் புரிந்ததனாலேயே இந்நிலை அவனுக்கு ஏற்பட்டது .

உதாரணமாக ஒருவனுக்கு நோய் ஏற்பட்டு விட்டதென்றால் அவன் நோயை வருவிக்கும் காரியங்களில் ஈடுபட்டதால் அல்லது அந்நோயிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமல் விட்டதனாலேயே அந்நோய் அவனுக்கு ஏற்பட்டது . இந்நிலையில் தனக்கு ஏற்பட்ட அந்த நிலைக்கு அவனே காரணமாகின்றான் . தனக்கு ஏற்பட்ட முஸீபத்திற்கு தான் எவ்வகையிலும் காரணம் இல்லை என்ற கட்டத்தில் அவன்மீது எவ்விதக் குற்றமும் சாட்டப்படுவதில்லை .

எனவே காரண காரியங்களை எடுத்து நடப்பது தவக்குல் எனும் இறை நம்பிக்கைக்கு எவ்விதத்திலும் முறன்பட்டதாகக் கருதப்பட மாட்டாது . மாறாக அது உன்மையான தவக்குலின் ஒரு பகுதியாகும் . எனவே ஒருவருக்கு விதியின் படி ஒரு தீய நிகழ்வு இடம்பெற்று விட்டால் அவர் கழாக்கத்ரை பொருந்திக் கொண்டு அல்லாஹ் இது தனக்கு நடக்க வேண்டுமெனத் தீர்மானித்திருந்தமையினாலேயே இடம் பெற்றது என்று கூறிப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் . ஆனால் அவருக்கு அத்துன்பம் நிகழ்வதற்கு முன்னால் முடிந்தளவு அதிலிருந்து விடுபடுவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடு பட வேண்டும் . ஏனைனில் நபிமார்கள் கூட அவர்களுக்கு அல்லாஹ்வின் நேரடிப் பாதுகாப்பு இருந்தும் கூட காரண காரியங்களை எடுத்தே நடந்துள்ளனர் . நபி (ஸல்) அவர்கள் முழுமையான தவக்குல் உடையவர்கள் . இருந்தும் அவர்கள் கூட காரணங்களை எடுத்தே நடந்துள்ளனர் .
அல்லாஹுத்தஆலா அல்குர்ஆனிலே கூறுகின்றான் ...

﴿ وَأَعِدُّواْ لَهُم مَّا ٱسْتَطَعْتُم مِّن قُوَّةٍ وَمِن رِّبَاطِ ٱلْخَيْلِ تُرْهِبُونَ بِهِۦ عَدُوَّ ٱللَّهِ وَعَدُوَّكُمْ ﴾ [سورة الأنفال، الآية:٦٠].

மேலும் அவர்களுடன் போரிடுவதற்காக உங்களால் முடிந்தளவு ஆயுதங்களையும் போர்க்குதிரைகளை(க்கட்டி வைப்பதை) யும் நீங்கள் தயார் செய்து வைத்திருங்கள் . இதன் மூலம் அல்லாஹ்வுடைய எதிரியையும் உங்களுடைய எதிரியையும் ஏனையோரையும் அச்சமடையச்செய்ய முடியும் .

( ஸூரத்துல் அன்பால் 60ம் வசனம் )

﴿ هُوَ ٱلَّذِى جَعَلَ لَكُمُ ٱلْأَرْضَ ذَلُولًا فَٱمْشُوا۟ فِى مَنَاكِبِهَا وَكُلُوا۟ مِن رِّزْقِهِۦ ۖ وَإِلَيْهِ ٱلنُّشُورُ ﴾ [سورة الملك، الآية: ١٥].

அவனே பூமியை (வாழ்வதற்கு ) எளிதானதாக உங்களுக்கு ஆக்கி வைத்தான் . ஆகவே அதன் பல பாகங்களுக்கும் சென்று அவன் அளித்திருக்கும் உணவுகளிலிருந்து உண்ணுங்கள் . மேலும் அவன் பாலே ( மரணத்தின் பின் ) நீங்கள் எழுப்பப்படுவீர்கள் . . ( ஸூரத்துல் முலக் , 15 ம்வசனம் .)

நபி (ஸல்) அவர்களின் பொன் மொழியொன்றும் இதற்கு சான்றாக அமைகின்றது ….

புத்திசாலியான இறை விசுவாசி பலவீனமானவரை விட சிறந்தவரும் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவரும் ஆவார் . எனினும் அனைவரிலும் ( ஏதோ ஒரு ) சிறப்பு இருக்கின்றது . நீ உனக்குப் பயனளிக்கும் விடயங்களைப் புரிவதிலேயே ஈடுபடு . ( அதைச் செய்யும் முன் ) அல்லாஹ்விடம் உதவி தேடு . ( எந்த விடயத்திலும் ) நம்பிக்கையிழந்து பலவீனமுற்று விடாதே . உனக்கு ஒரு துன்பம் ஏற்பட்டதன் பின் நான் இதை இவ்வாறு செய்திருப்பின் இப்படி ஏற்பட்டிருக்காதே .. என சஞ்சலப்படாதே . எனினும் அல்லாஹ் நாடியதை செய்து விட்டான் என்றே சொல் . ஏனைனில் அவ்வாறு செய்திருப்பின் .. இவ்வாறு செய்திருப்பின் .. என்று நடந்து முடிந்த விடயத்திற்காக கவலைப்படுவது ஷைத்தானின் செயல்களைச்செய்யத் தூண்டி விடும் . . ( ஆதாரம் முஸ்லிம் )

_ விதி என்று எதுவும் இல்லை என்று கூறி அல்லாஹ்வின் கழா – கத்ரை மறுப்பவன் . இஸ்லாத்தின் அடிப்படை விடயங்களில் ஒன்றை மறுத்தவனாவான் . எனவே அவன் காபிராக – இறை நிராகரிப்பாளனாகக் கருதப்படுவான் .

முன்னைய மார்க்க அறிஞர் ஒருவர் கூறுகின்றார்கள் ...

" விதியை மறுக்கும் கூட்டத்தினருடன் நீங்கள் மார்க்க அறிவைக் கொண்டு விவாதம் புரியுங்கள் . முடிவில் அவற்றை அவர்கள் மறுத்தால் காபிர்களாகி விடுவார்கள் . அந்த மார்க்க ஆதாரங்களை ஏற்றுக் கொண்டார்களாயின் அவர்கள் வீண் விதண்டாவாதம் புரிகின்றனர் .( எனவே அவர்களை அவர்கள் வழிக்கு விட்டு விடுங்கள் .

## இறை விதியை நம்புவதால் ஏற்படும் . . நன்மைகள்.

கழாக்கத்ரை நம்பிக்கை கொண்டு வாழ்வதிலே தனி மனித , சமூக ரீதியில் பல் வேறு பிரயோசனங்களும் , ஆக்க பூர்வமான பின் விளைவுகளும் இருக்கின்றன . அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம் .

1 – கழாக்கத்ரை நம்பிக்கை கொள்வதால் அதிகளவு இபாதத்களில் ஈடுபடவும் , இக்லாஸ் , தவக்குல் , இறையச்சம் , நல்லாதரவு , அல்லாஹ் விடயத்தில் நல்லெண்ணம் , பொறுமை , சகிப்புத் தன்மை , ஆர்வம் , அல்லாஹ்வின் திருப் பொருத்தம் , அவனுக்கு நன்றி செலுத்தி அவன் அருளிய அருட் கொடைகளை எண்ணி மகிழ்தல் , அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடத்தல் , பெருமை, கர்வம் போன்ற துர்க்குணங்களைக் களைதல் , அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்தல் , ஆகிய அதிக பல பிரயோசனங்களும் உண்டாகின்றன . அத்துடன் வீரம் , தைரியம் , சுயமரியாதை , கௌரவம் , மனஉறுதி , திடநம்பிக்கை , அதிக முயற்சி , இன்ப துன்பங்களில் நடுநிலை வகித்தல் , பிறர் மீது பொறாமை முறண்பாடு போன்றவற்றைத் தவிர்த்தல் , சுதந்திரமான பகுத்தறிவைப் பெறல் , மூட நம்பிக்கைகள் மௌட்டீக சித்தார்த்தங்கள் போன்றவற்றிலிருந்து விடு படல் , மன நிம்மதி இதய அமைதி போன்றன ஏற்படுகின்றன .'

௨ – இறை விதியை ஏற்று நடக்கும் ஒரு விசுவாசி தனது வாழ்க்கையை ஒரு சீரான வழியிலே நடத்திச் செல்கின்றான் .

தனக்கு ஏற்பட்ட முஸீபத்துக்களை எண்ணி அவன் கதிகலங்கி விடுவதுமில்லை . தனக்கு ஏற்பட்ட இன்பத்தினால் எல்லை மீறிச் செயற்படுவதுமில்லை . தனக்கு ஏற்பட்ட நன்மையோ தீமையோ எதுவாகினும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடந்தது என எண்ணி பொறுமையைக் கடைப்பிடித்து வாழ முற்படுகின்றான் .

3 – இறைவிதியை நம்பிக்கை கொள்வது ஒரு மனிதன் தீய வழிகளிலும் மோசமான பாதைகளிலும் சென்று விடாமல் அவனைப் பாதுகாத்து இபாதத்கள் புரிவதற்கும் நல்லறங்களில் ஈடுபடுவதற்கும் அவனை ஊக்கப்படுத்துகின்றது .

4 – கழாக்கத்ரை நம்புவதால் ஒரு மனிதனுக்கு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் மனோ வலிமையையும் தனக்கேட்பட்ட முஸீபத்துகளை பொறுமையுடன் எதிர் கொள்ளும் திட நம்பிக்கை ஏற்படுகின்றது .

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் …

“ நான் ஒரு மு:மினுடைய விடயத்தில் ஆச்சரியப்படுகின்றேன் . அவனுக்கு ஏதேனும் மகிழ்ச்சியான விடயம் ஏற்பட்டால் அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றான் . துக்ககரமான விடயம் ஏற்பட்டால் பொறுமையைக் கடைப்பிடிக்கின்றான் . முடிவிலே இன்பம் துன்பம் அனைத்துமே அவனுக்கு நன்மையாகவே அமைந்துவிடுகின்றன .

. ( ஆதாரம் முஸ்லிம் .)

ஸல்லல்லாஹு வ ஸல்லம அலா நபிய்யினா முஹம்மதின்
வஅலா ஆலிஹீ வஸஹ்பிஹீ அஜ்மயீன் .

வல் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்

. வஸ்ஸலாம் .

குறிப்பு .. இந்த மொழிபெயர்ப்பில் ஏற்பட்டுள்ள தவறுகளை பெருமனது கொண்டு மன்னிப்பதுடன் அவற்றைத் தயவு செய்து சுட்டிக் காட்டுமாறும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன் .

-

. – அப்துல் கபூர் முஹம்மது ஜலீல்.

# பொருளடக்கம்

1 – ஈமானின் கடமைகள் ......................................
2 – ஈமானின் முதலாவது கடமை ..................................
3 – தவ்ஹீத் கொள்கையின் அவசியம் ..........................
4 – இபாதத் என்றால் என்ன ?......................
5 – அல்லாஹ் ஒருவன் என்பதற்கான அத்தாட்சிகள் ..

## மலக்குகள் பற்றிய நம்பிக்கை .

1 – மலக்குகள் என்றால் யார்? ,.......................
2 – மலக்குகள் பற்றிய நம்பிக்கை என்றால் என்ன ?
அ – அவர்கள் எதனால் படைக்கப்பட்டவர்கள் .
ஆ – அவர்களது எண்ணிக்கை .....................
இ – அவர்களில் சிலரின் பெயர்கள் . ..........…
உ – அவர்களின் பண்புகள் ...................…
ஊ – அவர்களது பண்கள் ......................
எ – அவர்கள் விடயத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன
ஏ – மலக்குகளை நம்புவதால் ஏற்படும் நன்மைகள் .

## வேதங்களை நம்புதல் .

1 – வேத நம்பிக்கை என்றால் என்ன ? ..................
2 – அதை நம்ப வேண்டியதன் அவசியம் . ............
3 – மனிதனுக்கு வேதங்களின் அவசியம் ...............
4 – வேதங்களை நம்பும் விதம் .........................
5 – முன்னைய வேதங்களை ஏற்பதன் அவசியம் .......
6 – இஸ்லாம் அங்கீகரித்த வேதங்கள் .............

## நபி மார்களை நம்புதல் .

1 – நபிமார்களை நம்புவதென்றால் என்ன ?.............
2 – நபித்துவம் என்றால் என்ன ? ........................
3 – நபிமார்கள் அனுப்பப்படுவதன் அவசியம் ............
4 – நபி மார்களின் பணிகள் ..............................
5 – இஸ்லாமே அனைத்து நபிமார்களும் போதித்த மார்க்கமாகும் ....................................
6 – நபிமார்களும் மறைவானவற்றை அறிய முடியாத நம் போன்ற மனிதர்களே ...........................
7 – அவர்கள் பாவம் புரிவதை விட்டும் காக்கப்பட்டவர்கள் .................................
8 – நபிமார்களின் எண்ணிக்கை ........................
9 – நபிமாகளின் அற்புதங்கள் ..............................
10 – எமது நபி முஹம்மத் ( ஸல்) அவர்களை நம்புதல் .

## மறுமை பற்றிய நம்பிக்கை ...

1 – மறுமை பற்றிய நம்பிக்கை யாது ? ...................
2 – மறுமையை நம்பும் முறை ...............................
3 – அதை நம்புவதால் ஏற்படும் நன்மைகள் ...............

## விதி பற்றிய நம்பிக்கை .

1 – விதி என்றால் என்ன ? அதன் அவசியம் என்ன ?..........
2 – விதியின் வகைகள்.................................
3 – விதியின் படித்தரங்கள் ...........................
4 – விதி பற்றிய முன்னோரின் நம்பிக்கை ...................
5 – மனிதனின் செயற்பாடுகளும் விதியும் ...............

6 – இறைவனின் படைப்பும் மனிதனின் செயலும் .........
7 – விதி விடயத்தில் மனிதனின் கடமை ................
8 – விதியை மனதாறப் பொருந்திக் கொள்ளல் ..........
9 – ஹிதாயத்தின் வகைகள் ............................
10 – அல்லாஹ்வின் நாட்டமும் அதன் வகைகளும் .......
11 – கழா – விதியை மாற்றும் காரணிகள் ................
12 – விதி அல்லாஹ்வின் ரகசியமாகும் ...................
13 – விதி மீது பழி போடுதல் கூடாது ......................
14 – குாரண காரியங்களை எடுத்து நடத்தல் .............
15 – விதியை மறுத்தவயின் நிலைப்பாடு ...................
16 – விதியை நம்புவதால் ஏற்படும் நன்மைகள் .............

# முடிவுரை

ஈமானிய கடமைகள் எனும் இந்த நூலை தமிழில் மொழி பெயர்க்க எனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் புகழ்கின்றேன் . இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் முழுக்க முழுக்க அல் குர்ஆன் அல் ஹதீதைத் தழுவியவைகளே என உறுதி கூறுகின்றேன் .

வல்ல அல்லாஹ் எம்மனைவருக்கு இஸ்லாத்தை நன்கு படித்து அதன் படி எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள எம் அனைவருக்கும் அருள் பாலிப்பானாக.

ஆமீன் .